
A.T.R 387
963

உ

# பன்னிரு திருமுறை மலர்



## திருமுறைக் கழகம்

வட்டுக்கிழக்கு — சித்தன்கேணி

# சிவசக்தி மில்ஸ்

அரிசி பருப்பு ஆலேக்காரர்கள்

மினுவாங்கொட ரோட்,

ஏகல; ஜா எல.

தந்தி : சிவசக்தி தொலே பேசி எண் : 394

# SIVASAKTHY MILLS

*Prop.* K. ARUMUGAM

**RICE & DHALL MILLERS**

Minuwangoda Road,

**EKALA; JA ELA.**

T'PONE: 394 T'GRAM. "SIVASAKTHY"

*For Milling:*

- ★ No. 1 Lanka Milchard,
- ★ Naddu Rice
- ★ Best Samba
- ★ Kora Rice and
- ★ Dhall of all kinds
- ★ Also Manure Manufacturers.

★ ★ ★ ★ ★ BRANCHES: ★ ★ ★ ★ ★

**K. ARUMUGAM & COMPANY**
*No. 177, 5th Cross Street,*
**Colombo 11.** *T'Phone : 21429.*

**SIVASAKTHY TRADERS**
*No. 33, Old Moor Street,*
**Colombo 12.** *T'Pone : 32913.*

உ
சிவமயம்

கழக வெளியீடு இல. 2

# பன்னிரு திருமுறை மலர்

*மலர் ஆசிரியர்*

**பண்டிதர் த. சுப்பிரமணியன்**

*

வட்டுக்கிழக்கு - சித்தன்கேணி

**திருமுறைக் கழகம்**

கீலக - தை மீ 20-ம் நாள் 2-2-1969.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## சமர்ப்பணம்

*உலகம் ஈடேறவும் சைவம் தழைக்கவும், திருநாரையூரிலேயுள்ள பொல்லாப்பிள்ளையாரின் திருவருளினாலே ஓதாதுணர்ந்த நம்பியாண்டார் நம்பி; அபயகுலசேகர சோழ மகாராசாவின் வேண்டுகோட்படி திருமுறைகளை வகுத்தருளினார்:*

*பொல்லாப்பிள்ளையாருடைய திருவருளினாலே தோன்றிய இத்தண்ணார் திருமுறை மலரைச் சித்தன் கேணி நற்பதியிலெழுந்தருளி அருள் பாலிக்கும் ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையாரின் பொன்னார் திருவடியிணைக்குச் சமர்ப்பிக்கின்றோம்.*

சுபம்.

# பழங்கால நார் மெத்தையை விட்டெறிந்து.....

# வாங்குக ஒரு புதிய

# சிலீப்-ஈஸ்

## ★ றப்பர்சேர் தும்பு மெத்தை ★

★ பாரம் குறைவானது

★ 'குளு குளு' தன்மை யுடையது.

★ பூச்சிகளை அணுக வொட்டாது தடுப்பது.

★ உடல் நலத்துக்கு உகந்தது.

★ சுய உருவம் மாறுதது.

★ நீண்ட காலம் பாவிக்கக் கூடியது.

—: விபரங்களுக்கு :—

**மெர்க்கண்டைல் கார்பரேஷன் லிமிடெட்,**

**263, செட்டியார் தெரு, : : கொழும்பு - 11.**

தொலைபேசி : 31913.

# தமிழ் உலகம்




ஆ. நடராசா

50, புதுச் செட்டித்தெரு,

கொழும்பு - 13.

சிவமயம்

# திருமுறைமலர் வாழ்த்து

*( செந்தமிழ்ச் சிரோமணி, பண்டித வித்துவான் : க. கி. நடராஜன் B. O. L., Dip. Ed. அவர்கள் )*

## ஆசிரியப்பா

இச்சக மதனில் ஏவருஞ் சுவைத்து
மெச்சுதமிழ்ப் புலவன் கச்சி யப்பனே
முறையென முன்னே மொழிந்தனன் நூலே;
முறையினுக் கொப்பது முறையே யன்றிப்
பிறிதுமொன் றுண்டெனப் பேசவும் படுமோ?
கண்டார்ப் பிணிக்குங் கவினிய தன்மையும்
ஒண்டமிழ்த் தேனைப் பிலிற்றும் ஒண்மையும்
என்றும் உலவாப் பேரின்பம் ஈவதும்
முறையெனக் கண்டே, திருமுறை என்றனர்;
திருமுறைச் சிறப்புச் செப்பவும் இனிக்கும்;
திருமுறை யிலக்கியம் ஒருமுறை ஓதினும்
உருகுமே யுள்ளம்; பெருகுமே யின்பம்;
திருமுறை யிலக்கியஞ் செந்தமிழ்ப் பெட்டகம்;
வெம்பந்த மொழிக்கும் சம்பந்தப் பிள்ளைதம்
அம்பவள வாயால் அளித்தபைந் தமிழும்,
ஒப்பிலா அன்புக் கடலென வுதித்த
அப்பர்தாம் அருளிய அருந்தமிழ்ப் பனுவலும்,
வந்தொரு தோழமை நெறியினில் மகிழ்ந்த
சுந்தரப் பெருமான் தந்தசெந் தமிழும்,
மொழிக்கு மொழிதித் திக்கும் முதுதமிழ்.
ஆதலா லன்றே, மூதறி வுடையாள்
எவ்வமில் மேன்மை ஔவைப் பிராட்டியும்
"மூவர் தமிழெ"ன ஆவலின் மொழிந்தனள்;
கான்வளர் கன்னலும் அமிழ்தமுங் கைப்ப
ஊனையும் உயிரையும் ஒருங்குடன் பிணித்துத்
தேனெனப் பாலெனத் தெவிட்டா தினிக்குந்
திருவா சகம்போ லொருவா சகமும்
பொருட்கோவை யென்னுந் திருக்கோ வையும்போல்
அருட்பொலி வோங்கும் அணிதமி ழுண்டுகொல்!

ஞாலம் புகழ்தமி ழாகமம் நவின்ற
மூலன் தந்த தமிழ்மூ வாயிரம்
போலுமொரா் தனிநூல் புவனியில் உண்டுகொல்!
ஆரையு முருக்குங் காரைக்கா லம்மையின்
வீரமும் ஈரமும் வியனுறக் கலந்த
அற்புதத் தமிழும், முற்றத் துறந்த
பட்டினத் தடிகளின் தட்பமார் தமிழும்,
படிப்பவர் மனமொரு பாடாண மாயினுந்
துடித்தெழுந் துருகச் செய்யும் பத்திப்
பெருக்குஞ் சிவநெறிச் செருக்குஞ் செந்தமிழ்த்
தருக்கும் நிறைந்த தண்டமிழ்க் காவியம்,
பெரியர் புராணம், அரிய திருமுறை,
வரலாற்றுத் தமிழ்நூல் மாணவே றுண்டுகொல்!
கொடுவெயி லதனிற் சுடுமணல் வழியிற்
பலகாத தூரம் பதைப்புடன் நடந்து
நிலவுடல் வாடி நீள்பசி மிக்கவன்
ஒருவனைப் பார்த்தங்(கு) உண்ணெகிழ் கருணையன்
பெரியவ னொருவன் பெருகிய சுவைசேர்
நறுங்கனி பலப்பல நல்லபொற் றட்டினிற்
பரப்பி நீட்டிய பண்பினி லன்றோ
பிறவிப் பெருவெயில் பெரிதும் வாட்டக்
களைத்துக் கடவுட் பசியொடு வருவோர்
பிழைப்பதற் கெந்தப் பெரியரைக் கொள்வீரோ
அவர்தமைக் கொள்கென அரும்பெருந் தொண்டர்
புராணம் என்னும் பொற்றட்டை நீட்டினன்
வாக்கினிற் சிறந்த சேக்கிழார் பெருமான்.
இன்னணம் பற்பல பொன்னிகர் பனுவல்கள்
தன்னகத் துள்ள தனிப்பெருந் திருமுறை
யிலக்கியம் போலவே றிலக்கியம் உண்டுகொல்!
அளப்பருஞ் சிறப்புடை அத்திரு முறையின்
அருமையும் பெருமையும் அறிந்தே பன்னிரு
திருவுடைச் செல்வர் தெரிக்க முயன்றனர்;
திருமுறைக் கழகம் சிவமணங் கமழ
அரிதினோர் மலராய் வெளியிட் டளித்தது;
அதனை,
அன்புடன் கொள்ளுதும்; இன்புடன் ஏத்துதும்;
வாழுக திருமுறைக் கழகமா நிலத்தில்;
வாழுக திருமுறை மலரும் மணத்துடன்;
வாழுக சைவமுந் தமிழுமாண் புடனே.

உ

சிவமயம்

# முன்னுரை

எங்கள் சமயம் சைவ சமயம், சைவம் சிவத்தொடு சம்பந்தமானது.

சிவம் இத்தன்மையன் எனவும், சமய ஒழுக்க நெறிமுறைகள் இவை யெனவும் விளக்கப் பல நூல்கள் தோன்றின.

அவற்றுட் பன்னிருதிருமுறைகள் மிக மிக மேலானவை.

சமய உண்மைகளை உணர்ந்து ஒழுகி மக்கள் நன்னிலை யெய்த வேண்டு மென்ற நோக்குடனே இயன்ற பணிகளைப் புரிந்து வருகின்றது எமது கழகம்.

மேலைத்தேய நாகரிக மோகங்கொண்டு இடாம்பிகமான-படாடோப வாழ்வைவிரும்பி இயங்கும் இன்றைய உலகமக்களின் இளைஞர்களின் உள்ளத்திலே சமயசிந்தனை-இறையுணர்ச்சியென்பன வரண்டு ஒரு தனி உலோகாயத உணர்ச்சிதான் திரண்டு காணப்படுகின்றது.

உலகத்தை அழிவுப்பாதையிலிருந்து ஆக்கவழியிற் செலுத்திப் பாதுகாக்க ஆத்மீக வளர்ச்சி தேவை. அவசியந் தேவை. ஏன்?

சமுதாயத்திலே இந்நாட்களிலே நிம்மதியான வாழ்வு இல்லை. எங்கு நோக்கினும் அவசரம்-பரபரப்பு. புதுமையில் அங்கலாய்ப்பு. கீழ்மை நிறை சுகவாழ்வில், சொகுசாக வாழ்ந்து கொள்ள வேண்டும்-வாழலாம்-இன்பம்காணலாம் என்ற இழியியல் மனப்போக்கு.

இந்த நிலைமை நீங்கி நன்னிலை யெய்தவேண்டு மென்ற பெரு நோக்கோடு இறையுணர்சி பெறச்செய்யும் பொருட்டு மலர்வது தான் எமது கழகத்தின் இரண்டாவது வெளியீடான இப்பன்னிரு திருமுறை மலர்.

பல்லாயிரக்கணக்கில் பல்வேறு கோணங்களிலிருந்து பல வேறு வகையான மலர்கள் வெளிவந்து கொண்டிருக்கும் இந்நாளில் இத்தகைய ஒரு மலரைத் திருவருள் துணைகொண்டு வெளியிடுவதில் நாம் மிகவும் பெருமைப்படுகின்றோம்.

இன்று ஆங்கிலங் கற்று அரசாங்கத்தில் அரிய உயர்பதவிகளை வகிப்பவர்கள்தான், சமய போதகர்கள், மதத் தலைவர்கள், வழி காட்டிகள் என்று தங்கள் அதிகாரசத்தியைக் கொண்டு நின்று எங்கள் சமயத்தை அழிக்கும் தீய சக்தியாகின்றனர்.

இந்நிலையில், நம்மவர்களை நாம் மதிக்கவேண்டும்; பாராட்ட வேண்டும்; சமய உண்மைகளை அறியச்செய்தல்வேண்டும் என்ற நோக்குடன் நம் நாட்டுச் சமய அறிஞர்களிடம் தொடர்புகொண் டோம். அவர்கள் மன முவந்து கட்டுரைகளை உதவினுர்கள்.

நம் நாட்டுப் பெரியார்களும், அறிஞர்கள் பலரும் ஆசியுரை வழங்கி ஊக்கம் அளித்தார்கள்.

மலரைப் பார்வையிட்டு வாழ்த்தி வைத்தார்கள் செந்தமிழ்ச் சிரோமணி பண்டித வித்துவான் க. கி. நடராஜன் அவர்கள். அணிந்துரை தந்து அன்புசெய்தார்கள், நவாலியூர் பண்டிதர் சோ. இளமுருகனுர் அவர்கள். இன்று படித்து நாளை வீசும் வெறும் மலர்கள் போலாது என்றும் நின்று நிலைத்து இன்ப மளிக்கும் ஒரு அன்புமலர் இது.

சமயநெறி நந்தவன மலர்களினுள்ளே தோன்றிய நறுமலர். அழகும் மணமும் ஒருங்கே அமைந்த தெய்வீக மலர். இத்தெய் வீக மலரை மணந்து தெய்வீக வாழ்வு வாழ்வோமாக.

" முன்னவனே முன்னின்ருல்
முடியாத பொருளுளதோ ? "

இம்மலர் தோன்றுதற்குத் தோன்ருத் துணையாய் நின்று அருள்பாலித்த எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமற் சொன்ன பரம்பொருளாகிய இறைவனை வாழ்த்தி வணங்கி அமைகின்ருேம்.

வணக்கம்.

சுபம்

திருமுறைக் கழகம்

# அணிந்துரை

**பண்டிதர் திரு. சோ. இளமுருகனர் அவர்கள்**

மெய்ந்நூற் பொருளாம் விளங்குதமிழ் மந்திரமாந்
தெய்வத் திருமுறைக்குச் சீர்வாய்ந்த — கைந்நூலாய்ப்
போற்றக் கமழ்ந்ததே பொற்கழகப் பொய்கைதரும்
மாற்றறியாத் தெய்வ மலர்.

சோ. இளமுருகனர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# பொருளடக்கம்


1. சமர்ப்பணம்

2. திருமுறைமலர் வாழ்த்து

3. முன்னுரை

4. அணிந்துரை

5. ஆசியுரைகள்

6. கழக அறிக்கை

7. வரவேற்புரை

8. திருமுறைப்பெருமை

9. கழக உறுப்பினர்

10. நன்றியுரை

11. நால்வர் பாடலின் அற்புதங்கள் 1

12. பன்னிரு திருமுறைகள் 2

13. முதலாந் திருமுறை 4
வித்துவான் க. கார்த்திகேசு. பீ. ஏ. லண்டன்

14. இரண்டாந் திருமுறை 7
ப்ரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் பி. ஏ. ஒனர்ஸ்

15. மூன்றாந் திருமுறை 10
பண்டிதர் சத்தியதேவி துரைசிங்கம்

16. நாலாந் திருமுறை 14
திரு. மு. மயில்வாகனம்

17. ஐந்தாந் திருமுறை 16
வித்துவான், சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை பீ. ஏ.

18. ஆறாந்திருமுறை 21
பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

19. ஏழாந் திருமுறை அல்லது சுந்தரதத்துவம் 24
திரு. இ. கந்தையா பீ. ஏ.

20. எட்டாந் திருமுறை மணிவாசகர் மணிவார்த்தை 28
பண்டிதர் வித்துவான் சி. சரவணமுத்து

21. ஒன்பதாந் திருமுறை 33
திரு. சி. சிவகுருநாதன் எம். ஏ.

22. பத்தாந் திருமுறை 37
அருள்மொழியரசு திருமுருக கிருபானதவாரியார்

23. பதினோராந் திருமுறை 40
பண்டிதர் மு. கந்தையா பீ. ஏ.

24. பன்னிரு திருமுறை பாடியவர் திருநாமம் 44
அருட்கவி சீ. விநாசித்தம்பி

25. பன்னிரண்டாந் திருமுறை பெரியபுராணம் 45
வித்துவான் பொன் கந்தசாமி

உ
சிவமயம்

# ஆசியுரைகள்

காஞ்சிபுரம் சித்தாந்த ஞானபானு

## உயர்திரு. க. வச்சிரவேல்முதலியார் அவர்கள்

உலகத்தில் சிறந்த பிறப்பெடுத்த மக்கள் தம்மையும் தம் முடைய தலைவனுகிய முதல்வனையும் உணர்ந்து நன்மை அடைதற் குரியர். அதற்குத் துணைபுரியவல்ல ஒப்புயர்வற்ற அருள் நூல்கள் திருமுறைகளேயாகும். அவை தேவாரம், திருவாசகம் முதலியன.

இவை உயர்ந்த கடவுள் அனுபவ உண்மைகளின் விளக்கங் களாக உள்ளவை. வேதாந்தம் எனப்படும் உபநிடதங்களின் முடிந்த ஆழ்ந்த நுண்ணிய பொருள்களை ஆகம ஞான பாதத் திற்கு மாறுபடாத வகையில் கொண்டு நிற்பவை இவை. ஆதலால் இவற்றை உயர்ந்தோர் தமிழ் மறைகள் எனப் போற்றிப்பாராட்டி வருவாராயினர். இவற்றை அன்போடு நியமமாக ஓதி வருபவர்கள் மன அமைதியும் உள்ளுணர்வும் பேரன்பும் பெருகப் பெற்றுச் சிவனது பலத்தை எடுத்த பிறப்பிலே எய்தப் பெறுதல் உறுதி. இம்மை மறுமைப் பயன்களையும் வேண்டிய வேண்டியாங்கு எய்தி இன்புறுவர்.

இங்ஙனம் நம்மனோர் திருமுறைகளின் பொருள் நிலையினையும் உயர்வினையும் எளிதின் உணர்ந்து அவற்றில் தங்களுடைய உணர் வைச் செலுத்துதற்குத் துணையாக இருக்கும்படி இந்நூலின்கண் ஒவ்வொரு திருமுறையைப் பற்றியும் ஒவ்வொரு விளக்க ஆய் வுரை இத் தொகுப்பில் இடம் பெறுகின்றது. இவற்றால் மக்கள் அக இருள் நீங்கிச் செம்பொருள் கண்டு எல்லா நன்மைகளும் பெற்று இன்புறுக. இவ்விளக்க உரைகளை எழுதி உதவியுள்ள அறிஞர் பெருமக்களுக்கும் அவற்றைத் தொகுத்து வெளியிடும் தெய்வச் சைவப் பெருமகனுக்கும் கழகத்தினருக்கும் இறைவன் அருள் பாலிப்பது திண்ணம்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

இங்ஙனம்
க. வச்சிரவேல் முதலியார்
காஞ்சிபுரம்

யாழ்ப்பாணம்
1-6-67

உ

மகாகணபதி துணை

# சிவஸ்ரீ. வை. மு. குமாரசுவாமிக்குருக்கள் அவர்கள்

ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தானம், சித்தன்கேணி.

மக்களாக இவ்வுலகிலே இப்போது பிறந்துள்ளோம். இப்பிறப்பிலே எத்தனையோ துன்பங்களையும் இன்பங்களையும் பார்க்கிறோம். இன்பந் தான் வேண்டுவது. துன்பம் விருப்பில்லாதது. ஆனால் இவ்விரண்டும் கலந்து கலந்தும், மாறி மாறியும் வந்து, இன்பம் ஒன்றே தான் வேண்டும். துன்பமே கூடாது நினைவுக்கு நம்மை இழுத்துச் செல்லுகின்றன. நம்மால் இந்த இரண்டையும் மாற்றி அமைக்க முடியவில்லை. ஆகையால் நமக்கு மேற்பட்ட சத்தி ஒன்று நம்மை ஊக்குவிக்கிறது என்று தெரியலாம். அந்த ஒன்று எது? என ஆராய்ந்து அதனைத் திருவருள் என்று ஆன்றோர் அறிவுறுத்துகின்றனர். அத்திருவருளை அடைய, ஓதிப் பயனடையச் சித்தன்கேணித் திருமுறைக் கழகம் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொண்டுகள் பல புரிந்து வருகின்றது. அக்கழகத்தின் சீரிய பணிகள் மலர்கின்றன. கழகம் வகுத்துத் தந்தது இப்பன்னிரு திருமுறை மலராகும். அம்மலரை எல்லோரும் ஏற்றுப் பயன் பெறுவதே நம் கடன். கழகத்தின் முயற்சியைச் சைவ உலகம் நன்கு அறியும். பொய்யாம் பொருட்பயனையே பெரிதென எண்ணி உலகம் அந்தரத்தில் ஆழாது; மெய்யாம் திருமுறையின் பயனைத் தெளிந்து உணர்ந்து சிறக்க வேண்டுமாக. ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையாரின் அடி மலர்களை வாழ்த்துகின்றேன். திருவருள் நெறி நிற்க.

*சித்தன்கேணி*
12 . 1 . 69

இங்ஙனம்
சிவஸ்ரீ. வை. மு. குமாரசுவாமிக்குருக்கள்

உ

முருகன் துணை

காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீனப்
பண்ணிசைப் புலவர்,
தேவார இன்னிசைச் செல்வர்,
தேவாரமணி, தமிழிசைமணி,

## P. A. S. இராஜசேகரன்

**அவர்கள்**

(98, அரசடிவீதி, யாழ்ப்பாணம்.)

*திருமுறைக் கழகம் சிறப்பாக வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றேன். திருமுறைகளையும் தேவாரப் பாடல்களையும் சிறப்புற நடத்தவும், நாடெங்கும் சைவம் பரப்பவும் திருமுறைக் கழகம் சிறந்தோங்கி வளர்க! வாழ்க!!*

11. 1. 69 P. A. S. இராஜசேகரன்

உ

சிவமயம்

# விநாயகர் முன்னிற்க

**T. RAMAJAYAM**

Tele { gram: **PHONED** phone: 250

Pussettenne Estate,

**GAMPOLA.**

எமது சைவசமயம் உலகப் பெருஞ்சமயம். அது சிவபெருமானை முழுமுதற் பரம்பொருளாகக் கொண்டது, பதி, பசு, பாசம் என்ற முப்பெரும் உண்மையை உடையது. விபூதி, உருத்திராக்கம் முதலான சிவசின்னங்கள் சைவசமயத்திற்குள்ள பெருஞ் சிறப்புக்களாகும்.

சைவசமயத்தவர் ஒவ்வொருவரும் இவற்றைக் குறிக்கோளாகக்கொண்டு வாழ்ந்து ஈடேறவேண்டும். அதற்கு உறுதுணையாய் விளங்குவன சமயாசாரியர்கள் அருளிய பன்னிருதிருமுறைகளும், பதினன்கு சித்தாந்த சாத்திரங்களுமேயாகும். இவற்றை உணர்ந்து இறைவன் திருவடிப்பேற்றைப் பெறுதலே எமது பிறவியின் நோக்கமாகும்.

திருமுறைக்கழகம் இத்தகைய நற்பணிகளை மேற்கொண்டு கடந்த பல ஆண்டுகளாக எமது கிராமத்தின் இளஞ்சந்ததியினரின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் நல்லதொண்டு ஆற்றி வருகின்றது.

அறிஞர்கள், பெரியோர்களுடைய கருத்துக்களைத் தொகுத்துப் பன்னிருதிருமுறைமலர் என்னும் நூலை ஷைகழகம் வெளியிட முன்வந்தமைபற்றிப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இத்தகைய நன்முயற்சிகள் மேலும் வளர முன்னின்று நடத்தும் திருவாளர்: பண்டிதர். த. சுப்பிரமணியம் அவர்கட்கும், ஏனையோர்க்கும் எமது பாராட்டைத் தெரிவித்துக்கொள்வதுடன் இப்படியான நல்லதொண்டுகள் நம்கிராமத்தில் இயங்குவது எதிர்கால நன்மைக்கு அறிகுறியாகும். இதற்கு அனைவரும் ஆதரவளித்துச் சைவமும் தமிழும் தழைத்தோங்க எல்லாம் வல்ல மகாகணபதிப்பிள்ளையார் முன்னின்று அருள் பாலிப்பாராக.

சுபம்.

திரு: இராமஜெயம்.

சித்தன் கேணி
15-1-69.

ஓம்

## வழக்கறிஞர் திரு: மு. க. சுப்பிரமணியம் அவர்கள்

### சித்தன்கேணி

திருவருளின் சித்தம், திருமுறைத் தத்துவங்களை நன்கு அறியாத அடியேனும், என்கருத்தைத் திருமுறைக் கழகத்தாரின் இதழிற் பதிப்பிக்க வேண்டுமென்பது, பிழைகளிருப்பின் மன்னிக்கவும்.

இளமையில் திருமுறைகளை ஓதுவதற்கும், ஓதக் கேட்பதற்கும் சந்தர்ப்பங்கள் எனக்குக் குறைவாயிருந்தும், இவற்றின் தத்துவத்தில்—உண்மையின் ஒரு பகுதியைச் சமீப காலத்தில் நோய்வாய்ப்பட்டிருக்கும்பொழுது உணர்ந்தேன்.

திருமுறைகளிற் சிலவற்றை உணர்ந்து ஓதும்போது, எம் மருந்துக்கும், புத்திக்கும் மேற்பட்டதான மனோதைரியத்தையும், ஆறுதலையும், இன்பத்தையும் அளிப்பதை நன்கு உணர்ந்தேன்.

எனது விருப்பம் திருமுறைக் கழகத்தார் திருமுறைகளிலுள்ள தத்துவஞானத்தை விளக்க ஒரு வகுப்பு வாரத்துக்கோர் முறை அல்லது மாதத்திற்கோர் முறையாதல் வைத்தல் நன்று என்பது.

திருமுறைகளை ஓதுபவர்கள் கேட்பவர்கள் அவற்றின் கருத்தை உணர்ந்திருந்தாற்றான், உள்ளங்களைத் தூய்மைப்படுத்தவும், வஞ்சனை, பொறாமை, லோபம் ஆகிய குணங்களை அகற்றித் தூய சிந்தனைகள் உள்ளத்தில் எழச்செய்யவும் பயன்படும். சமுதாயத்தின் நலன் ஒவ்வொரு மனிதனின் மனதில் எழும் நற்சிந்தனைகளிற்றான் தங்கியுள்ளது.

திருமுறைக் கழகத்தாரும் கழகத்தை இயக்குவிப்பாரும் இப்பொழுது செய்துவரும் சேவைக்கு நன்றி. இன்னும் மேற்காட்டிய பணியையுஞ் செய்யத் திருவருள் பாலிப்பதாக.

சுபம்.

மு. க. சுப்பிரமணியம்.

"நீதி இல்லம்"
சித்தன்கேணி
19-1-69.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்
நல்லூர், யாழ்ப்பாணம். (இலங்கை)

தெய்வத் திருமுறைகளைப் போற்றும் சிறந்த நோக்கத்துடன் அமைந்த வட்டுக்-கிழக்குச் சித்தன்கேணித் திருமுறைக் கழகத்தின் சேவை பாராட்டுதற்குரியது. சமய உணர்ச்சி இளம் உள்ளங்களில், குன்றும் இக்காலத்தில் மாணவ மாணவிகளைச் சமயநெறியில் ஈடுபடுத்தித் திருமுறைகளைப் பயிலும்படி செய்வதுடன், அவ்வப்போது சமய சம்பந்தமான மலர்களை வெளியிட்டு வருகின்ற இக்கழகத்தின் சேவை மிகவும் பாராட்டுதற்குரியது. இம்முறை இக்கழகத்தினர் வெளியிடும் பன்னிரு திருமுறைமலர் எல்லாவகையிலும் சிறப்புற்றுச் சிவானந்தத் தேன் ததும்பும் அருள்மலராக மிளிர எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

இத்தகைய கழகத்தை உருவாக்கிய சித்தன்கேணி வாசியாகிய திருவருட்செல்வர் திருவாளர் சுப்பிரமணியம் கந்தையா யே. பி. (J. P.) அவர்களதும், பாரியார் திருமதி க. அன்னலட்சுமி அம்மையார் அவர்களதும் தூயகருத்தை இன்று திருவருள் நிறைவேற வைத்ததோடல்லாது, தகுந்த அருட்பணியாற்றும் வல்லுநர்களையும் ஈடுபடும்படி செய்திருப்பது கழகத்தின் எதிர்காலம் சிறப்புறும் என்பதற்குச் சான்று பகர்வதுபோல் அமைந்துள்ளது.

ஈழத்தில் முதன்முதலாக இத்தகைய ஒரு பன்னிருதிருமுறை மலர் உருவாகின்றது. இதைப் பெற்றோர்கள், பாக்கியசாலிகள், ஒவ்வோர் இல்லத்திலும் இம்மலர் சிவமணங் கமழப் பூசிக்கப்படவேண்டியது. ஆகவே, சைவப்பெருமக்கள் பயன் பெறுவாராக. கழகத்தின் சேவைகள் மேலோங்க ஞானசம்பந்தப்பெருமான் திருவடி சிரமேற்கொண்டு ஆசீர்வதிக்கின்றோம்.

'ஞாலம் நின்புகழே ஆகவேண்டும்'

ஸ்ரீமத் ஸ்வாமிநாதத்தம்பிரான்

நல்லூர்,
22—1—69.

சிவமயம்

# கழக அறிக்கை

பெரியோர்களே!

வணக்கம். கடந்த நான்கு ஆண்டுகளாக எமது கழகம் ஆற்றிய செயல்களைத் தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

ஒவ்வொரு போயா தினத்தின் முதல் நாளிலும் பெரியபுராணச் சொற் பொழிவு, சமயபாடப் போதனை நிகழும். சங்கீத பூஷணம் திரு வ. உருத்திரன் அவர்கள் பண்ணோடு கழகத்தினருக்கு இசை பயிற்றிவருகின்றார் அவ்வக்காலந்தோறும் சமயாசாரியர் விழாக்கள் சிவராத்திரி, நவராத்திரி, விஜயதசமி, திருவெம்பாவை முதலான விழாக்களை இயன்றவரை நமது கழகம் நன்கு நடாத்தி வருகின்றது.

திருவெம்பாவை, திருவாசகப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பனவற்றைக் காலந்தோறும் நடாத்தி வருகின்றோம். இன்றும் திருமுறைப் போட்டி, பண்ணிசைப் போட்டிகளை நடாத்திப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. கழகத்தின் வெளியீடுகளாக ஆண்டுமலர், பன்னிரு திருமுறைமலர் என்னும் சிறந்த இரண்டு வெளியீடுகளைக் குறுகிய இக்காலத்தில் திருவருள் துணைகொண்டு வெளியிடும் அரிய சாதனையைச் சாதித்துள்ள தென்பதைக் கூறுவதில் மிக மிகப் பெருமையடைகின்றது-

மேலும் ஒவ்வொரு பூரணைத் தினத்திலும் அறிஞர்கள் பெரியார்களை அழைத்துச் சமய விரிவுரைகள், வளர்ந்தோர் வகுப்புக்களை நடாத்தத் திருவருள் கொண்டு தீர்மானித்துள்ளதென்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

இறுதியாகச் "சேர்ந்துழைத்தால் வரும் சக்தி வெள்ளம்," "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கமையத் தாய்மார்கள், பெரியோர்கள், அன்பர்கள், நண்பர்கள் அபிமானிகளின் ஒத்துழைப்பு ஊக்கத்துடன் தொடர்ந்து மேலும் சிறந்து ஓங்கி வளர எல்லாம் வல்ல பெருங்கருணைத் தடங்கடலாகிய பரம் பொருளை வாழ்த்தி வணங்கி அமைகின்றோம்.

வணக்கம். செயலாளர்

சிவமயம்

# வரவேற்புரை

தாய்மார்களே! பெரியோர்களே!

பெருங்கருணைத் தடங் கடலாகிய சிவபரம் பொருளின் திருவருள் துணை கொண்டு - இப்புத்தாண்டிலே எல்லாம் பொங்கிப் பொலிக வென அவனருளாலே அவன்தாள் வணங்கி உங்களை யெல்லாம் வரவேற்பதிற் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

செந்தமிழுக்குஞ் சிவநெறிக்கும் பிறப்பிடமாகக் கொண்ட யாழ்ப்பாணத்தின் மேற் பாகத்திலே நாற்புறமும் ஆலயங்கள் அமைந்து அழகுபொலிந்து விளங்கும் இச்சித்தன்கேணி நற்பதியிலே - பெருவிழாவான இத்திருமுறைவிழாவைக் கொண்டாடும் பொருட்டு இங்கு கூடியுள்ளோம்.

சைவத்தின் பெருமைக்கும் தமிழின் தொன்மைக்கும் 6ம் 7ம் நூற்றுண்டுகளிலே; பல கோணங்களிலுமிருந்து பரசமயங்களினுலே எதிர்ப்புக்கள் தோன்றின என்பதை வரலாறுகள் கூறுகின்றன.

அக்காலத்திலேதான் சமய குரவர்கள் தோன்றி யருளிச் சமணம் முதலான பரசமயங்களின் வீறடக்கி, மெய்ச் சமய மாகிய சைவசமயத்தை நிலைநாட்டி வைத்தனர்.

இதனை அவர்கள் திருவருள் துணைகொண்டு நிகழ்த்திய அற்புதங்களினுலே நாம் அறியக் கூடியதாயுள்ளது.

அவர்களினுலே அருளிச் செய்யப்பட்டு நம்மவர்கள் உய்தியடையும் வண்ணம் கிடைக்கப் பெற்றவைதான் திருமுறைச் செல்வங்கள்.

அடியார் பெருமை, அடியார்கள் இறைவன்மீது கொண்ட அன்பின் பெருமை, அவர்கள் செய்த உபதேசங்கள், அற்புதங்கள்; உள்ளும் புறமும் ஒரு தன்மையராக வாழ்ந்தமை, உறக்கத்திலும் இறை தியானமே உடைமை; விபூதி, உருத்திராக்கம், ஐந்தெழுத்தின் மகிமை முதலான பலவற்றின் தெய்விகத்

தன்மைகள், செயல்கள் யாவும் நிறைந்த மாபெரும் பொக்கிஷ மாகும்.

இவற்றைப் போற்றி வாழ்ந்த நம்சைவ மக்கள், 19ம் நூற்றுண்டில் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல மேலை நாட்டினரின் கிறீஸ்தசமயச் சூருவளியிலே சிக்கி நெறியல்லா நெறியிலே செல்லும் அறியாமையையும், கிறீஸ்தவர்களின் புன்னெறிச் செயலையுங் கண்டு உள்ளம் வெதும்பித் துள்ளி எழுந்து வீறு கொண்டு தொண்டாற்றித் தெய்வச் சைவத்தையும் செந்தமிழ் தன்னையும் பேணிக்காத்து வந்தவர் நல்லை நகர் ஆறுமுக நாவலர் அவர்கள்.

எவ் வெக்காலங்களிற் சைவத்திற்கும் தமிழுக்கும் தீங்கிழைக்கத் தீயசக்திகள் தோன்றினவோ அவ்வக் காலத்தில் அபாய பரிகாரஞ் செய்யப்பட்டுத் தீய சக்திகள் முறியடிக்கப்பட்டுச் சைவம் புத்துயிர் பெற்று வந்தமை தெய்வ சங்கற்பம்.

அதே போன்று இன்றும் எமது சமயத்திற்கும் தமிழுக்கும் பல் வேறு கோணங்களிலிருந்தும் பல தீய சக்திகள் எதிர் நோக்கிவருவதைக் காண்கின்ருேம்.

சைவசமயத்திலே சைவராகப்பிறந்த சமண, புத்த கிறீஸ்தவர்களாலேயே இன்று தீங்குகள் உண்டாகின்றன.

பட்டம், உயர்ந்த பதவி முதலான வற்றில் அமர்ந்து விளங்கும் சமயமறியாத தலைவர்கள் தமது அதிகார மூலம் எங்கள் சமயத்தைத் தங்கள் சமயத்திற் கேற்பத் தாம் விரும்பியவாறு இழுத்துச் செல்ல முனைகின்றனர்.

அன்றியும் உண்மையான சமய நம்பிக்கை, சமய அறிவு, சமய உணர்ச்சி, சமய வாழ்வு என்பன நம் சைவமக்களிடையே இல்லாமையும் கூடக் காரணமாகும்.

நாவலர் பெருமான் தமது வாழ்நாளைச் சைவசமய வளர்ச்சிக்கே அர்ப்பணித்துப் பணியாற்றினுர். சமயம் வளரத் தமிழ் வளரும் என்பது அன்னுரது அடிப்படைக் கொள்கை.

ஒரு கிராமத்தின் சிறப்பு, கலை, கலாச்சாரம் என்பன அக் கிராமத்தில் பிறக்கும் இயக்கங்கள் மன்றங்கள் கழகங்கள் விழாக்கள் முதலான பலவற்றிலேதான் தங்கியுள்ளது என்ருல் மிகையாகாது.

இந்நிலையிற் கடந்த சில ஆண்டுகளாக இயங்கிவரும் எமது கழகம் எடுக்கும் இவ் வைபவத்திற் கலந்து சிறப்பிக்கும் பொருட்டு வந்திருக்கும் பெரியார்களாகிய உங்களையெல்லாம் வரவேற்கும் கடமை எமக்கு உளது.

முதலாவதாக இக் கழகத்தின் இயக்குநராயும், காப்பாளராயும் இருக்கும் திரு சுப்பிரமணியம் கந்தையா J. P. அவர்களையும், பாரியார் அன்னலட்சுமி அவர்களையும் வரவேற்கின்றேன். இவ்வைபவத்திற் தலைமை தாங்கிச் சிறப்புறச் செய்ய வேண்டு மென்று எங்கள் சைவப்புலவர் திரு. த. குமாரசாமிப் பிள்ளை அவர்களைக் கேட்டோம். இன்றைய சைவ உலகின் சிறந்த பெரியாராக விளங்குகின்றார்கள் அவர்கள். சைவத்தைப் பேணிக்காத்து வளர்த்து அருள் தொண்டாற்றி வருகின்றார்கள்.

எங்கள் கழகத்தின் திருமுறை விழாவிற்குத் தலைமை தாங்குவதற்கு மிக மிகத் தகுதியானவர்கள். அவர்களை எமது கழகத்தின் சார்பில் அன்புடன் வருகவென வரவேற்கின்றேன்.

நம் கிராமத்து நற்கருமங்கட் கெல்லாம் ஈடுகொடுத்து ஊக்கமளித்து வரும் திருமதி வள்ளியம்மை குமாரசாமி அவர்களையும் அழைத்திருந்தோம். அவர்களையும் கழகத்தின் சார்பிற் கனிவுடன் வருகவென வரவேற்கின்றேன்.

மற்றும் இவ்விழாவிற் கலந்து கொண்டு விரிவுரைகள், விமரிசனங்கள்; இசையமுதங்கள் நல்கிச் சிறப்பிக்க வந்துள்ள பெரியார்களைக் கழகத்தின் சார்பிலும், எங்கள் கிராமத்தின் சார்பிலும் வருக வருகவென மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

மற்றும் இவ்விழாவிற் கலந்து கொண்டு சிறப்பிக்கத் திரண்டு வந்துள்ள பெரியார்கள் தாய்மார்கள் அனைவரையும் இன்ப அன்புடன் இனிது வருகவென வரவேற்று அமைகின்றேன்.

வணக்கம்

திருமுறைக் கழகத் தலைவி

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பெருமை

உலகத்துக்குக் கருத்தா சிவபெருமான். சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற உண்மை நாயன்மார்களினாலே திருவாய் மலர்ந்தருளப் பெற்றனவாகிய சைவத் திருமுறைகள் பன்னிரண்டு.

இவை வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறனைத் தெரிவிப்பனவாகும். அவை தேவாரம் முதலாகப் பெரியபுராண மெனப்படுந் திருத்தொண்டர் புராணமிறுதியாக வுள்ளன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடியருளிய தேவாரங்கள் அடங்கன்முறை எனவும், மூவர் அடங்கன்முறை எனவும்படும்.

அடங்கன்முறை, பன்னிரு திருமுறை என்றால் என்ன? என்பதை அறியாதவர்கள்கூட இன்று உளர். திருமுறை என்றால் என்ன? என்று கேட்பவர்களும் பலர்.

தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், திருமுகப்பாசுரம் முதலான வற்றைத் திருநாரையூரிலேயுள்ள பொல்லாப்பிள்ளையாரின் அநுக்கிரகத்தைப் பெற்ற நம்பியாண்டார்நம்பி, அபயகுலசேகர மகாராசாவின் வேண்டுதலுக்கமையப் பதினொரு திருமுறைகளாக வகுத்தருளினர்.

திருத்தொண்டர் புராணமெனும் பெரியபுராணம் அநபாய சோழமகாராசா காலத்தில் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்த்தருளப்பட்டது.

இத்திருமுறைகள் நாயன்மார்களினாலே அருளிச்செய்யப்பட்டதாயினும் எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமானே அவர்களை அதிட்டித்துநின்று அவற்றைத் தோற்றுவித்தருளினார். எனவே, அவை இறைவனால் அருளிச் செய்யப்பட்டனவே யாகும்.

"பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமே
நீ யொன்றுஞ் செய்யாமல் நில்"

என்பது திருவருட்பயன். பேய் பிடித்த ஒருவனது வாயிலிருந்து வரும் சொற்களெல்லாம், பேயின் சொற்களேயன்றி அவன் சொற்களாகா. அதேபோன்று சிவபெருமானால் விதிக்கப்பட்ட நாயன்மார் கூறியருளிய திருமுறைகளெல்லாம் சிவபெருமான் அருளியனவேயாகும்.

வெளிநாடுகளிலிருந்தும், நம்நாட்டிலிருந்தும் காலை, மதியம், மாலை நேரங்களிலே புற்றீசல்போன்று கொள்ளை இலாபங் கருதி வெளியாகும் உதவாக்கரைக் கதைகள், இலக்கியங்களையே மிகு ஆர்வத்துடன் இக்காலமக்களும் கல்லூரி மாணவர்களும் பெரும் பாலும் பயில்கின்றனர். சமயத்தைப்பற்றி நினைக்கவோ, சமய நூல்களைத் திருமுறைகளைப் படிப்பதற்கோ அவகாசமில்லை. உதை ஏன்? என்கின்றனர்.

மேலை நாட்டவர்கள் இன்று சந்திரனைக் கட்டி இழுத்துவர முனைகின்றனர். விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது. வளர்ந்தும் மனிதனுக்கு மனஅமைதியைப் பெறமுடியவில்லை. மனிதனுக்கு சமுதாயத்துக்குத் தேவையான மனநிம்மதியை, ஆத்ம இலாபத்தை—தெய்வீக வாழ்வை யளிப்பனதான் திருமுறைச் செல்வங்கள்.

இத்திருமுறைகள் சைவ சமயத்தவர்களின் தனிச்சொத்து. ஆன்மாக்களாகிய எமது பிறவிப்பிணியைத் தீர்த்து வீடுபேற்றை யருளவல்லன இவைகள். புறஇருளை அகற்றி ஒளியைக் கொடுக்குஞ் சூரியன்போல, எம்மகத்துள்ள அஞ்ஞானமாகிய அகஇருளை யகற்றி அருளொளியைக் கொடுப்பன.

எனவே, திருமுறைகளை இடையறாது மெய்யன்புடன் காதலாகிக் கசிந்து ஓதல்வேண்டும். திருமுறைகளை ஓதுதலாம்பயன் அவ்வப் பதிகங்களின் இறுதியிற் கூறப்பட்டுள்ளன.

புன்னெறியதனிற் செல்லும் போக்கினை விலக்கி, மேலாம் திருமுறைகளின் நெறியாகிய நன்னெறியிற் செல்லுதல் வேண்டும். அங்ஙனம் நாம் பின்பற்றி வாழ்ந்துவந்தால் இவ்வுலகவாழ்வில் துன்பமில்லை. பயமில்லை. இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை என்றநிலை நமக்குத் திருவருளினாலே வந்தெய்தும்- மண்ணில் நல்ல வண்ணம் வாழலாகும்.

சுபம்

## For Quality & Perfection

*INSIST ON*

# PAVAN FANS

A Product of

***ELECTRO - MECH INDUSTRIES***

AVAILABLE AT

# SIEDLES CINERADIO

**FRONT STREET, COLOMBO. 11**

---

## NIRMALA JEWELLERS

*Manufacturer of Gold Jewels*

**K. K. S. Road, CHUNNAKAM.**

உத்தரவாதம்
உள்ள
தங்கப்பவுண்
நகைகளுக்கு
சிறந்த
ஸ்தாபனம்



ஓடர்
நகைகள்
உத்தரவா
தத்துடன்
செய்து
கொடுக்கப்படும்.

**நிர்மலா ஜுவல்லர்ஸ்**

**கே. கே. எஸ். ரோட், சுன்னாகம்.**

உரிமை : தா. இராசரத்தினம்

---

*SPACE DONATED*

BY

## STUDIO PRINCESS

**SIR PON RAMANATHAN ROAD.**

**CHUNNAKAM.**

*Prop.* **M. NADATASA**

*Donated by*

# VIJAYA TRADERS

**84. Old Moor Street,**
**COLOMBO.**

*DEALERS IN*

GROCERIES & PROVISIONS Etc.

# S. S. FERNANDO & Co.

**123, 5th Cross Street,**

**COLOMBO.**

TELEPHONE: 22139

*With the best Compliments*

*of*

# S. MUTHUCKUMARU & Bros.

GENERAL RICE MERCHANTS & COMMISSION AGENTS

No. 74, Old Moor Street,

COLOMBO-12.

திருமுறைக் கழகந் திருவுட னோங்கித்
திகழ்ந் தெஞ் ஞான்றுஞ் செழித்துவளர
மங்கல மானவித் தைப்பூச நன்னாளில்
எங்கள் உளங்கனிந்த
வாழ்த்துக்கள் உரியதாகுக.

# E. SITTAMPALAM & Co.

**25, Old Moor Street,**

**COLOMBO—12.**



*Phone*: **5830** *Grams*: **EHKANTHAN**

*"சைவமுந் தமிழும் உய்திட வுவந்து
பெருமறை யாகுந் திருமுறை யதனை
வளர்த்திடுங் கழகம் வளர்பிறை போல
வாழ்க வினிதென வாழ்த்து கின்றேமே.*

# EHKANTHAN TRADERS

*Prop:* G. EHAMPARAM

**Importers & Exporters General Merchants & Commission Agent.**

**190, GAS WORKS STREET,**

**COLOMBO — 11**

*BRANCH — RICE DEPT,*
29. Old Moor Street.

சிவமயம்

## வட்டுக்கிழக்கு - சித்தன்கேணி

# திருமுறைக் கழகம்

## கழக உறுப்பினர்

காப்பாளர்: திரு. சு. கந்தையா J. P. அவர்கள்
தலைவர்: செல்வி. ஏ. தெய்வானைப்பிள்ளை
செயலாளர்: பண்டிதர். த. சுப்பிரமணியம்
பொருளாளர்: செல்வி. நி. நித்தியலட்சுமி
திருமுறை, பண்ணிசையாசிரியர் சங்கீத பூஷணம்: திரு. வ. உருத்திரன்

1. இ. தங்கரத்தினம்
2. ந. யோகராணி
3. சு. உதயகுமாரி
4. இ. யோகரத்தினம்
5. இ. ஜெயலட்சுமி
6. ந. சத்தியபாமா
7. கெ. இராசேஸ்வரி
8. கெ. பரமேஸ்வரி
9. பா. இந்திராதேவி
10. நி. நித்தியலட்சுமி
11. சி. செல்வராணி
12. கா. நிர்மலாதேவி
13. சோ. தனலட்சுமி
14. பா. கங்காதேவி
15. நி. நிமலநாயகி
16. ம. செல்வராணி
17. ச. ரஞ்சினி
18. சு. ஞானநாயகி
19. மா. இந்திரா
20. கு. கோகுலராணி
21. கு. விஜயராணி
22. ம. சந்திரா
23. க. மாதினி.
24. க. பூமகள்
25. மா. பாமா
26. கு. அருந்தவச்செல்வி
27. நி. நாகராணி
28. சு. அருந்தவநாயகி
29. நி. நித்தியகல்யாணி
30. தி. ஜெயதேவி
31. கு. பங்கயவல்லி
32. க. விமலராணி
33. க. சிவயோகராணி
34. செ. ஜெயதேவி
35. இ. பத்மராணி
36. பா. கமலாம்பிகை.
37. நி. நித்தியானந்தன்
38. தெ. காங்கேயன்
39. கா. பரமானந்தன்
40. கா. பூபதிராசா
41. நி. ஏகாம்பரநாதன்
42. நி. நிர்மலானந்தன்
43. ந. கலாநிதி
44. த. சுதாகரன்
45. தெ. கலைமகள்
46. கெ. லோகேஸ்வரி
47. சி. யோகராணி
48. க. இராணிதேவி
49. வீ. பத்திமாதேவி
50. கு. யோகமலர்
51. ச. பத்மாவதி
52. இ. செல்வமலர்
53. ச. இந்திரா
54. பொ. பத்மினி

உ

சிவமயம்

# வட்டுக்கிழக்கு சித்தன்கேணித்
# திருமுறைக் கழகம்

ஷை கழகம் கீலக ஆண்டு தை மாதம் (2-2-69)ல் நடாத்திய போட்டிகளிற் பரிசில் பெற்றவர்களின் விபரம்:

## திருமுறைப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்பிரிவு | 1ம் | பரிசு | செல்வி. | ந. யோகரத்தினம் |
| | 2ம் | ,, | ,, | கெ. பரமேஸ்வரி |
| | 3ம் | ,, | ,, | சி. சிவபதியாம்பாள் |
| மத்தியபிரிவு | 1ம் | ,, | செல்வி. | நி. நிமலநாயகி |
| | 2ம் | ,, | ,, | கெ. லோகேஸ்வரி |
| | 3ம் | ,, | ,, | க. நாகேஸ்வரி |
| கீழ்ப்பிரிவு | 1ம் | ,, | ,, | மா. இந்திரா |
| | 2ம் | ,, | செல்வன் | க. அருணகிரிநாதன் |
| | 3ம் | ,, | செல்வன் | நி. ஏகாம்பரநாதன் |

## பண்ணிசைப் போட்டி

மேற்பிரிவு ஆண்கள்

| | | | |
|---|---|---|---|
| 1ம் | பரிசு | செல்வன். | க. சிவபாலன் |

மேற்பிரிவு பெண்கள்

| | | | |
|---|---|---|---|
| 1ம் | பரிசு | செல்வி. | கெ. இராசேஸ்வரி |
| 2ம் | ,, | ,, | பா. இந்திரா |
| 3ம் | ,, | ,, | ந. யோகரத்தினம் |

மத்தியபிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் | பரிசு | செல்வி | கா. நிர்மலாதேவி |
| 2ம் | பரிசு | ,, | நி. நிமலநாயகி |

கீழ்ப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 1ம் | பரிசு | செல்வி | நி. நித்தியகல்யாணி |
| 2ம் | ,, | செல்வன் | தெ. காங்கேயன் |
| 3ம் | ,, | செல்வி | சு. மஞ்சுளா |

# நன்றியுரை

எமது மனமுவந்த நன்றி

விளம்பர மின்றேல் இந்த மலர் இவ்வளவு அழகு பொலிய மலர்ந்து விளங்குமா? இவை யெல்லாம் அன்பு மலர்ந்து ஆர்வமுடன் வரவேற்று "நாமிருக்கும் போது பயமேன்" என்று இன்புடன் நவின்று விளம்பரம் ஈந்த உண்மை யன்பர்களின் தாராள சிந்தையிலேதான் தங்கி யுள்ளது.

ஆங்காங்கெல்லாம் அகமும் முகமும் மலர்ந்து விளம்ப ரம் உதவிய பெருமக்கள் அனைவருக்கும் எமது அன்பு கனிந்த நன்றியைக் கூறுகின்றோம். ஏன்? கட்டுரைகள் அணிந் துரைகள் ஆசியுரைகள் வாழ்த்துரைகள் விரிவுரைகள் விமர் சனம் செய்தோர்கள் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிச் சிறப்பித் தோர்கள் அனைவருக்கும், கோலாகலமாக இவ்விழா நடை பெற உதவிய அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.

எங்கள் வேண்டுதலுக்கமையச் சமுகமளித்துப் பரிசில் கள் வழங்கி விழாவைப் பரிமளிக்கச் செய்த திருமதி வள்ளியம்மை குமாரசாமி அம்மையார் அவர்களுக்கும் உளங் கனிந்த நன்றி உரியதாகுக.

சைவப்பற்றும் தமிழ் ஆர்வமுங் கொண்ட கொழும்பு மெய்கண்டான் திரு. நா. இரத்தினசபாபதி அவர்கள் மல ரின் அட்டையை அழகு பொலிய அமைத்து வழங்கினார்கள். சுன்னாகம் திருமகள் அழுத்தக அதிபர் திரு மு. சபாரத்தி னம் அவர்கள் சமயகுரவர் படங்களை வர்ணங்களிற் தீட்டி உதவினார்கள். நெருக்கடியான நூற் பிரசுரவேலைகளின் மத் தியிலும் மனமுவந்து குறுகிய காலத்தில் இம்மலரைச் அச்சேற்றி அளித்த ஸ்ரீ லங்கா அச்சக அதிபர் திரு நா. தெய்வேந்திரம் அவர்களுக்கும், அலுவலாளர்களுக்கும் கழகத்தின் சார்பிலும் எமது சார்பிலும் மனமுவந்த நன்றி கூறுகின்றோம்.

இறுதியாக இக்கழகத்தின் வளர்ச்சிக்காக உறுதுணையாய் இருந்து, வேண்டும் உதவிபுரிந்த அனைவருக்குமே எம் மன மார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

சுபம்.

திருமுறைக் கழகம்

# என். வைத்திலிங்கம் அன் கம்பனி

(மட்டுப்படுத்தப்பட்டது)

கொழும்பு. : : : யாழ்ப்பாணம்.

**பிரபல இரும்பு வியாபாரிகளும், தொழில் நுட்ப வல்லுனர்களும், ஒப்பந்தக்காரர்களும்.**

சகல கட்டடங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் பெருந் தொகையில் இறக்குமதி செய்து விற்பனை செய்பவர்களும், மற்றும் "சீமன்ஸ்" நீர் இறைக்கும் இயந்திரம், தோட்டா, கிணற்று வெடி, தார் போன்ற மற்றும் பொருட்களும், எங்களால் தயாரிக்கப்படும் உயர் தர "தோன்" மார்க் முட்கம்பி, முள் ஆணி, இரும்பு, பித்தளை சங்குப்புரி ஆணிகளும் எங்களிடம் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு ஸ்தாபனம்
450, பழைய சோனகதெரு,
கொழும்பு 12.
தொலைபேசி இல:- 33143 - 33144

யாழ்ப்பாண ஸ்தாபனம்
138, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 530

கிளை
38, மூன்றும் குறுக்குத் தெரு,
கொழும்பு 11
தொலைபேசி இல: 27488

தொழில் ஸ்தாபனம்
169, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



# சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

பாவியுங்கள்.

ஈழவள நாட்டிலே எங்குமே கிடைக்கும்

உற்பத்தியாளர்கள்;

## ப. மு. சன்ஸ்

பிரபல கலண்டர் தயாரிப்பாளர்கள்

88, செட்டியார் தெரு. போன்: 22300. கொழும்பு 11.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# நால்வர் பாடலின் அற்புதங்கள்

## திருஞானசம்பந்தர்

*புனலி லேடெதிர் செல்லெனச் செல்லுமே*
*புத்த ஞர்தலை தத்தெனத் தத்துமே*
*கனலி லேடிடப் பச்சென் றிருக்குமே*
*கதவு மாமறைக் காட்டி லடைக்குமே*
*பனையி லாண்பனை பெண்பனை யாகுமே*
*பழைய வென்புபொற் பாவைய தாகுமே*
*சினவ ராவிடந் தீரெனத் தீருமே*
*சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.*

## திருநாவுக்கரசர்

*தலைகொ ணஞ்சமு தாக விளையுமே*
*தழலி னீறு தடாகம தாகுமே*
*கொலைசெய் யானை குனிந்து பணியுமே*
*கூர ராவிடந் தீரெனத் தீருமே*
*கலைகொள் வேதவ னப்பதி தன்னுளே*
*கதவு மீண்டு கடுகத் திறக்குமே*
*அலைகொள் வாரியிற் கல்லு மிதக்குமே*
*அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே.*

## சுந்தரர்

*வெங்க ராவுண்ட பிள்ளையை நல்குமே*
*வெள்ளை வாரண மீதிலி ருத்துமே*
*மங்கை பாகரைத் தூது நடத்துமே*
*மருவி யாறு வழிவிட்டு நிற்குமே*
*செங்க லானது தங்கம தாகுமே*
*திகழு மாற்றிட்ட செம்பொ னளிக்குமே*
*துங்க வாம்பரி சேரற்கு நல்குமே*
*துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே.*

## மாணிக்கவாசகர்

*பெருகும் வையை தனையழைப் பிக்குமே*
*பிரம்ப டிக்குப் பிரான்மேனி கன்றுமே*
*நரியெ லாம்பரி யாக நடத்துமே*
*நாடி மூகை தனைப்பேசு விக்குமே*
*பரிவிற் பிட்டுக்கு மண்சுமப் பிக்குமே*
*பரம னேடெழு தக்கோவை பாடுமே*
*வருகு புத்தரை வாதினில் வெல்லுமே*
*வாத வூரர் வழங்கிய பாடலே.*

திருச்சிற்றம்பலம்

உ
திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறைகள்

பன்னிரு திருமுறைகள் சைவத்திருமுறைகளெனவும்படும். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதல் சேக்கிழார்நாயனர் இறுதியாகவுள்ள 27 மெய்யடியார்கள் இறைவன் திருவருள் பெற்றுப் பாடிய திருவருட்பாடல்கள் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் முதற் பதினெரு திருமுறைகள் 11-ம் நூற்றுண்டில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியினலே வகுக்கப்பட்டன. சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகப் பின்னர்ச் சேர்க்கப்பட்டது.

இப்பன்னிரு திருமுறைகளுள் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்பன சிறப்பானவையாகும். ஆலயங்கள் முதலான இடங்களில் இவற்றை ஓதும்போது இந்த ஒழுங்கு முறை மாருது ஓதுதல்வேண்டும். முறைமாறி ஓதுதலும், இவற்றினிடையே வேறு பாடல்களைப் பாடுதலும் பெருங்குற்றமாகும்.

தேவாரத் திருமுறைகளை அவற்றுக்குரிய பண்ணமையப் பாடுதல் வேண்டும். இவை தமிழ் வேதமெனப் போற்றப்படுவன. பத்தியுடன் ஓதுவார்க்கு மந்திரங்கள்போன்று பயனளிப்பனவாகும்.

பன்னிருதிருமுறைகளும் அவற்றைப் பாடியருளினேர் விபரங்களும்:

**1-ம், 2-ம், 3-ம் திருமுறைகள்:** திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் அருளிய தேவாரப் பதிகங்கள்.

**4-ம், 5-ம், 6-ம் திருமுறைகள்:** திருநாவுக்கரசுநாயனர் பாடி அருளிய தேவாரப் பதிகங்கள்.

**7-ம் திருமுறை:** சுந்தரமூர்த்தி நாயனர் பாடியருளிய தேவாரப் பதிகங்கள்.

**8-ம் திருமுறை:** மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருவாசகமுந் திருக்கோவையாரும்.

**9-ம் திருமுறை;** திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பாவும், சேந்தனர் பாடிய திருப்பல்லாண்டும்.

**திருவிசைப்பாப் பாடியவர்கள்**

1. திருமாளிகைத்தேவர், 2. சேந்தனர், 3. கருவூர்த்தேவர், 4. பூந்துருத்திகாடநம்பி, 5. கண்டராதித்தர், 6. வேணுட்டடிகள், 7. திருவாலி அமுதனர், 8. புருடோத்தம நம்பி, 9 சேதிராயர்.

**10-ந் திருமுறை:** திருமூலநாயனர் பாடிய திருமந்திரம்-

**11-ந் திருமுறை:** திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் பாடிய நாற்பது நூல்களின் தொகுப்பாகும்.

பாடினேரும் நூற்பெயரும்:

1. திருவாலவாயுடையார்
   (அ) திருமுகப்பாசுரம்
2. காரைக்காலம்மையார்
   (அ) திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
   (ஆ) மூத்ததிருப்பதிகம்
   (இ) திருவிரட்டைமணிமாலை
   (ஈ) அற்புதத் திருவந்தாதி

3. ஐயடிகள் காடவர்கோன்:
(அ) சேத்திரத் திருவெண்பா
4. சேரமான்பெருமாணாயனார்
(அ) பொன்வண்ணத்தந்தாதி
(ஆ) திருவாரூர்மும்மணிக்கோவை
(இ) திருக்கைலாயஞானவுலா
5. நக்கீரர்:
(அ) கைலைபாதி காளத்திபாதி அந்தாதி
(ஆ) திருவீங்கோய்மலைஎழுபது
(இ) திருவெழுகூற்றிருக்கை
(ஈ) பெருந்தேவபாணி
(உ) கோபப்பிரசாதம்
(ஊ) கார்எட்டு
(எ) போற்றித்திருக்கலி வெண்பா
(ஏ) திருமுருகாற்றுப்படை
(ஐ) திருக்கண்ணப்பதேவர் திருமறம்
6. கல்லாடர்
(அ) திருக்கண்ணப்பதேவர் திருமறம்
7. கபிலர்
(அ) மூத்தநாயனார்திருவிரட்டை மணிமாலை
(ஆ) சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை
(இ) சிவபெருமான் திருவந்தாதி
8. பரணர்
(அ) சிவபெருமான் திருவந்தாதி
9. இளம்பெருமானடிகள்
(அ) சிவபெருமான் திருமும்மணிக் கோவை
10. அதிராவடிகள்
(அ) மூத்தபிள்ளையார் திருமும் மணிக்கோவை
11. பட்டினத்தடிகள்
(அ) கோயில்நான்மணிமாலை
(ஆ) திருக்கழுமல மும்மணிக் கோவை
(இ) திருவிடைமருதூர் மும்மணிக் கோவை
(ஈ) திருவேகம்பமுடையார் திருவந்தாதி
(உ) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது
12. நம்பியாண்டார்நம்பி
(அ) திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை
(ஆ) கோயில் திருப்பண்ணியர் திருவிருத்தம்
(இ) திருத்தொண்டர்திருவந்தாதி
(ஈ) ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி
(உ) ஆளுடையபிள்ளையார் திருச்சண்பைவிருத்தம்
(ஊ) ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை
(எ) ஆளுடையபிள்ளையார் திருவுலா
(ஏ) ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம்
(ஐ) ஆளுடையபிள்ளையார் திருத்தொகை
(ஒ) திருநாவுக்கரசுநாயனார் திருவேகாதசமாலை.

12-ந் திருமுறை: சேக்கிழார்நாயனார் பாடிய பெரியபுராண மென்னுந் திருத்தொண்டர்புராணம்.

பன்னிரு திருமுறைகளி லடங்கிய செய்யுள்கள் சுமார் 18381 என ஆன்றோர் கணக்கிட்டுள்ளனர்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# முதலாந் திருமுறை

வித்துவான் க. கார்த்திகேசு, பி. ஏ. (லண்டன்) அவர்கள்
விரிவுரையாளர். காட்லிக்கல்லூரி, பருத்தித்துறை.

சைவசமயத்துக்குச் சிறப்பாகவுள்ள நூல்கள் பன்னிருதிருமுறைகள் எனப் படும். இவற்றுளே முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்த மூர்த்திநாயனுர் பாடியவையாகும். இந்த நாயனுர் பாடியவற்றை ஒன்ருகக் கொள்ளாது மூன்ருகப் பிரித்த துக்குக் காரணம்யாது என்று பார்க்க வேண்டும். மூன்று திருமுறைகளும் பொருள் வேறுபாடுடையனவல்ல. ஆனுல் முதலாந் திருமுறைப் பண்கள் மற்றைய இரு திருமுறைப் பண்களி லும் வேறுபாடுடையன. பண்அடிப் படையில் முதலாந் திருமுறை மற் றைய இரு திருமுறைகளிலும் வேறு படும் விதத்தை நான் விளக்க முன்வர வில்லை. பொருளளவில் வேறுபாடுடை யன அல்ல என்பதை மாத்திரஞ் சுட் டிக்காட்டிவிட்டு, முதலாந் திருமுறை யில் வரும் பாடல்கள் நமக்குப் போதிப் பன யாவை என்று ஆராய்வோம்.

"தோடுடைய செவியன்" என்று பாடத் தொடங்கிய போதே திரு ஞானசப்பந்தமூர்த்தி நாயனுர் சைவ சமயத்தைக் கைவிட்டுச் சமண சம யத்தைத் தழுவிய தமிழ்மக்கள், பழையபடி சைவத்தையே நாட வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கினுர். சைவசமயத்தின் சிறப் பேயன்றிச் சமணசமயத்தின் குறை வும் பதிகம்தோறும் வருகின்றன என் பதை நாம் உற்று நோக்க வேண்டும். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் காலத்தவரான திருநாவுக்கரசு நாய ஞரையே சமணசமயம் நெடுநாட் கவர்ந்து வைத்திருக்குஞ் செல்வாக் குப்பெற்றிருந்த தென்பதை நாம் மறந்துபோகலாகாது. நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலந்தொட்டே தமிழ் நாட்டில் சைவசமயம் உலா வவும், அதனைச் சில காலங்களில் நலி யச்செய்த சமணசமயத்தின் சக்தியை நாம் அற்பமாக எண்ணிவிட முடி யாது. இருசமயங்களுக்கிடையிலுள்ள வேறுபாட்டை அறிந்து சமணம், அல்லது அதைப்போன்ற புத்தம் முத லியவற்றுள் அகப்படாமல் இழுத்தற் குரிய ஞானம் வேண்டும். அத்தகைய ஞானத்தை உடையவரானபடியாற் ருன் திருஞானசம்பந்தர் என்ற கார ணப்பெயர் அந்நாயனுருக்குக் கிடைத் தது. இந்த ஞானம் எப்படிப்பட்ட தென்பதை நாம் முதலில் செவ் வனே விளங்கவேண்டும்.

ஆண்டவனிடத்திலே நாம் பக்தி பூண்டிருக்கிருேமென்ற விலாசம் போதாது. அந்தப் பக்தி எவ்வளவு ஆழமென்று பார்க்க ஓர் உரைகல் வேண்டும். அந்த உரைகல் மற்றைய மனிதர்களோடு நாம் என்னமுறையில் வாழுகிருேம் என்பது தான். நம் விருப் பப்படி ஒழுகுவோரில் விருப்பும்;மாருய் நிற்பவரில் வெறுப்புங் காட்டித்தான் பலரும் வாழுகிருேம். ஒருகால் மிகவும் விரும்பப்பட்டவரும் வேருெருவேளை யில் வெறுப்புக்கிலக்காகுகிருர். அவ் வேளைகளில் முன்செய்த உதவிகளை நினைந்து மிகவும் வருந்துவம். கடைசி யில் வாழ்க்கையில் ஒரு பயனுங் காணமாட்டோம். நாம் எல்லாரிடத் தும் விருப்பமோ வெறுப்போ இன் றிச் சமமாகப் பழகுதலை 'இருவினை ஒப்பு' என்று சித்தாந்த நூல்கள் விதந்துகூறும்.

ஊக்கம், உற்சாகம், புத்துணர்ச்சி
இவைகளுக்குத்
தீஞ்சுவைமிக்க
**அண்ணா கோப்பியை**
*அருந்துங்கள்*
பலவருட அனுபவம் மிகுந்தவர்களால்
மின்சார ரோஸ்ரரில் கைபடாமல்
நவீனமுறையில் தயாரிக்கப்பட்டது.
**அண்ணா கோப்பி**
காற்றுப் புகாவண்ணம் அடைக்கப்
பெற்று எல்லா இடங்களிலும்
விற்பனையாகிறது.
**அண்ணா கோப்பி**
*தயாரிப்பாளர்கள்*
**அண்ணா தொழிற்சாலை**
இணுவில்.

"வினாயகம்" நெல்லிரசம்
மட்டுமல்ல
பரிசுப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள
மறந்துவிடாதீர்கள்.
**வினாயகம் இண்டஸ்றீஸ்**
39, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

*With the best Compliments*
*From*
**Free Lanka Industries**
MINUWANGODE.
T. Grams : Kankeyan
895

★ யானை மார்க் கூரைச் சீற்றுகள்
★ யானை மார்க் சீலிங் சீற்றுகள்
★ பல்வேறு இன ஓடுகள்
★ பெயின்ற் வகைகள்
★ சொலிக்கின வகைகள்

அல்கதீன் பைப்புகள் 2", 1½" அளவுகளில்

★ வில்லியஸ் மெஷின் சாமான்கள்
★ B. S. A. மெஷின் சாமான்கள்
★ வூல்சிலி மெஷின் சாமான்கள்
★ சைக்கிள், சைக்கிள் சாமான்கள்

எம்மிடம் விற்பனைக்குத் தயாராகவிருக்கின்றன.

நா. சாம்பசிவம்

காங்கேசன்துறை வீதி, ; : சுன்னாகம்.

*With the best Compliments of*

UNITED MERCHANTS LTD.

PRINTERS & PUBLISHERS,

71, Old Moor Street,

T'phone: 32822 . COLOMBO — 12.

சிறந்த முறையில்! குறைந்த செலவில்

குறித்த நேரத்தில்!

அச்சிட்டுக் கொடுக்கக்கூடிய ஸ்தாபனம்

**இம்பீரியல் அச்சகம்**

கண்ணைக் கவரும் கலர் வேலைகளும் ★ பேரேடு ★ குறிப்பு ★ சிட்டை சகல வேலைகளும் கவனிக்கும் கலைக்கூடம்

சிறந்த அச்சடிப்பு வேலைகளுக்கு உங்களுடைய அடுத்த ஆர்டரை எங்களிடம் ஒப்படையுங்கள்.

## இம்பீரியல் அச்சகம்

கண்டிவீதி - கிளிநொச்சி.

தலைமை ஸ்தாபனம்: ஹட்டன், ஸ்தாபிதம்: 1927

---

# "சுப்பீரியர்"

உங்களுக்குத் தேவையான
சூட்டிங்ஸ், சேட்டிங்ஸ்,
அச்சடி வொயில் சாறிகள்,
கைத்தறி சாறிகள்,
பட்டர் நைலோன், நைலெக்ஸ்
ஜோர்ச்சட் சாறி வகைகள்
மற்றும் யூப்பிட்டர் மார்க்
லங்கா 100 × 100 பளையகாட் சாரங்கள்

எல்லா ரகங்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்.

## சுப்பீரியர் பளையகாட் கொம்பனி

118, இரண்டாம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

# பி. எஸ். டிஸ்பென்சரி

## P. S. DISPENSARY

***Dispensing Chemist & Druggists***

★★

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தின்
எதிரில் உள்ளது.

உங்கள் அபிமானம் நிறைந்த

★★

ரி. கே. இராசரத்தினம்

உங்களுக்குச் சேவைபுரிய முன்வந்துள்ளார்.

*75, மின்சார நிலைய வீதி,*

**யாழ்ப்பாணம்.**

திருமுறைக் கழகத்திற்கு எமது
வாழ்த்துக்கள்.

அழகு நிறைந்த அச்சுவேலைகளை

குறைந்த செலவில் குறித்த நேரத்தில்

சிறப்புறச் செய்யும் இடம்

★★★ **ராஜா** ★★★

**அச்சகம் — புத்தகசாலை**

பிரதான வீதி, **சங்கானை.**

உரிமையாளர்:

அ. சேனாதிராசா

# அன்பு புத்தகசாலை

27D, பெரியகடை,

யாழ்ப்பாணம்,

★ பாடசாலைப் புத்தகங்கள்

★ தின, வார, மாதப் பத்திரிகைகள்

★ பாடசாலை உபகரணங்கள்

*யாவும் நியாய விலையில் பெற*

**அன்பு புத்தகசாலைக்கு வாருங்கள்**

**அன்பே எமது மூலதனம்.**

*With the best Compliments of*

★
★
★
★

# SILVA WATCH WORKS

**13/25 Jubilee Bazaar,**

**Near Ranee Cinema**

**JAFFNA.**

*Prop.* **Gnanamuthu Sebastian.**

இருவினையொப்பை இங்கே விளக்க இடமில்லை. ஞானம் பெறுவார்க்கு மனநிலை இருவினை யொப்பாய் இருக்க வேண்டும் என்பதை உணரல் வேண்டும். இருவினையொப்பு நம்முள்ளத்திலே தலையெடுத்து நிற்கிறதற்குவழி 'அம்பை நோவாது எய்தவனைநோவது போல, இறைவனருளாலேதான் உலகத்தவர் நமக்கு நன்மையோ தீமையோ புரிகிறார் என்ற பேருண்மையை மறவாமலிருத்தலாம். யார் குற்றம் செய்தாலும் யார் நன்மைசெய்தாலும் அவற்றிற்கெல்லாம் ஆண்டவன் அநுமதிதான் என்று விளங்கவேண்டும். விளங்கிப் பிறர்மேல் கொதிப்போ கடும் அன்போ செலுத்துவதில் ஈடுபடக்கூடாது - அதாவது அவ்வேளைகளில் ஆண்டவன் செயல்தான் மூல காரணம் என்று முடிவுகட்டி விருப்போ வெறுப்போ நம் உள்ளத்தை அலைமோதவிடக்கூடாது. இக்கருத்தை முதலாந் திருமுறையில் வரும்,

''குற்றமின்மை உண்மைநீயென்
றுன்னடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான
காரணம் என்னைகொலாம்
வற்றலாமை வாளரவம்
பூண்டயன் வெண்டலையில்
துற்றலான கொள்கையானே
சோபுர மேயவனே''

என்னுந் தேவாரம் விளக்கும்.

விருப்பும் வெறுப்பும் இல்லாத, அதாவது, இருவினை யொப்புப் பொருந்திய மனநிலையோடு வாழ்வதற்கு எல்லாவற்றுக்கும் மூலகாரணம் இறைவன் என்பதை நாம் அடிக்கடி நினைவுகூரவேண்டும். இது இடையறாது நிகழவேண்டும். அந்தஎண்ணம் நமக்கு ஆறுதலைத்தந்து அல்லல்களைக் களையும். இதனை,

''மன்னானவன் உலகிற் கொருமழை
யானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன்
பொழில்சூழ் புளமங்கை
என்னானவன் இசையானவன்
இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையுமிடம்
ஆலந்துறை யதுவே''

என்னும் தேவாரம் விளக்கும்.

மூலகாரணனா யிருக்கும் ஆண்டவன் அடியார்மேல் பெற்றதாய்போல் அன்புடையன், ஆபத்துக் காலத்தில் உதவிபுரிபவன் என்ற உண்மை நம் உள்ளத்தில் இடையறாது பிரகாசித்துக்கொண்டிருக்கவேண்டும். உயிர்கள் மேல் இரக்கங் காட்டுந் தெய்வங்களிலே சிவபிரானைவிட மேலான தெய்வம் இல்லை யென்பதை,

''கனைத்தெழுந்த வெண்டிரை
சூழ்கடலிடை நஞ்சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்
வைத்த திருந்திய தேவநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல்
பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய்
நெடுங்களம் மேயவனே''

என்னும் தேவாரத்தால் அறியலாம்.

இறைவன் கருணைத் திறத்தைத் திருச்சடைமேல் பிறை சூடியதும் வற்புறுத்துகின்றது. இருபத்தேழு நட்சத்திரங்களாகித் தக்கனின் பெண்களைச் சந்திரன் மணம்முடித்தும், ரோகிணியோடுமாத்திரம் காதலாய்ச் சந்திரன் இருந்தபடியால் சந்திரனை நாசமாய்ப் போம்படி தக்கன் சபித்தான். தேய்ந்துபோகும் சந்திரன் சிவனைநோக்கி இரந்தபோது, திருப்பாதத்தில் விழுந்து மன்றாடிய சந்திரனைத் தூக்கிச் சடாமுடியிற் தரித்துள்ளார். இதுவும் அவரின் கருணையை விளக்கும். திருப்பாச்சிலாச்சிராமத்தில் முயலகன் என்னும் நோயால் வருந்திய கொல்லி மழவனின் மகள் நோய் நீங்கும் வண்

ணம் நாயனார் பாடியருளிய பாட்டில் "பிறையைச் சூடினவரும், விடமுண்டு கறுத்த கண்டருமாகிய நீர் மழவனின் மங்கையை வாட்டுவது முறையோ" என்று நாயனார் வாதாடுவது இன்புறற்பாலது. இதனை,

"துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடைசுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
ஆரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோல மெலாஞ் செய்து பாச்சில்
ஆச்சிராமத்து றைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர் மாண்பே."

என்னும் தேவாரத்தால் அறியலாம்.

உமாதேவியைப் பாகம் வைத்தது, இடபம் ஊர்ந்தது, சடைமேல் கங்கையைத் தரித்தது, முப்புரம் எரித்தது, மார்க்கண்டனுக்காக மறலியை உதைத்தது, முதலிய இறைவன் செயல்களும் இறைவன் ஆன்மாக்களுக்கு அநுக்கிரகம் புரிந்த திறத்தை மேலும் மேலும் வற்புறுத்துவனவாகும்.

நம்மாலேதான் நம்கருமம் முடிய வேண்டியிருக்கிற தென்று; அளவுக்கு மிஞ்சிக் கருமங்கள் பார்த்துத் தத்தளித்து நாம் நிற்பது; வெயிலில் நின்று வாடுவது போலாகும். பெருங் கருணையன் ஆகிய இறைவன் நமக்கு அருந்துணையாய் நிற்கின்றான். இடைவிடாது உணர நம் உள்ளங்குளிரும். இதனை,

"நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்
குளிரும்மே"

என்னுந் தேவாரம் விளக்கும்.

இடைவிடாது வணங்குபவருடைய உள்ளம் குளிர்தலேயன்றி வாழ்வில் பெருந் திருப்தியடையும். ஒன்றுக்கும் ஆசைப்படாது பக்திபண்ணுதலைப் பெருஞ்செல்வமாகப் பேணும். இதனை,

"செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே."

என்னுந் தேவாரம் நன்கு விளக்கும்.

இதுகாறுங் கூறியபடி இறைவன் பெருங் கருணையன் என்றும், நாம் செய்த பிழைகளுக்கு இரங்குந்தன்மையன் என்றும், உலகங்களைப் படைத்து உயிர்களுக்குப் பிறப்பு நல்கி, நல்லறிவு உதிக்கச் செய்து, அவற்றைப் படிப்படி உயர்த்துவதால் தாயினும் இனியவனென்றும்; உணர்ந்து இறைவனிடம் உயிர்களைச் சரண்புகச் செய்யும் சைவசமயம்.

அவரவர் செய்யும் வினைகளை அளந்து கொடுப்பவன்தான் இறைவன் என்றும்; செய்த வினை தம்பயனைத் தவறாமல் தரும் என்றும்; இறைவனைத் தொழுதலால் ஆம் பயன் ஒன்றுமில்லை யென்றும், உடம்பைப் பட்டினியாற் செற்றுத் தவம் செய்தலே மேலானதென்றும் போதிக்குஞ் சமணம். இச்சமயத்தின்படி இறைவனை நினைந்து பாடிக் குழைந்து நிற்கும் நிலை இல்லை. எத்தகைய ஆறுதலோ ஆனந்தமோ இல்லை. நம்முடைய விருப்பு வெறுப்புகள் விட்டகலா. சமணசமயத்துறவிகளின் புன்மையைத் திருநாவுக்கரசருக்கு அவர் செய்த துன்பங்களால் நன்குவிளங்கும்.

மனத்தூய்மைப் படுவதற்கு இறைவழிபாடு மிகவும் இன்றியமையாதது என்ற கொள்கை சமணருக்குக் கிடையாது. ஆனால் இறைவழிபாட்டாற்றான் நம் உள்ளத்திலேயுள்ள காமம் முதலிய கள்ளம் எல்லாம் நீங்கும். இதனை,

'வெள்ளமார்ந்து மிளிர் செஞ்சடைதன்
மேல் விளங்கும் மதிசூடி
உள்ளமார்ந்த அடியார் தொழுதேத்த
உகக்கும் அருள்தந்தெம்
கள்ளமார்ந்து கழியப் பழிதீர்த்த
கடவுள்ளிட மென்பர்
புள்ளையார்ந்த வயலின் விளைவால்
வளமல்கும் புகலூரே.

தேவாரம் விளக்கிக் காட்டும்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# இரண்டாந் திருமுறை

வேதாகமபூஷணம் ப்ரம்மஸ்ரீ து. பாலசுந்தரக் குருக்கள் பி. ஏ. ஒனர்ஸ் அவர்கள்
மாவிட்டபுரம்

பரதக் கண்டத்தில் மிகப்பழைய காலந்தொட்டு வழங்கிவரும் சமயம் "சநாதன தர்மம்" எனப்படும். இதைத்தான் மேனாட்டார் "இந்து சமயம்" என அழைத்தனர். இதனுள் ஆறு உட்பிரிவுகள் இருப்பினும் அவையாவற்றுக்கும் மூலநூலாக விளங்குவது வேதம் ஆம். அவற்றுள்ளும் மிகச்சிறந்தவை சைவம் வைணவம் என்னும் இரண்டு சமயங்களாம்.

சைவசமயத்தின் அடிப்படை நூல்கள் இருவகையின. அவை வேதம் சிவாகமம் என்பன. இன்னும் தோத்திரங்கள் சாத்திரங்கள் எனவும் விரியும். வடமொழியில் தோத்திரங்கள் வேதம் ஆனவாறே; தமிழில் தோத்திரங்கள் பன்னிரு திருமுறைகள் ஆம்.

திருமுறைகள் அல்லது தேவாரம் என்பன அருள்வாக்குகளாம். இவை சங்ககாலத்தில் தேவபாணி என அழைக்கப்பட்டன. முறை என்றால் நூல் எனப் பொருள்படும். எனவே இவை அருள் நூல்களாம். "அருணூலும் ஆரணமும் அல்லாதும்" என்பதை நோக்குக.

வேதங்களின் வரிசையுடன் உவமிக்கும் போது 2-ந் திருமுறை யசுர் வேதத்தை நிகர்க்கும். யசுர்வேதத் திற்குள் சாக்ஷாத் பரமேசுவரனை அம்மையப்பராக வைத்துப் பூசிக்கும் ஸ்ரீருத்ர - சமகப் பிரச்னங்கள் உள. மூன்று வேதங்களுக்கும் நடுவிலே விளங்குவது யசுர்வேதம். அதன் நடுவில் விளங்குவது ஸ்ரீருத்ரம். அதன் நடுவிலே விளங்கும் அனுவாகத்திலே தான் சிவனைக் குறிக்கும் திருநாமம் விளங்குகின்றது. அதிலே தான் சைவர்களுக்குரிய தாரக மந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரம் வருகின்றது. "நம: ஸிவாய ச ஸிவதராய ச" என்னும் திருவாக்கு இவ்விடத்திலேதான் உளது. இறைவனது சொரூபபாவனை, கிரியாபாவங்கள் முதலிய யாவும் இரண்டாம் வேதத்திலேயே உள. அங்ஙனமே "இருக்குமொழிப் பிள்ளையாரது" இரண்டாம் திருமுறையிலேயே சிவபிரானது சொரூப பாவனைகள், கிரியா பாவங்கள், இயற்கை வருணனைகள் இலக்கியவளங்கள் யாவும் உள.

தேவாரம் வேதசாரம் என்று விதந்தோதுதற்கு ஞானசம்பந்தப் பெருமான் பாடல்களே சான்று. வேதசிரசுகளாகிய உபநிடதங்களைப் பயில்வோர் அல்லது ஸ்ரீ சங்கராச்சாரியாருடைய அட்டகங்களைப் பயில்வோர் நூல்களின் ஈற்றில் "பலஸ்ருதி" என்னும் ஒரு பகுதியிருப்பதை அறிவர். இந்த உபநிஷத்தை ஓதுவோர் அல்லது இந்தத் தோத்திரத்தைப் பாராயணம் செய்வோர் இன்னபயன் பெறுவர் என அப்பகுதி கூறும். அப்பகுதியும் சேர்ந்ததே நூலாகும். அங்ஙனமே ஆளுடைய பிள்ளையார் பதிகங்களிலும் இவ்வுண்மையைக் காணலாம்.

நாயன்மார்கள் தலயாத்திரையையும் பண்ணையும் கருவியாகக் கொண்டது சைவசமயப்பிரசாரத்தின் பொருட்டே யாமாதலின் ஆளுடைய பிள்ளையார் இரண்டாம் திருமுறையிலே திருவலஞ்சுழிப் பாவாகிய "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்று தொடங்கும் பதிகத்

தும்; பலசுருதியிலே தம் தமிழ் மாலையை அறிவுடையோர் எங்ஙனம் பாடவேண்டும் என்று மிக அழகாகக் கூறுகிறார். தம் பாடல்களை ஆதரித்து- இசைகற்று - வல்லார் சொலக்கேட்டு - உகந்தார் தம்மை வினைகள் வாதியா என்றும், இம்மைக்கும் மறுமைக்கும் வருத்தம் வந்தடையா என்றும் கூறுகிறார். இம்முறையைச் சேக்கிழார் "திருக்கடைக்காப்பு" என்பர்.

## திருமுறையும் பண்களும்

பண்கள் மூவகை. அவை பகற்பண், இராப்பண், பொதுப்பண் என்பன. அவற்றுள் பகற்பண் 12. இராப்பண் 9. பொதுப்பண் 3. இரண்டாம் திருமுறை 122 திருப்பதிகங்களையுடையது. திருமுறைகளுட் புராணப்படி வழங்கும் பண்கள் 26–ஆம் (யாழ் முறி உட்பட). இரண்டாம் திருமுறையில் எடுத்தாளப்பட்ட பண்கள் ஆறும். அவை இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி என்பன. அவற்றுள் இந்தளம் 39 திருப்பதிகங்களிலும், சீகாமரம் 14 பதிகங்களிலும், காந்தாரம் 30 பதிகங்களிலும் பயிலப்பட்டுள்ளன. 14 பதிகங்கள் பியந்தைக்காந்தாரத்திலும், 15 பதிகங்கள் நட்டராகத்திலும், 10 பதிகங்கள் செவ்வழியிலும் பாடப்பட்டுள்ளன.

## வரலாற்றுப் பதிகங்கள்

இத்திருமுறையில் பிள்ளையார் அற்புதங்களோடு சம்பந்தப்பட்ட பதிகங்கள் ஐந்தாம். இவ்வைந்தும் சைவமக்கள் அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாய் நித்திய பாராயணத்துக்குரிய தமிழ் வேதமாய் உள்ளவை எனில் அது மிகையாகாது. அவை திருமருகலில் விடந்தீர்த்த பதிகம், திருமறைக்காட்டில் திறந்த கதவை அடைக்கப் பாடிய பதிகம்; என்பைப் பூம்பாவையாக்கிய பதிகம், கூன்பாண்டியன் வெப்பு நீக்கிய பதிகம், நாளும் கோளும் பற்றிய பதிகம் என்பன. இவற்றுள் திருநீற்றுப் பதிகமும் கோளறு திருப்பதிகமும் சைவமக்கள் காலந்தோறும் பன்முறையும் பயிலவேண்டிய சிறப்பின.


இன்னும் சம்பந்தப் பெருமானுடைய பாமாலைப் பரப்புகளிலே ஒரு விசேஷம் உண்டு. வடதேசத்தின் கணுள்ளதாகிய கௌரியம்பாள் சமேத திருக்கேதாரேசுரரை மனக்கண்ணுற் கண்டு திருப்பதிகம் பாடியுள்ளார், அங்ஙனமே ஈழநாட்டிலுள்ள கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சரத்தானையும் பரவியுள்ளார்.

வேதசாரமாயமைந்துள்ள இவரது பதிகங்களிலே புராண, இதிகாச, சகஸ்ரநாம சாரங்களும் காணப்படுகின்றன. "முன்னமிரு மூன்று சமயங்களவையாகி" என்பன போன்ற விதிகள் கணபதி சகஸ்ரநாமத்தையே ஞாபகப்படுத்தும், இவரது பதிகங்களிலே 9-ம் பாடல்கள் பிரமவிட்டுணுக்களின் அடி முடி தேடிய வரலாற்றைக் குறிக்கும். 8-ம் பாடல் இராவணனைப்பற்றியும், 10-ம் பாடல் சமண பௌத்தர்களைப் பற்றியும் கூறும். எனவே 8-ம்,9-ம், 10-ம், 11-ம் பாடல்கள் ஒரே ஒழுங்குக்குட்பட்டவை. ஏனையவற்றில் அனேக சமய வரலாறுகள் இடம்பெறுவதைக் காணலாம். உதாரணமாக பண்டு நால்வருக் கறமுரைத்தது-திரிபுர தகனம்; திருப்பாற்கடல் கடைந்தமை, அருச்சுனன் பாசுபதம் பெற்றமை, தக்கன் வேள்வி சிதைத்தமை, பிரமன் தலை அரிந்தமை, காமனைக் காய்ந்தமை - முதலிய பலப் பல வரலாறுகள் காணப்படுகின்றன.

வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும் தக்கசம

**யூ ஆசா பற்றறியின்**
வடமாகாண
ஏக விநியோகஸ்தர்கள்
**'துரை அன் கோ'**

'யூ ஆ சா'




'யூ ஆ சா'

முதன்மையானது! சிக்கனமானது!

**பற்றறி சார்ச் செய்பவர்களும்**
**விற்பனையாளர்களும்**

**துரை அன் கோ**

*133, ஸ்ரான்லி வீதி,*
யாழ்ப்பாணம்.

★ அன்பளிப்புப் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ 'எவர்சில்வர்' பாத்திரங்கள்
★ பெண்களின் கூந்தல் முடிகள்

போன்ற நானாவிதப் பொருட்களும்
பெற்றுக் கொள்ளச் சிறந்த இடம்

**எஸ். சவரிமுத்து**

73, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

திருமுறைக்கழகம்

திருவெலாம் நிறைந்து
திருவருள் பொலிந்து
செழிப்புற்றோங்க
வாழ்த்துகின்றோம்.

**யாழ்தேவி றைஸ் மில்ஸ்**

மூளாய் றோட்,
**வட்டுக்கோட்டை.**

உரிமையாளர்: *K. செல்லத்துரை,*
தொல்புரம்

*இலங்கையில் மிகச்சிறந்த*
*நெல்லைக் கொண்டு கல், மண்*
*இல்லாது துப்பரவு செய்து*
*நவீன இயந்திரங்களினால்*
*நல்ல முறையில் தயாரிக்கப்பட்டது.*

**கல் இல்லாத சிறந்த அரிசி**

இராஜன்
இண்டஸ்ரியல் வேர்க்ஸ்

**அரிசி ஆலை**

புன்னாலைக்கட்டுவன்.

★ கல்வித் திணைக்களம் வெளி யிடும் பாடப் புத்தகங்கள்.
★ ஈஸ்ரண் பேப்பர்மில் கோப்பரேசன் அப்பியாசப் புத்தகங்கள்
விற்பனை உரிமை பெற்றவர்கள்.

## பூபாலசிங்கம் அன் சன்ஸ்

புத்தக விற்பனையாளர்கள்

பஸ் நிலைய முன்பு,

யாழ்ப்பாணம்.

*Space Donated by*

## NORTHERN INDUSTRIES

*TYRE RETREADERS*

8/1, Stanley Road,

JAFFNA.

*With the best Compliments of*

## Yarl Metal Industries

250 & 254 K .K. S. ROAD,

JAFFNA.

Phone : 7049. Grams : YARL METAL.

★ காலம் கடந்த
★★ காட்சிகளைக் கண்டு
★★★ களிப்புறவும்......
★★ நீங்காத நினைவுகளை
★ நிழற்படமாக்கவும்...

முன்னணியில் திகழ்வது

## பாரத் ஸ்ருடியோ

82/1, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 252

உங்கள் இல்லங்களுக்கு
நவீன முறையில்
குறைந்த செலவில்
நிறைந்த வகையில்
மின்சார இணைப்புக்கள்
இணைத்துக் கொடுப்பவர்கள் .

ஒரு முறை
விஜயம் செய்துபாருங்கள்.

## Murugan Motors

**Dealers in Motor Spares & Electricals**

**MAIN ROAD,**
**SITHANKERNEY.**

Phone Manipay } 517

★ எங்களிடம் : ★

பால் உணவுகள்,
பேக்கரிச் சாமான்கள், பலசரக்கு
வகைகள், சாய்ப்புச் சாமான்கள்,
மாவு, நாட்டரிசி வகைகள், கடலை,
நவதானியம், மசாலை வகைகள்,
கோப்பித்தூள் முதலியன

நிதான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

**No. 2 GOVT. பில்டிங்,**
**மாக்கற், : : சங்கானை.**

With the Best Compliments
from :

## THIRUMURUGAN STORES

**K. K. S. Road,**
**CHUNNAKAM.**

**— DEALINGS IN —**

★ *Handloom Products*

★ *Lanka Salu Sala Clothes.*

## EXCELLENT TURNING CENTRE

*Best*

★ Turners

★ Electric Welders

★ Makers of Gates, Grills.

**No, 2, Stanley Road,**
**JAFFNA;**

கடைச்சல் தொழில் நிபுணர்கள்

# அன்பளிப்புக்கள்

1. MALA STORES
159, Gasworks Street, Colombo.
2. WOODLANDS HOTEL
No. 192, 4th Cross St. Colombo.
3. வைத்தியகலாநிதி
அ. நடராசா D. I, M. S.
கந்தரோடை.
4. V. P. சபாபதிப்பிள்ளை
ஸ்ரீ வாணி பேக்கரி, சங்கானை
5. ஒரு தொண்டர்
சங்கானை.
6. க. சிவப்பிரகாசம்
சங்கானை.
7. கு. செல்லையா
இல. 6, வில்லூன்றி வீதி,
யாழ்ப்பாணம்.
8. எஸ். சுந்தரம்
சுன்னாகம்.
9. ஈஸ்வரி ஹாட்வெயர்
ஸ்ரோர்ஸ், சுன்னாகம்.
10. நவகல்யாணி
ஆபரண மாளிகை,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
11. சுபாஸ் விலாஸ்,
வட்டுக் கிழக்கு, சித்தன்கேணி.
12. திரு. த. சிவலிங்கம்
சுன்னாகம்.
13. கா. இரத்தினசபாபதி & சன்ஸ்
131, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
எங்களிடம்: சித்தமருந்து, ஆயுர்வேத மருந்து,
மருந்துச்சரக்கு வகைகள் கிடைக்கும்.
14. வைத்திய கலாநிதி திரு.
மு. க. வேலாயுதம்பிள்ளை
வட்டுக் கிழக்கு, சித்தன்கேணி
15. ஸ்ரீ கிருஷ்ணபவான்
ஹோட்டல்
35, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


Phone : 32188

*With the Best Compliments of*

★★★★★

## V. R. M. Co.

**General Merchants & Commission Agents**

111 / A, Old Moor Street,
COLOMBO 12.

## P. V. M. COMPANY

**General Merchants & Commission Agents**

*Dealers in:* CEYLON PRODUCTS
Animal Feeds & Fertilizers.

**No. 133, Old Moor Street,**
**COLOMBO.**

T'Phone : 34658    T'Grams : MARJAN

**அன்போடு அழைக்கிறோம்**

வீட்டுத் தேவைகளுக்குரிய
கண்ணாடி வகைகளுக்கு
ஒருமுறை விஜயம்
செய்யுங்கள்.

**"ஜெஸீமாஸ்"**
95, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

★★★★★

## ஜெஸீமா பிக்சர் பலெஸ்

**222, 232, K. K. S. வீதி,**
**யாழ்ப்பாணம்.**

யத்திலே திருவவதாரம் செய்தருளிய முத்தமிழ் வித்தகர் தேவாரம் எம்ம னோர்க்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றது. இவரது திருமுறை கள் முக்கியமாக இரண்டாம் திரு முறை; நன்மக்களுக்கு எத்த னையோ வேதசிவாகம உண்மைகளை நல்குகின்றது. எம் சைவநாடு இன் றுள்ள நிலையில் அவை சாந்தியளிக் கும் வல்லமை பொருந்தியனவாகும்.

இத்திருமுறையில் வரும் பூம்பா வைத் திருப்பதிகத்தில் வேதசிவாகம உண்மைகள் வெளிப்படையாக உள் ளன. பல்வேறு மாதங்களில் இறை வனுக்குரிய திருவிழாக்கள் கூறப்பட் டுள்ளன. அவற்றுட் சில இப்பொ ழுது நடத்தப்படுவதில்லை.

அவற்றுட்சில. 1. ஐப்பசி ஓண விழா 2. தொல்கார்த்திகை நாள் ...... தையலார் கொண்டாடும் விளக்கீடு, 3 ஆதிரை நாள். 4. தைப் பூசம் 5- மாசிக்கடலாடு (மாசிமக நீராடல்) 6. பலிவிழாப் பாடல் செய் பங்குனி யுத்தர நாள் ஒலிவிழா. 7. பதினெண் கணங்கள் தம் அட் டமி நாள் (வைகாசி பூர்வபக்க அட் டமியில் சிவகணவிழா) 8. பொற் றுப்பு (பொன்னூல்) ஆனி, ஆடி மாதம். 9. பெருஞ் சாந்தி (கும்பா பிஷேகம்) ஆவணி, இவற்றுள் வைகாசி, ஆனி ஆடி மாதங்களில் நடக்கும் விழாக்களை ஆகம அடிப் படையில் இன்னின்ன விழாக்கள் என்று தீர்மானித்து அவற்றையும் கொண்டாடின் அது பெருஞ் சிவ புண்ணியமும் மக்கள் உய்யும் வழி யும் ஆம்.

''ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்'' எனக் கூறியது போலவே அபிஷேகப் பிரியனுகிய சிவனது ஸ்ந பனத்திரவியங்களையும் பலவிடங்களில் சிறப்பித்துக் கூறியுள்ளார். ''தேனெய் பாறயிர் தெங்கிளநீர் கரும்பின் தெளிபானஞ் சாடுமுடி யார் ''என்பது ஒரெடுத்துக் காட்டு. தமிழுக்கு ''செந்தமிழ் தாடமிழ்'' போன்ற அடைகள் பொதுவாகப் பயிலப்படுவன, ஆனுல் ''செந்தண் டமிழ்'' போன்ற சொற்ருெடர்களும் இவர் திருவாக்கினின்று தமிழுக்குச் சூட்டப்பட்டுள்ளன.

## இத்திருமுறைகள் போதிக்கும் கற்பனைகளுட் சில

1. உலகிற் பிறந்தார் பெறும் பயன் சிவனடியார்களை அமுது செய் வித்தலும், சிவனது திருவிழாப் பொலிவு கண்டார்தலுமே வேத சிவாகம உண்மை.

2. உருவங் காணுமலே உணர்ந்த அன்பினுலே பெரியோரை வழிப டின் அப்பெரியார் ஒரு நாள் தாமாகவே வெளிப்பட்டு அருள் செய்தல் திண்ணம். அப்பூதிய டிகளும் அங்ஙனமே அப்பர் சுவா மிகளை வழிபட்டுத்தரிசனம் பெற் ருர்.

3. குருலிங்க சங்கமம் பேணுதல் சைவர்களின் தலையாக கடன்.

4. சிவனடியார்கள் கூட்டத்தில் மன முருகுதலும், சிவநெறியைப் புறம் பேசி இடையூறு விளைக்கும் பர சமயங்களில் வெறுப்புடைமை யும் சிவனருட்டிறத்தில் நிற் போர் கடன்களாம்.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# மூன்றாந் திருமுறை

[பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம்]

"ஏழிசையும் பலகலையும் எவ்வுலகுந் தனித்தனியே வாழ" வந்தவதரித்தவர் திருஞானசம்பந்தப் பெருமானார். அவரியற்றிய அருளனுபவத் திருப்பாடல்கள் முதல்மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்றாந்திருமுறை, எண்பத்து நான்கு திருத்தலங்களின் மேற்பாடப்பட்ட நூற்றிருபத்தொரு சிறப்புப் பதிகங்களும், நான்கு பொதுப்பதிகங்களுமாக நூற்றிருபத்தைந்து திருப்பதிகங்களையடக்கியது.

சிவபரம்பொருளை நேராயறிந்தும், அணைந்துமனுபவித்த அடியார் பெருமக்களின் அனுபவமுத்திரை பதியப் பெற்றிருத்தல், திருமுறைப் பாடல்களுக்குள்ள சிறப்பாகும். ஏனைய பாடல்களுக்கில்லாத நிலைத்த பெருமையும், படிப்போருள்ளங்களைத் தூய்மை செய்யும் இனியபண்பும், முரண்பாடில்லாத தத்துவஞானக் கோட்பாடுமமைந்திருப்பதால்; திருமுறைப்பாடல்கள் மனிதகுலமுழுதுக்கும் வரப்பிரசாதமாயமைந்தவை. ஒன்றோடொன்றை யொப்பிட்டு ஏற்றத்தாழ்வு கூறமுடியாத அளவுக்குத் திருமுறைப்பாடல்கள் யாவுமே பக்திச் சுவை பயப்பன.

மூன்றாந் திருமுறையை ஆராய்ந்து நோக்குமிடத்து, அதில், சுத்த அத்துவிதம் என விதந்தோதப்படுஞ் சைவ சித்தாந்த தத்துவத்தின் சிறப்பும், பரசமயங்களின் குறைபாடும் புலப்படுத்தப்பட்டிருத்தலைக் காணலாம். 'இறைவன் திருநாமமே எங்கும் பரவ வேண்டும், அல்லாதார் நாமங்கள் பரவுதலாற் குழப்பமே ஏற்படும்' என்று திருஞானசம்பந்தர் கொண்ட உறுதிப்பாட்டையுணரலாம்; இறைவன் கழல் பேணுதலாகிய ஒரு நெறியே மக்கள் வாழ்வில் இன்பம் பயக்குந் திருநெறியென்பதையும், சிவனடியாரிடத்துக் காட்டும் பேரன்பே சிவனிடத்துள்ள பேரன்புக்குச் சிறந்த அடையாளமாமென்பதையுமுணரலாம்.

தமது ஏனைய திருமுறைகளிற் போலவே இத்திருமுறையிலும், திருஞானசம்பந்தர், இயற்கையோடியைந்த இனியகாட்சிகளில் இறைவனைக்கண்டு, அக்காட்சியில் மக்களையும் ஈடுபடுத்த முயன்ற பெருமுயற்சி புலப்படுகிறது. உடலைச் சுடுபாறையிலிட்டு வாட்டியும், தலைமயிரைப் பறித்தும், தாயினத்தைக் கண்டு வெருண்டோடியும், இசையையும் நடனத்தையும், மலரையும் மணத்தையும் வெறுத்தொதுக்கியும், தமிழகத்தில் வரட்டுத்துறவு நெறியைப் போதித்துவந்த சமணத் துறவிகளின் போக்கைப் புரட்சிகரமாக மாற்றி, இயற்கைச்சிருட்டியில் இறைவனின் வியத்தகுமாற்றலைப் பார்க்கவும், இன்னிசையால் அவனோடிசைந்து வாழும் உண்மை நெறியை வளர்க்கவும் ஞானசம்பந்தர் முயன்றுள்ளார். பள்ளத்தை நாடியோடும் வெள்ளம்போல் இறைவனிடத்துப் பக்திவெள்ளம் கரைபுரண்டோடுவதையும், அப்பக்தியானது படிப்பவர் மனங்களாகிய பாறுங் கற்களையும் இழுத்து உருட்டிச் செல்வதையும் அவருடைய திருப்பாடல்களால் உணரமுடிகிறது.

திருஞான சம்பந்தப்பெருமானுடைய திருவவதாரச் சிறப்பினைக் கூறவந்த சேக்கிழார் பெருமான்,

''பரசமயத், தருக்கொழியச் சைவமுதல்
வைதிகமும் தழைத்தோங்க''
''தொண்டர் மனங்களி சிறப்பத்தூய திருநீற்று நெறி
எண்டிசையுந் தனிநடப்ப ஏழுலகுங் குளிர்தூங்க
அண்டர்குலம் அதிசயிப்ப அந்தணரா ததி பெருக
வண்டமிழ் செய் தவம் நிரம்ப மாதவத்தோர்
செயல்வாய்ப்ப''
''திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின்
துறைவெல்ல''

அப்பெருமானார் திருவவதாரஞ் செய்தாரென்று நாவாரப் புகழ்ந்துள்ளார். சேக்கிழார் பெருமான் போன்ற மெய்ஞ்ஞானிகளுக்கே அவதாரபுருடர்களின் இரகசியங்களும் நோக்குக்களும் புலப்படுகின்றன. அச் சேக்கிழார் பெருமானால் சொற்கள் தோறும் வியந்துபாராட்டப்பட்டதும், பரசமயங்கள் பாறும்வண்ணம் வைகைநீரில் எதிரேறிச் சென்று, சைவநன்னெறியின் மானத்தைக் காத்து, அதன் மேன்மையை உலகுக்குணர்த்தியதுமாகிய திருப்பாசுரம் மூன்றுந் திருமுறையின் நடுநாயகமாக அமைந்துள்ளது.

தமிழ்த் தெய்வமாகிய முருகன் உக்கிரப் பெருவழுதியாயவதரிக்கப் பெற்றதும், ஆலவாய்ப் பெருமானே சௌந்தரமாறன் என்ற பெயருடனிருந்து அரசாளப் பெற்றதும், அப்பெருமானே, 'நன்பாட்டுப்புலவனாய்ச் சங்கமேறித் தமிழாராய்தற் கிடமாயிருந்ததும், அடியவர்க்காக அறுபத்து நான்கு திருவிளையாடல்களை நிகழ்த்த நிலமாயிருந்ததுமான தண்பாண்டி நாட்டின்கண்ணே வேதநெறி மறைந்து, சைவநெறி மழுங்கி, அவைதிகம் தலைதூக்கி நின்ற அவல நிலையைச் சிந்தித்துப்பார்த்தால், திருஞானசம்பந்தரின் அவதாரத்தின் அவசியத்தை நாம் உணரலாம்.

ஒரு சமூகத்திற் தத்துவஞானப் பிறழ்வு ஏற்படுவதும், சற்சமயங் குன்றும்படி பொய்ச்சமயங்கள் படையெடுப்பதும் அலட்சியமாய் விட்டுவிடக் கூடிய சிறுவிடயங்களல்ல. அச் சமூகத்தின் ஆத்மீகச் செல்வத்தை யழித்துவிட்டுப் புறத்திலே ஆடம்பரத்தை வளர்ப்பது மகிழ்ச்சிக்குரிய காரியமன்று. அவைதிக சமயங்களின் படையெழுச்சியைத் தமது ஆத்மீக ஆற்றலால் வென்று மேம்பட்டவர் திருஞானசம்பந்தப் பெருமான். உலகியல் வாழ்வு வேதநெறிக்கமைய, ஒழுங்காகப், பக்தி சிரத்தையுடன் நடத்தப்பட வேண்டுமென்பதையும், அவ்வேதநெறிப்பட்ட வாழ்வு கைவந்தவர்களே பற்றுக்களைத் தூய்மை செய்து சைவர்களாக வாழமுடியுமென்பதையும், மன்னனும் மக்களும் அறியும்படி அவர் திருப்பாசுரத்தில் வகுத்தோதினர். எவ்வித ஒழுங்குக்கும் அமையாது, ''பொய்யினை மெய்யையாக்க'' முயலும் மதவாதிகட்கும் பிறர்க்கும், இறைவனைச் சந்தேகிப்போர் மீட்டும் மீட்டும் நம்பிக்கையிழந்த ஆராய்வோர் ஆகிய அனைவர்க்கும் திருபாசுரப்பாடல்கள் சிறந்த அறிவுறுத்தல்களாக மிளிருகின்றன. திருப்பாசுரமானது, மெய்ஞ்ஞானத் துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் ஈடுபாடுகொண்ட அறிஞர்கள் அனைவரும் இன்று உச்சிமேற் கொண்டு

போற்றும் பெருமைவாய்ந்த சைவ சித்தாந்த உண்மைகளைத் தன்னகத் தடக்கியுள்ளதென்பதும் குறிப்பிடத் தக்கது. ''வாழ்க அந்தணர்'' என்று தொடங்கும் அப்பாசுரத்தில் ''வேந் தனும் ஓங்குக'' என்றெடுத்துப் பாடியதால் பாண்டிய மன்னனின் கூன் நிமிர்ந்தது. நின்ற சீர் நெடுமாறன் என்ற அழகிய திருநாமத்துக்கும், சுந்தரமூர்த்திநாயனாரின் தூய அன்புக்கும் உரியவனாக அவனையாக்கிய மந்திரசக்தி திருப்பாசுரத்துக்கேயுரியது.

சைவநெறி தமிழகத்தில் மிகப் பழைய காலந்தொட்டு வளர்ந்துவரும் பெருநெறி; எனினும் அதுவே உலகுயிர்கள் அனைத்துக்கும் பொருத்தமான ஒரு நெறி; கடவுள் நெறி: வேத சிவாகமங்கள்மூலம் இறைவனருளிய நெறி. அத்தகைய சைவநன்னெறி ஞாலமெங்கும் பரவவேண்டுமென்பது திருஞானசம்பந்தக் குழந்தையின் வேணவாவாகும். இது இக்காலத்திற் குறிப்பிடப்படுவதுபோன்ற பிராந்தியப் பற்றையோ, மொழிப்பற்றையோ, குறுகிய சமயப்பற்றையோ அடிப்படையாகக் கொண்ட விருப்பமன்று. உண்மையை உணராமல், பலதலையாய பொய்ம்மைகளை வளர்த்து, ஒன்றோடொன்று மாறுபட்டு நிற்கும் மனித குலம், ஒரு நெறிப்பட்டு, இறைவனுடைய பெருமையையும், தலைமையையும் ஏற்று, அவனுடைய திருக்குறிப்புக்கும், அருட்செயலுக்கும் உத்தரவாதமாக நடந்துகொள்ள வேண்டும். அப்படி நடக்காவிடின் சமூகத்தில் ஒழுக்கம் நிலைபெறாது; அன்பும், அமைதியும், இன்பமும் நிலைபெறா. ஞாலம் உய்ந்து, நாமும் உய்யவேண்டுமானால், சைவநன்னெறியின் சீலம் உலகெலாம் பரவவேண்டுமென அவர் விரும்பினார். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறை நாயனாரும், பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்க்கும்படியழைத்தபொழுது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், இறைவனது திருக்குறிப்பை யறியத் திருவாலவாய்க்குச் சென்றார்.

''வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்ற ழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே''

என வினவித் திருவருட்சம்மதத்தினைப் பெற்று நின்று, மீண்டும்,

'ஞாலம் நின்புகழே மிக வேண்டுந் தென்
னாலவாயிலுறையு மெம்மாதியே'

என விண்ணப்பித்தருளினார். இவ் விண்ணப்பத்திருப்பதிகம், உலகந்தழுவிய பரந்த மனநிலையையும், பேதமற்ற அன்பினையும், உயிர்கள்யாவும் நற்கதிபெறவேண்டுமென அவருக்கிருந்த துடிப்பினையும் புலப்படுத்துகிறது. சேக்கிழார்பெருமானும் இத்திருப்பதிகத்தை வியந்து பரவியுள்ளார்.

'ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞான சம்பந்தன்'

எனவும்,

'கைச்சிறுமறியவன் கழலலாற் பேணாக் கருத்துடை
ஞானசம்பந்தன்'

எனவும் மூந்திய திருமுறைகளிற் கூறியமைக்கிணங்க, 'கல்லால் நீழல்' எனத் தொடங்கும் மூன்றாந்திருமுறைப் பொதுத்திருப்பதிகத்தில் இறைவன் திருவடியன்றி வேறொன்றையும் வேண்டாப் பெருவீரம் குறிக்கப்படுகிறது.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



## திருநாவுக்கரசு நாயனார்

பொய்யுரை நூல்சில புகலுந் தீயமண்
கையர்கள் பிணித்துமுன் கடலி லுத்திடு
வெய்யகற் றூணியாய் மிதப்ப மேற்படு
துய்யசொல் லரசர்தாள் தொழுது போற்றுவாம்.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

''கொன்றை சூடி நின்றதேவை
அன்றி யொன்றும் நன்றிலோமே''

''கல்லா நெஞ்சில் நில்லானீசன்
சொல்லா தாரோ டல்லோ நாமே''

என்னுந் திருப்பாடல்கள் சிந்தித்தற்குரியன. இவற்றைத் திருவுளத்திற்கொண்டே சுந்தரமூர்த்திநாயனரும்,

''வம்பறுவரிவண்டு மணம் நாறமலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற்பேணு
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கு மடியேன்''

என விதந்துரைத்துப் போற்றினர்.

'ஈசனுக்கன்பில்லார் அடியவர்க்கன்பில்லார்' என்பது சித்தியார். உண்மையான கடவுட் பக்திமான்கள் அடியாரிடத்தும் பக்தியுடையவராவார்கள். மெய்யுணர்வுடையோர், எல்லாப் பொருளினும் பகுப்பின்றி இறைவனைக் காண்பதே பொருத்தமெனினும், நெய்யினைப் புலப்படக்காட்டும் தயிர்போல இறைவனைப் புலப்படக்காட்டும் அடியாரிடத்து அதிக ஈடுபாடு கொள்ளுதல் இயல்பேயாகும். திருஞானசம்பந்தப் பெருமானரது அடியார் பக்தி, பெரியபுராணத்திற் காணப்படுவதுபோலவே; மூன்ருந்திருமுறைப் பாடல்களிலும் பரந்து காணப்படுகின்றது.

பரசமயச் சூழலின் நடுவே சிவதொண்டு செய்து வாழ்ந்த பாண்டிமாதேவியாரையும், மந்திரி குலச்சிறையாரையும் சிரமேற்கொண்டு போற்றுகின்றூர் காழியர் பெருமான். திருவாலவாய்த் திருப்பதிகத்தில்,

'மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை
வரிவளைக் கைம்மடமானி'

என முதற்பாடலில் மங்கையர்க்கரசியாரையும்,

'வெற்றவே யடியாரடி மிசை வீழும்
விருப்பினன், வெள்ளை நீறணியும்
கொற்றவன் தனக்கு மந்திரியாய குலச்சிறை'

என அடுத்தபாடலில் குலச்சிறை நாயனரையும் பாராட்டி, இவ்வாறே பதிகம் முழுவதிலும் போற்றியுள்ளார். திருச்செங்காட்டங் குடித்திருப்பதிகத்தில் தமது பேரன்பை, ஆன்ம நாயகனுகிய இறைவனுக்குப் புலப்படுத்தும் ஞானசம்பந்தர்,

''பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள்
பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த் தென்னைத் தவிரா நோய்
தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத் தொண்டன்
பணிசெய்ய
வெங்காட்டுளனலேந்தி விளையாடும் பெருமானே''

எனச் சிறுத்தொண்டநாயனரது அயராதபேரன்பைப் பாராட்டியுள்ளார். அவ்வாறே திருக்காளத்திப் பதிகத்தில் கண்ணப்பரின் பேரன்புடன் கலந்து பாயும், ஞானசம்பந்தரின் பக்தி வெள்ளத்தைப் பார்க்கலாம்.

வேயனைய தோளுமையோர் பாகமதுவாகவிடை
யேறிசடைமேல்
தூயமதிசூடி சுடுகாடினடமாடி மலைதன்னை
வினவில்
வாய்கலசமாக வழிபாடு செயும் வேடன்மலராகு
நயனம்
காய்கணையினலிடந் தீசனடிகூடு காளத்தி
மலையே.

என்பது அவர் புனிதவாக்கு. பதிகத்தின் ஓசைநடையிற் பக்தியின் கம்பீரமான வேகத்தைக் காண்கின்றோம்.

இவ்வாறே பலவகையானும் படிப்பவர் மனத்தைக் கவர்ந்து, சென்று, ஆன்மநாயகனுகிய இறைவனின் திருவடி கூடுகின்ற திருப்பெருமணத்திற் கலக்கச் செய்கின்ற சக்தி வாய்ந்தவை மூன்ருந் திருமுறைப்பாடல்கள். முத்தமிழ் விரகராகிய ஞானசம்பந்தரின் திருநாவில் தமிழன்னை நடம்புரியும் காட்சிகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. படித்துப்பயன் பெறுவது நம்கடனகும்.

'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் திருவடி வாழ்க'

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# நாலாந் திருமுறை

திரு மு. மயில்வாகனம் அவர்கள்; சமயப்பிரசார அமைச்சர், சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.

அப்பர்சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப்பதிகங்களை நாலாம், ஐந்தாம், ஆறும் திருமுறைகளாக வகுத்தனர் நம்பியாண்டார் நம்பியடிகள். நாலாந்திருமுறையில் நூற்றுப் பதினுறு பதிகங்கள் உண்டு. இந்த நான்காம் திருமுறையிலுள்ள பதிகங்கள் மற்றைய தேவாரம்பாடிய இருகுரவர்களதும் தேவாரப்பதிகங்களைப் பண்முறையில் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. மற்றைய இருவர்களுடைய தேவாரப் பதிகங்களில் காணப்படாத கொல்லிப்பண்ணோடு விரவிய கட்டளை வேறுபாடுகளையுடைய திருநேரிசைகள்; திருவிருத்தங்கள் இந்த நான்காம் திருமுறையிலுண்டு.

அப்பர்சுவாமிகளுடைய பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார். சிறுவயதிலேயே பல கலைகளையும் கற்றவரானுலும் உண்மைச் சமயம் யாதென அறியும் பேறின்மையினுல் சமண சமயத்தைச் சேர்ந்து சமணகுருவாகி விட்டார். அவரைச் சைவசமயத்தை அநுட்டிக்கச் செய்த புண்ணியம் அவருடைய தமக்கையார் திலகவதியாரைச் சார்ந்ததாகும். அம்மையாருடைய உளங் கனிந்த இறைஞ்சுதலுக்கிரங்கிச் சிவபெருமான் தருமசேனருக்குச் சூலை நோயினைக் கொடுத்தனர். இச் சூலை நோயே அவருடைய வாழ்க்கையிலே பெரும் மாற்றத்தை உண்டுபண்ணியது. தமக்கையாரை அவர் வந்தடைந்தபொழுது ஸ்நானஞ் செய்யப் பண்ணி அவருக்குச் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை ஓதித் திருவாளன் திருநீற்றைக் கொடுத்தனர். அப்பொழுது வாகீசர் தமக்குப் பெருவாழ்வு வந்தெய்தியதென வெண்ணி அதனைப் பெற்றுத்தரித்தனர். அம்மையார் அவரைத் திருவதிகை வீரட்டானே சுவருடைய சன்னிதானத்திற்கு அழைத்துச் சென்றனர். அவருடைய பசுகரணங்களெல்லாம் சிவகரணமாக மாறிவிட்டன. உலகம் ஈடேற; சைவ சமயம் வாழ சிவபெருமானுடைய புகழ் உலகெலாம் பரவ 'கூற்ருயின வாறு' என்னும் தேவாரப்பதிகத்தைப் பாடியருளினுர். அவருடைய சூலைநோய் நீங்கப்பெற்றது. திலகவதியாரைப் பிரேரகசத்தியாகக் கொண்டு சிவபெருமான் சூலைநோய் மூலம் அவரை ஆட்கொண்டனர். துன்பமே மனிதனை இறைவனை வணங்கச் செய்யும். தமக்கு நல்வாழ்வை உதவிய அந்தச் சூலை நோயெனக் கருதி அச்சூலை நோயினை வணங்குகின்றனர்.

சமணர்கள் தருமசேனர் தங்கள் சமயத்தை விட்டகன்றமையைச் சகிக்க முடியாதவர்களாய்ப் பல்லவ அரசனுடைய உதவியுடன் அவருடைய உயிருக்குத் தீமை விளைக்கக்கூடிய சதிகளைப் புரிந்தனர். நீற்றறையிலிட்டனர், நஞ்சு கலந்த பாற்சோற்றை அருந்தக் கொடுத்தனர். யானையிடறும் படியாக ஏவி

னர். எல்லா அபாயங்களிலிருந்தும் உயிர் தப்பினர். ஒவ்வொரு அபாயத்தினின்றும் அவர் தப்பியதற்கு அவர் பாடிய தேவாரப்பதிகங்களே சான்றாகவுள்ளன. வீரம் என்பது துட்டர்களால் ஒருவனுக்கு நேரும் துன்பங்களுக்கு அஞ்சாமையாகும். இறைவனுடைய திருவடியைச் சரணுகவடைந்தவர்களே உண்மையான வீரம் படைத்தவர்கள். வாகீசப்பெருமான் தன்னை யானையிடற வந்த பொழுது 'சுண்ணவெண் சந்தனச் சாந்தும்' என்ற தொடக்கத்தையுடைய தேவாரப் பதிகத்தைப் பாடியருளினுர். 'அஞ்சுவதுயாதொன்றும் இல்லை அஞ்சவருவதுமில்லை' என்றனர். யானை அவரை வணங்கி அகன்று தன்னை ஏவினவர்களையே துரத்திக் கொன்றது.

அவரைக் கல்லுடன் பிணைத்துக் கடலிலிட்ட பொழுது. 'சொற்றுணை வேதியன்' என்னும் நமச்சிவாயப்பதிகம், கல்லையே தோணியாக மாற்றியது. எதிரேயுள்ள திருப்பாதிரிப் புலியூரென்னும் தலத்தைச் சென்றடைந்தனர். கல்லே தோணியானமை வாகீசப் பெருந்தகையின் தவத்தின் பெருமையினையும், பஞ்சாக்கரத்தின் சிறப்பையும் காட்டுகின்றது. சமணர்களுடைய பாழியிற் தான் சேர்ந்து வாழ்ந்தமையைப் பற்றியும், அதனுல் தான் அடைந்த சிறுமைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்ற தேவாரங்களும் இந்நான்காம் திருமுறையிலுண்டு.

சிவபெருமான் **சர்வஞ்ஞர்**; சுவதந்திரர் சர்வவல்லபமுடையவர்; ஆன்மா சிற்றறிவுடையது; பரதந்திரமுடையது அறிவிக்க அறியும் வல்லபமுடையது. சிவபெருமானே பதி. ஆன்மாக்கள் அவருடைய அடிமைகள், என்ற உண்மைகளை நான்காம் திருமுறையிலுள்ள திருவிருத்தங்களும்; திருநேரிசைகளும் விளக்குகின்றன. ஐயாறன் அடித்தலம் சிந்திப்பரியன. சிந்திப்பவர்க்குத் தேன் போலத் தித்திப்பன. ஆன்மாவைப் பந்தித்த பாசங்களை வீட்டுவன. முத்திகொடுப்பன. என்ற சைவ சித்தாந்தக் கருத்துக்களை வாரி வாரி வழங்கியுள்ளனர்.

சிதம்பரம் ஞானகாயம். கனகசபையின் மேலுள்ளது. அதில் நடராசப் பெருமான் பஞ்சகிருத்திய நடனம் புரிவர். அப்பர்சுவாமிகள் தில்லைக்குச் சென்றனர். நடராசப்பெருமானுடைய சன்னிதானத்தை யடைந்தனர். கருவிகரணங்களெல்லாம் ஒடுங்கின. ஒருமையுடன் அவரைத்தரிசித்தனர். மொழிக்குமொழி தித்திக்கும் தேவாரப் பதிகங்களைப் பாடினர். 'கருநட்டகண்டனை' என்னுந் திருவிருத்தத்தையுடைய பதிகத்தில் (என்று வந்தாயென்னு மெம்பெருமான் றன்றிருக்குறிப்பே) என்று இறைவன் தமக்கு உணர்த்திய திருவருட்டிறத்தைக் குறிப்பித்துப் பாடியருளினுர்.

"ஏரின் சிவபோக மிங்கிவற்கே யென்னவுழ
வாரங்கொள் செங்கையர்தா னாரம் வைப்ப
தெந்நாளோ"

— தாயுமானவர்

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
அப்பர்சுவாமிகள் அருளிச்செய்த
**திருக்குறுந்தொகை என்னும்**

# ஐந்தாந் திருமுறை

[வித்துவான், சைவப்புலவர் **க. கணபதிப்பிள்ளை** B. A.,]
விரிவுரையாளர் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

இறைவன் திருவருளை நல்கும் அருட் சுரங்கமாக அமைந்தவை திருமுறைகள். நல்லருள் மழைபொழிந்த திருநாவுக்கரசர்தம் வாழ்வும், வாக்கும் நாளும் நலம் நல்குவன; உலக மாந்தர்க்கு மிக்க உறுதுணையாக விளங்குவன; ஐந்தாம் திருமுறையாக அமைந்துள்ள திருக்குறுந்தொகை பண்அமைப்பை உடையதன்று; யாப்புமுறையை அடிப்படையாகக் கொண்டது; பதிகத் தொகையால் திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தம் என்பன வற்றிலும் கூடியது. தாண்டக வேந்தரின் திருத்தாண்டகம் அமைந்துள்ள 6-ந் திருமுறைக்கும் இதற்கும் அமைப்பில் வேறுபாடுண்டு. திருக்குறளுக்கும் கம்பராமாயணத்திற்கு மிடையே காணப்படுகின்ற ஒற்றுமை வேற்றுமையோடு இவற்றை ஒருவாறு ஒப்பிடலாம்.

வள்ளுவன் குறளில் செறிவும் ஆழமும் அதிகம்; கம்பன் பாடலில் உணர்ச்சிப்பெருக்கும் குழைவுமதிகம். இவ்விரண்டு தன்மையையும் அப்பர் சுவாமிகளின் திருக்குறுந் தொகையிலும் திருத்தாண்டகத்திலும் முறையே காண்கின்றோம். திருக்குறள்போல அடிப்படையான உண்மைகளைக் கூறுவதற்கோர் கருவியாகக் குறுந்தொகை என்னும் குறுகிய சீர்களையுடைய பாவினத்தை அப்பர் சுவாமிகள் கையாண்டுள்ளார் எனலாம்.

ஒருமா கூவிளம் கூவிளம் கூவிளம் எனவருதல் இதன் கட்டளையடியாகும். பிற்காலத்தவர் இதனைக் கலிவிருத்தத்தில் அடக்குவர். சங்க இலக்கியத்தில் வரும் குறுந்தொகை என்பது அடிபற்றி வந்தபெயர். இது சீர் பற்றி ஏற்பட்டபெயர்.

''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்னும் திருமொழியைப் பயன்படுத்தாதார் இலர். இதுபோன்ற வாக்குகளைத் திருக்குறுந்தொகையிலே காண்பதனால் தாண்டக வேந்தரைச் ''சொற்குறுதிக் கப்பர்'' எனச் சொல்ல வைத்தது இத்திருமுறையே எனலாம். பின்வரும் திருப்பாடலை நோக்குவோமாயின் இதன் பொருளாழம் புலனாகும்.

> '' கொக்கிறகர் குளிர்மதிச் சென்னியர்
> மிக்க ரக்கர் புரமெரி செய்தவர்
> அக்க ரையின ரன்பிலா லந்துறை
> நக்கு ருவரும் நம்மை யறிவரே''

அரிய பெரிய கருத்துக்கள் பல சிறிய உருவம் பெற்று இத் திருப்பாடலில்

அடங்கிக் கிடக்கின்றன. 'கொக்கிறகர்' என்பது கொக்குவடிவில் நின்ற அசுரனைச் சிவபெருமான் அழித்து அவன் இறகினைச் சூடிய வரலாற்றைச்சுட்டியுரைக்கின்றது. 'மிக்கரக்கர் புரமெரி செய்தவர்' என்பது செருக்கிய (மிக்க) திரிபுர அரக்கர்களின் மூன்று கோட்டைகளை எரியச் செய்தமையைக் குறிக்கின்றது. 'அக்கரையினர்' என்பது அக்குமணி மாலையை அரையிலே கட்டியவர் என உரைக்கின்றது. 'நக்குருவர்' என்பது நகுதற்குக் காரணமான தோற்றத்துடன்கூடிய உருவம் உடையவர் எனத் தெரிவிக்கின்றது.

திருக்குறுந்தொகையில் 100 திருப்பதிகங்கள் உள. அவற்றுள் 120 பதிகங்கள் பொதுவானவை. 10 தலங்களுக்கு இவ்விரண்டு பதிகங்கள் உள. 68 தலங்களுக்கு ஒவ்வொரு பதிகம் உள்ளன. அப்பர் சுவாமிகளின் பதிகங்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் பத்துத் தேவாரங்களை யுடையன. 11 திருப்பாடல்களையுடைய 22 திருப்பதிகங்களும், 12 திருப்பாடல்களையுடைய 2 திருப்பதிகங்களும், 30 திருப்பாடல்களையுடைய சித்தத் தொகைத் திருக்குறுந்தொகையும் இத் திருமுறையில் காணப்படுகின்றன. 13 பதிகங்களின் சில திருப்பாடல்கள் மறைந்து விட்டன. எல்லாமாக 1015 திருப்பாடல்கள் இப்போது உள்ளன.

சைவசமயிகள் உணவு அருந்தத் தொடங்கும்பொழுது ஓதுகின்ற "அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" எனத் தொடங்கும் திருப்பதிகம் முதலாவதாக நம்பியாண்டார் நம்பியாரால் இத்திருமுறையில் வைக்கப்பட்டிருக்கின்றது. இது, எமக்கு உணர்வும் உணவும் அளிக்க வல்லது இத்திருமுறை என்பதைக் குறிப்பாகக் காட்டுவதாகும்.

அப்பர்சுவாமிகள் நீற்றறையில் இருந்தபொழுது பாடி உய்தி பெற்றதாகிய "மாசில் வீணையும் மாலைமதியமும்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அறியாத சைவர் இலர். இதுவும் திருமறைக் காட்டில் திருக்கதவுகளைத் திறப்பித்து அற்புதத்தை நிகழ்த்திய,

"பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே"

எனத் தொடங்கும் திருப்பதிகமும் இத்திருக்குறுந்தொகையே.

அப்பர் சுவாமிகள் உழவாரத் தொண்டு செய்யும் பொழுதும் ஒரு தலத்திலிருந்து மற்றோர் தலத்திற்குச் செல்லும்பொழுதும் திருக்குறுந்தொகை பாடியருளினார். திருக்குறுந்தொகை பாடியருளிய தலத்திலே திருத்தாண்டகம் முதலியவற்றையும் பாடியுள்ளார். எனினும் மிக்க மன அடக்கம் ஏற்பட்டுச் சிந்தையைத் திருவருளில் திளைக்க வைக்கும்பொழுது திருக்குறுந் தொகையைப் பாடியருளினார் என்பதற்கு ஐயமின்று. அதனாலேயே திருக்குறுந்தொகைப் பதிகங்கள் திருக்குறள்போல மிக்க செறிவுடையனவாகத் திகழுகின்றன. அதே வேளை அளப்பெரும் அருளூற்றுகவுமுள.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் வாழ்க்கையில் நடந்த அற்புத சம்பவங்களைச் சிலர் உண்மையோ, வெறுந்

தத்துவப் பொருளாக அவை அமைந்தனவோ என நினைப்பதுண்டு. யாவும் உண்மை என்பதற்குத் தக்க அகச் சான்றாக இத்திருமுறைப் பாடல்களிற் பல அமைந்துள்ளன. அப்பர்சுவாமிகள் கல்மேல் மிதந்த வரலாற்றைப் பின்வரும் திருநீலக்குடித் திருப்பாடல் உரைக்கின்றது.

"கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே"

சம்பந்தர் படிக்காசு பெற்றமை, இறைவன் தம்மை வா என்று அழைத்தமை என்பவற்றைத் திருவாய்மூர்த் திருப்பதிகத்திலும், சமணர்களை அழித்தமையைத் திருப்பழையாறை வடதளித் திருப்பதிகத்திலும் சுட்டிக் காட்டுகின்றார் அப்பர்சுவாமிகள்.

ஒவ்வொரு திருப்பதிகத்தின் இறுதித் திருப்பாடலிலும் இராவணனைப் பற்றி உரைப்பது அப்பர்சுவாமிகளின் வழக்கமாகும். இது இறைவன் பேரருளாளனாகித் தீமைசெய்த இராவணனுக்கு இரங்கியதுபோல, யாவர்க்கும் இரங்குபவர் என்பதனைச் சுட்டிக் காட்டுவதென உரைப்பர்.

ஒவ்வொரு திருமுறையும் தனக்கெனச் சில சிறப்பியல்புகளை உடையதாக இருக்கின்றது. 'கண்டதென் உள்ளமே', 'கொண்டதென் உள்ளமே' என உள்ளத் திருக்குறுந்தொகைத் திருப்பாடல்கள் முடிகின்றன. அகர வரிசையை முதலாகக்கொண்டு முப்பது பாடலாக விரிகின்றது சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை. "ஙகர வெல்கொடி யானொடு நன்னெஞ்சே' என ஙகரத்தை முதலெழுத்தாக வைத்துப் பாடியருளிய அருமைப்பாடு நோக்கத்தக்கது. இடபம் படுத்திருக்கும்போது 'ங' போன்றிருப்பதனால் இடபக் கொடியானை "ஙகரவெல் கொடியான்" என உரைத்தருளினார்,

மன எண்ணத்தைத் தெரிவித்த மனத்தொகைக் குறுந்தொகை 'எந்தை பிரானாரே' என ஒவ்வொரு திருப்பாடலிலும் முடிகின்றது. இலிங்க புராணத் திருக்குறுந்தொகை சிவ லிங்கதத்துவம், சரியை வழிபாடு, பிரமன், திருமால், அடிமைத்திறம் உரைப்பது. 'இது உற்றூர் அங்கு இவரே' என முடிகின்றது. 'மறக்கிற்பனே' 'தொழற்பாலதே' என முடியும் திருப்பாடல்களையுடைய பதிகங்கள் முறையே அவ்வப் பெயரால் வழங்கப்படுகின்றன. அடிதோறும், வண்ணம் என்னும் சொல்லையுடையதாகத் திருவையாற்றுத் திருப்பதிகம் ஒன்று அமைந்துள்ளது.

காலனூதர்களே! கண்டுகொள்ள அரியவனின் உள்ளத்தைக் கனியச் செய்து நான்செய்த அடிமைத் திறத்தைக் கேட்பீரேயானால் தொண்டரைச் சூழாதீர்கள்! என ஆரம்பிக்கும் காலபாசத் திருக்குறுந்தொகை கோளறு திருப்பதிகம் போலப் பயன் தரவல்லதாகும்.

"புழுவுக்கும் குணம் நான்கு, எனக்குமதே" எனவும், 'மலையேவந்து வீழினும் மனிதர்காள்! நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்" எனவும், "மனிதர்காள்! இங்கே வம்மொன்று சொல்லுகேன், கனிதந்தாற் கனி உண்ணவும் வல்லிரே" எனவும், வரும் அருமருந்தன்ன திருமொழிகளையுடைய திருப்பூந்துருத்தித் தனித் திருக்குறுந்தொகை மிக்க அருமைப்

பாடுடைய ஒன்றாகும். 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கி... பத்துமுடிய எண்ணலங்காரத்துடன் பாடியருளிய திருப்பதிகம் அப்பூதியடிகளின் புதல்வரின் விடந்தீர்த்த திருப்பதிகமாகும். அதேபோன்று "ஒன்று வெண்பிறை" எனத் தொடங்குந் தனிக்குறுந்தொகை இறைவனின் திருக்குணங்களை விபரிப்பதாகும். இவ்வாறே ஒவ்வொரு திருக்குறுந்தொகையும் தனக்கெனச் சில சிறப்பியல்புகளைப் பெற்று எம்மைத் திருவருளிற் திளைத்துய்ய வழிகாட்டுகின்றன.

இறைவனை முன்னிலையாக வைத்தும், படர்க்கையாக வைத்தும் பாடிய திருப்பாடல்களும் நெஞ்சை நோக்கிப் பாடியும், தம்மைத் தலைவியாகக் கொண்டும், மக்கள் அன்றாடம் உரைக்கும் பழமொழிகளைக் கையாண்டும் பாடியருளிய திருப்பாடல்களும் இத் திருமுறையிற் காணப்படுகின்றன. இயற்கைக் காட்சியையும் இறைவன் மாட்சியையும் கற்பனை நயத்துடன் இணைத்துக் காட்டும் பின்வருவது போன்ற திருப்பாடல்களும் பல உள.

'பலவும் அன்னங்கள் பன்மலர் மேல்துஞ்சும்
கலவ மஞ்ஞைகள் காரென வெள்குறும்
உலவு பைம்பொழில் சூழ்திரு வொற்றியூர்
நிலவி னானடி யேயடை நெஞ்சமே''

"நெஞ்சே! பொழிலில் அன்னங்கள் பலவும் பல மலர்கள்மேல் உறங்கும்; அப்பொழிலை மயில்கள் மேகங்கள் என எண்ணிச் செல்லும்; பின் பொழிலென உணர்ந்து அவை நாணும். அத்தகைய சிறப்பையுடைய திருவொற்றியூரில் விளங்குகின்ற இறைவன் திருவடிகளை அடைவாயாக" என்கின்றார் அப்பர்சுவாமிகள்.

தலைவனைக் கண்டு மயங்குகின்றாள் தலைவி. அதனை அவளின் தாய் அறிந்துவிட்டாள். தாய் கூற்றாக அகப்பொருட் கருத்தமைந்த பாடல்களையுடைய திருப்பதிகத்தில் ஒன்றாகத் திருவாவடுதுறைப்பதிகம் அமைந்துள்ளது. அதில் ஒரு திருப்பாடல் வருமாறு:

''பாதிப் பெண்ணொடு பாகத்தன் பன்மறை
ஓதி யென்னுளங் கொண்டவ னொண்பொருள்
ஆகி ஆவடு தண்டுறை மேவிய
சோதி யேசுட ரேயென்று சொல்லுமே''

"இப்பெண், தனது திருமேனியில் பாதியிற் பெண்ணை யுடையவன் என்றும், பலவேதங்களை ஓதி என் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டவனே! என்றும், உலகத்துப் பொருள்களுக்கெல்லாம் ஆதியானவனே! என்றும், திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் சோதியே! சுடரே! என்றும் சொல்லுந் தன்மை யுடையவள்." என்பது இதன்பொருள்.

பன்னிரு திருமுறைகளும் சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரத்தின் பொருளை முறையே உரைப்பன என்பர். ஐந்தாஞ் சூத்திரம் உயிர்களை இயக்குபவன் இறைவனாதலின், அவன் செய்யுமுபகாரத்தை உரைப்பதாகும். அதற்கேற்ப இத்திருமுறை அமைந்திருப்பதைத் திருவருட் செல்வர் அறிவர்.

'' இல்லக் கோலமும் இந்த இளமையும்
அல்லற்கோலம்''

''ஆரியந் தமிழோடிசை யானவன்,''

''அஞ்சியாகிலும் அன்புபட்டாலும் நெஞ்சம்
வாழி நினை
நின்றியூரரை,'' ''தாயினும் நல்ல சங்கரன்''

என்பனவும்,

''நன்று நோற்கிலென்! பட்டினி யாகிலென்!
குன்றம்ஏறி இருந்தவம் செய்யிலென்!
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்!
என்றும் ஈசன் என்பார்க்கன்றி இல்லையே''

எனவும்,

''சிந்தையிற் சிவனாய்நின்ற உருவினை''

எனவும் சைவசித்தாந்த நெறிநின்று அப்பர் சுவாமிகள் உரைத்தவற்றை உளத்திருத்தி உய்வோமாக.

ஐந்தாந்திருமுறையின் சிறப்பு பலவாறு ஆராய்வதற்குரியது. சைவசித்தாந்தக் கருத்துக்கள், புராண வரலாறு, அப்பர் அருள்வாக்கு, சரிதச் சான்று, தலங்களின் சிறப்பு, முழுமுதற் கடவுளின் ஒப்பற்ற திருவருட் பெருமை, திருவைந்தெழுத்து, திருநீறு என்பவற்றைப் போற்றவேண்டியதன் அவசியம், சமணரைத் திருவருளினால் அழித்த சிறப்பு முதற் பலவற்றை இத்திருமுறை வாயிலாக அறியத்தக்கதாக இருப்பதோடு எல்லாவற்றிற்கும் மேலாக நாம் நாளும் நல்லாழ்வு வாழ்ந்து இறைவன் திருவருளைப் பெறத்தக்க நற்றுணையாகவும் விளங்குகின்றது ஐந்தாந் திருமுறை.

''இலங்கை வேந்தன் இருபது தோளிற்
விலங்கை சேர்விர லான்விச யமங்கை
வலஞ்செய் வார்களும் வாழ்த்திசைப் பார்களும்
நலஞ்செய் வாரவர் நன்னெறி நாடியே'

திருச்சிற்றம்பலம்


உ
சிவமயம்

நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று நீ ஆத்மா. ஆத்மா ஒருநாளும் அழியாது. இது மகான்களுடைய அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது. ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது, தரும நெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் முன்னிலை என்று சாதனை செய்.

கடவுள் உள்ளும் புறம்பும் உள்ளவர்.

கொழும்பு. சிவதொண்டன்

With the Best Compliments of

**JAYARAM & Co.**

**GENERAL RICE MERCHANTS & COMMISSION AGENTS**

# JAYARAM & CO.

**164, Old Moor Street,**

**COLOMBO—12.**

# "TRICO"

சிறந்த மிருதுவான

## நைலோன்

**எந்தச் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றது.**

விரைவில் உலருவது

**இஸ்திரிக்கை செய்யவேண்டியதில்லை.**

கெட்டியான நிறம்

தயாரிப்பாளர் :

**லங்கா ட்ரைகொட்டிங்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**

29 3/2, கபூர் கட்டிடம்,

கொழும்பு... — 1.



# JEWELLERY

*WITH*

*HIGH FASHION APPEAL*

Exquisitely Designed with Pure Sovereign Gold

**AT MODERATE PRICES**

Ear Drops, Bracelets, Necklaces, Rings Etc.

# "JEWELLERS"

**SHAMUNA LEBBE & COMPANY**

***170, Second Cross Street, PETTAH,***

**COLOMBO — 17**

*Grams:* **FILIGREE** *Phone:* **21447**

---

## யாழ்ப்பாண

## ஐக்கிய வியாபாரச் சங்க முகாமையாளர்

(ஆஸ்பத்திரிக்கு முன்பாக)

**காய்கறி பழவகைகள்**

**பால் ஐஸ்கிறீம்**

முதலியன விற்பனைசெய்யும் நிலையமொன்றைத்
திறந்திருப்பதை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றனர்.

**இந்நிலையம் காலை 8-00 மணிமுதல் மாலை 6-30 மணிவரை விற்பனைக்குத் திறந்திருக்கும்.**

அழகிய செருப்பு

சப்பாத்து வகைகளுக்கு

## பிரகாஸ் ஸ்ரோர்ஸ்

31, 33, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

நம்பிக்கை, நாணயம்

நயம் மிக்க

பலதரப்பட்ட அழகிய

செருப்பு, சப்பாத்து வகைகளுக்கு

## பிரகாஸ் ஸ்ரோர்ஸ்

*With the best compliments of*

## MAHARAJAH STORES

Dealers in Rice
&
Ceylon Products

**103, Old Moor Street,**
**COLOMBO-12.**

**திருமுறைக் கழகம்**

*திருவுடன் பொலிய*
*நேசத்துடன் பூச நன்னாளில்*
*நல்லாசி கூறி நன்கு*
*வாழ்த்துகின்றோமே.*

## GEORGE TRADERS

*General Merchants &*
*Commission Agents*

***Dealers in:*** **Rice Paddy, Groceries, Provisions & Ceylon Products**

91, Old Moor Street,
**COLOMBO-12.**

*With the best compliments from*

**Galv, Bucket Manufacturers**

## ELBEHEM HOUSE

Maviddapuram,
**TELLIPPALAI.**

*With the Best Compliments*
*of*

**M/S. Navathania Stores**

*482, 484, Madampitiya Rd.,*
*COLOMBO — 14.*

நங்கையர்க்கு ஏற்ற நகைகள்

**நகைகள்**

★ நம்பிக்கை
★ நாகரீகம்
★ அழகு
★ உறுதி

*இவற்றினல் உங்கள் மனதுக்கு*
*மிகவும் திருப்தி அளிப்பவை.*

**S. தம்பிப்பிள்ளை அன் சன்**

191, K. K. S. ரோட்,
யாழ்ப்பாணம்.

உங்கள் கார், லொறி
முதலான வற்றிற்குத் தேவை
யான பெயறிங்ஸ்கள் வில்லுத்
தகடுகள் சகாய விலையில்
எப்பொழுதும் எடுக்கக் கூடிய
★ இடம் ★

**SRI MURUGAN**
**TRADING STORES**

488 - 492, Skinners Road, South
COLOMBO 10
CEYLON.

மக்கள் விரும்புவது எது?

★ சந்திரா ஐஸ் பழம்!
★ சந்திரா ஐஸ்கிறீம்!
★ சந்திரா ஐஸ் சொக்!
★ சந்திரா ஐஸ் பார்!

என்பனவே!

உரிமையாளர்:

**என். சுந்தரராஜ நாயுடு**

இல, 108, சிவன்கோயில் வடக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஆருந் திருமுறை

பண்டிதை **தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள்
*(விரிவுரையாளர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.)*

தோத்திரமும் சாத்திரமுமாய் விளங்குபவன் இறைவன். அவனைப் போற்றித் துதிப்பதற்கு எழுந்த தோத்திரங்கள் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. சாத்திரங்களும் பதினுன்கு வகையினதாய் அமைந்துள்ளன. திருமுறைகளில் முதல் எட்டுத் திருமுறைகளையும் பாடியவர் சமயகுரவர். மெய் கண்ட சாத்திரங்களில் மூன்று தவிர்ந்த பதினென்றையும் பாடியவர் சந்தானகுரவர். சமய குரவரில் மணிவாசகர் தவிர்ந்த மற்றைய மூவரும் பாடியவற்றைத் தேவாரங்கள் எனப் போற்றுகிரேம். தேவாரங்களை ஏழு திருமுறைகளில் அடக்கியுள்ளனர். இவற்றில் முதல் மூன்றிலும் சம்பந்தர் தேவாரங்களும், அடுத்த மூன்றிலும் அப்பர் தேவாரங்களும், ஏழாவதில் சுந்தரர் தேவாரங்களும் அடங்கியுள்ளன. இவற்றில் ஆருந்திருமுறையில் சில பாடல்களின் சிறப்பை இக்கட்டுரையிற் காண்போம்.

ஆருந்திருமுறை தாண்டகச் செய்யுட்களால் அமைந்தது. தாண்டகம் என்பது யாப்புவகைகளில் ஒன்று. பண்ணேடு பாடப்படவேண்டியது. தாண்டகச் செய்யுட்களைப் பாடியவர் அப்பர் சுவாமிகளே. அதனுல் அவருக்குத் தாண்டகவேந்தர் என்ற சிறப்புப் பெயர் உண்டு. அவருடைய பாடல்கள் அனைத்தும் இறைவனை நோக்கி மிக உருக்கமாக விண்ணப்பம் செய்யும் முறையிலே அமைந்தவை. சம்பந்தர் கொஞ்சிப்பாடினுர்; சுந்தரர் மிஞ்சிப் பாடினுர்; அப்பர் கெஞ்சிப்பாடினுர் என்று கூறுவர் பெரியோர். கெஞ்சிப்பாடவேண்டிய தகுதியுடையவர்களே நாங்கள். எனவே எமக்கு அப்பர் சுவாமிகளுடைய பாடல்களே பாராயணம் செய்வதற்கு ஏற்றவை. அதிலும் தாண்டகச் செய்யுட்கள் யாவும் உலக வர்ணனைகளின்றி இறைவன் பெருமையையும் எமது சிறுமையையும் விளக்கி அவனுக்கு வணக்கம் செலுத்துவதாக அமைந்தவை. உலகைத் துச்சமாக மதித்து, இறைவன் துணையுடையோர்க்கு எதுவித அச்சமுமேற்பட இடமில்லையென்பதை விளக்குபவை. அதுநிற்க,

நாயனுர் அவர்கள் முதன் முதல் திருத்தாண்டகம் பாடிய சந்தர்ப்பத்தைக் கவனிப்போம். காஞ்சியிலே கொடி கட்டியாண்ட பல்லவமன்னன் திருநாவுக்கரசரை அழைத்து வரும்படி தூதனுப்புகிறுன். தூதுவர்களாகச் சென்ற அமைச்சர்களும் சேனுவீரர்களும்

"இன்று நுமை யரசரழைத் தெமை விடுத்தான் போதுமென"க் கூறினர். அத்தருணத்தில்,

"நாமார்க்கும் குடியல்லோம் என்றெடுத்து நான் மறையின்
கோமானை நதியினுடன் குளிர்மதிவாழ் சடையானை
தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண்டகம் பாடி
யாமாறு நீரழைக்கும் அடைவிலமென் றருள் செய்தார்"

முன்பு குறிப்பிட்டபடி முதன்முதல் பாடிய திருத்தாண்டகமான படியால் சேக்கிழார் சுவாமிகள் இவ்விடத்தைக் குறிப்பிடும்போது "தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண்டகம்" என்று குறிப்பிடுகிருர். தேம் என்பது சொல்லினிமையையும் ஓசையினிமையையும் மாலை என்பது ஒருபாட்டினுள்ளே பல பெயரும் தொடர்ந்து வந்து ஓரிடத்து முடிவுறும் தன்மையையும், செந்தமிழ் என்பது நிரம்பிய தமிழ்

னினிமையையும், இன் என்பது பொருளி னினிமையையும், செழுமை என்பது பயனினி மையையும், திரு என்பது இறைவனது தன்மை பற்றிய நிலைமையையும்; தாண்டகம் என்பது யாப்பையும் பண்வகையையும் உணர்த்தின என்று **C. K. S.** முதலியார் அவர்கள் தமது பெரியபுராண உரையில் குறிப்பிடுகிறார்.

இம்முதற் சந்தர்ப்பத்தில் திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பட்ட திருத்தாண்டகம் மறு மாற்றத் திருத்தாண்டகம் என்று கூறப்படும். அம்முதற்பாடல்,

> ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
> நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்
> ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
> இன்பமே எந்நாளும் துன்பமில்லை
> தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
> சங்கரனைச் சங்கவெண் குழையோர்காதில்
> கோமாற்கே நாமென்றும் மீளா வாளாய்க்
> கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே''

இம்முதற் பாடலிலேயே சுவாமிகளின் அருள் வீரம் புலப்படுகிறது. ''யார்க்கும் குடியல்லோம்'' என்றுகூற ஒரு முடியாட்சியிலே எத்தகைய துணிவு வேண்டும்? இது எங்கிருந்து அப்பருக்கு வந்தது. சேக்கிழார்சுவாமிகள் பெரியபுராணத் தில் அடியார்கள் பெருமையை,

> ''ஆரங்கண்டிகை ஆடையுங் கந்தையே
> பாரமீசன் பணியல தொன்றிலார்
> ஈரநெஞ்சினர் யாதுங் குறைவிலர்
> வீரமென்னால் விளம்புந் தகையதோ''

என்று கூறுகிறார்.

''சொற்குறுதிக்கப்பர்'' என்பது மிகப் பொருத்தமானதே. பட்டத்துயானையைக் கண்டு அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை யென்றதும் கயிலையைக் காணச்சென்ற போது ''திரும்பிப்போ'' என எம்பெருமானு கிய முதியவர் பணித்தபோது ''மாளுமிவ்வுடல் கொண்டு மீளேன்'' என்றதும் அவர்களுக்கு இருந்த வீரத்தையும் உறுதிப்பாட்டையும் காட்டுகிறது. எல்லாம் சிவன்செயல் என்றிருப் போருக்கு உலகில் பயமேது?

சுவாமிகள் சிதம்பர நடராசப் பெருமானைத் தரிசித்துப்பாடிய திருத்தாண்டகம் கோயிற் திருத்தாண்டகம் என்று சொல்லப்படும். அங்கே ''பெருமானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' என்று அழுத்திப்பேசுகிறார். நாயன் மார்கள் வாழ்ந்த வாழ்க்கை இதுதான். அவர் கள் தமது வாழ்க்கையின் ஒருபகுதியாக இறை வழிபாட்டைக் கொள்ளவில்லை. வாழ்க்கையை முழுமையாக இறைவழிபாட்டிலேயே செலவு செய்தனர். அதனாற்றான் ''பிறவாநாளே'' என்றனர்.

> ''கற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்
> காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதினானை
> அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள் செய்வானை
> ஆரும் புகுவானை அறிந்தோம் என்றே
> மற்றாரும் தன்னொப்பார் இல்லாதானை
> வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப்
> பெற்றானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
> பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''

இன்னும் போற்றித் திருத்தாண்டகம், தனித் திருத்தாண்டகம், திருவினைத் திருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம் முதலியவற்றையும் நாயனார் பாடியுள்ளார். ஆறுந்திருமுறையில் 981 திருத்தாண்டகப்பாடல்கள் இடம்பெற் றுள்ளன.

பல இடங்களில் உடம்பின் இழிநிலைபற்றிப் பாடுகிறார். நாம் மரணிக்கும் போது ஏற்படும் அவல நிலைகளையும் விளக்குகிறார்.

> ''ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கைவிட்டு
> ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
> மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
> மயானத்தில் இடுவதன்முன் மதியஞ்சூடும்
> ஐயனார்க்கு ஆளாகி அன்பு மிக்கு
> அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள்பாதம்
> கையினால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
> கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே''

எமது உடம்பைவிட்டு உயிர் பிரியும்போது ஏற்படும் அவஸ்தைகளையும் பின்பு நடைபெறும் ஈமக்கிரியைகளையும் கூறி அதற்குமுன்பே இறைவனுக்கு ஆளாகும் நிலையை நாமடைந்து விடவேண்டுமென அறிவுறுத்துகிறார். மற்றோ ரிடத்தில் ''கூற்றங் குமைப்பதன்முன் பூவார் அடிச்சுவடு என்மேற் பொறி'' என்று வேண்டு வதும் நோக்கற்பாலதாகும்.

அடிகளுடைய தாண்டகச் செய்யுட்களில் கயிலைத் திருத்தாண்டகம் மிகச் சிறப்பு வாய்ந்தது. காலை, மாலை பாராயணம் செய்வதற்கு ஏற்றது.

*''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி*
*மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி*
*ஊற்றாகி உள்ளத் தொளித்தாய் போற்றி*
*ஓவாத சத்தத் தொலியே போற்றி*
*ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி*
*ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி*
*காற்றாகி எங்குங் கலந்தாய் போற்றி*
*கயிலை மலையானே போற்றி போற்றி''*

இறுதியில் பூம்புகலூர் என்னுந் தலத்திலே "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" என்று பாடுகிறார்.

*''மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்*
*புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்*
எனப்புகன்று
*நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி*
*அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட*
*வரசமர்ந்திருந்தார்''*

என்பது பெரியபுராணம். உனது திருவடியல்லாமல் வேறுபற்று இல்லை. வேறு எதனையும் எண்ணேன். உடம்பினுள்ளே ஒன்பது துவாரங்களை வைத்தாய். சாவு வந்த காலத்தில் அவை யாவும் அடைபடும்போது நான் ஒன்றையும் உணரமாட்டேன். உன் திருவடிக்கே வருகின்றேன் எனப்பாடி சிவானந்த ஞான வடிவாகி இறைவரது திருவடிக்கீழ் அமர்ந்தார். அந்தத் தினமே சித்திரைச் சதயமாகும். இத்தினத்தில் அடிகளுடைய குருபூசை கொண்டாடுவதுடன் அவர்களுடைய திருத்தாண்டகப் பாடல்களையும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதுவது சைவப் பெருமக்கள் கடமையாகும்.

*திருச்சிற்றம்பலம்*


இல்லந்தோறும் நறுமணங்கமழ
இல்லம் எங்கும் இன்பம் பொங்க
வாசம் பரப்பி வாழ்வு சிறக்க
புத்துணர்ச்சி யூட்டும்
★ சிவபாலன் பத்திகள்
★ சிவராணி பத்திகள்
★ சீதாதேவி பத்திகள்
உபயோகியுங்கள்

**K. S. பாலசுப்பிரமணியம்**
83, மெசென்சர் வீதி,
கொழும்பு-12.

தொலைபேசி அலுவலகம்: 31929 தொலைபேசி இல. 83783

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்


# ஏழாந் திருமுறை அல்லது சுந்தரதத்துவம்

திரு. இ. சுந்தையா B. A. (sp.)

உலக சரித்திரப் பரப்பில் எந்த நாடும், எந்த மக்களும் சிறப்புற்று வாழ்ந்தார்கள என்று சொல்லப்பட்டிருந்தால், அந்த நாட்டை அந்த மக்களை அவ்விதமான சிறப்பைநோக்கிச் செல்லத் தூண்டிய பெருஞ்சிந்தனையாளர்களைக் காணுமல் இருக்க முடியாது .உலகந் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை, கிழக்க, மேற்க, வடக்கு, தெற்கு என்ற வேறுபாடின்றிக் காலத்துக்குக்காலம் சிறந்த சிந்தனையாளர்கள், தத்தமது நாட்டுமக்களுக்கும் பாரம்பரியத்திற்கும் சூழல்களுக்கும் ஏற்பச் சிறந்த தத்துவங்களைச் சிந்தனைச் செல்வங்களை, அள்ளி விதைத்து மக்கள் மனத்தில் ஆர்வத்தை எழுப்பிச் செயலாற்ற வைத்து வாழ வைத்தார்கள் என்பதையே காண்கின்ரேம். மிகவும் சமீபகாலத்தில் உலகில் தோன்றிய பெரியராச்சியங்கள்கூட இப்பொதுவிதிக்கு விலக்கல்ல.புரட்சியுடன் தோன்றிய புதுமைப் பிரான்சும் முன்னேற்றமடைந்த இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளும், பொதுவுடைமைத் தத்துவத்தில் வேரூன்றி வளர்ந்து பரந்து நிற்கும் ருஸ்சியா, சீனு போன்ற நாடுகளும், ஜனநாயக தத்துவத்தில் தழைத்து வளர்ந்து முன்னணியில் நிற்கும் பிரித்தானியா, அமெரிக்கா போன்றநாடுகளும், நவீனகாந்தீய தத்துவத்தில் விடுதலையடைந்து ஜனநாயக சோஷலிஸ அடிப்படையில் வளர்ந்துவரும் இந்தியாவும் முன்கூறிய விதிக்கு அமையவே வளர்ந்தன என்ருல் மிகையல்ல. காலத்துக்குக் காலம் காலபுருஷர்களாய், அவதார மூர்த்திகளாய் சில பெரியோர்கள் தோன்றி மக்களைத் தட்டிஎழுப்பி, நல்லவழிகாட்டி வாழ வைத்து சீரும் சிறப்புமிக்க மக்களாக, நாட்டவராக, இராச்சியங்களாகத் திகழச் செய்திருக்கின்ருர்கள். கைம்மாறு கருதாது காலததுக்கேற்ற யுகதருமத்தை உணர்ந்து நினைந்து, சிந்தித்துத் தலைமைபூண்டு நிஷ்காமியமாக வாழ்ந்து வழிகாட்டினுர்கள். அழியாப் பெரு வாழ்வு வாழ்பவர்களாக மக்கள் மனதில் என்றும் வாழ்கின்ருர்கள். அவர்கள் அடிக்கடி தோன்றியதாகவும் தெரியவில்லை. ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை தோன்ற வேண்டிய நேரங்களை அறிந்து தோன்றும் கலங்கரை விளககங்களாக. அவர்களைக் கொள்ளலாம். தேவார ஆசிரியர்களைச் சைவத் தமிழ் மக்கள் இன்றுந் தெய்வம்போல் போற்றுவதற்கு இதுவே காரணங்களாகும்.

பரதகண்டத்தில் வடபகுதி மக்கள் வாழ்க்கையும் தென்பகுதி மக்கள் வாழ்க்கையும் பொதுத்தன்மைகளுடன் பரவிப்பொலிந்த போதும், நிலப்பரப்பின் தன்மைக்கும், நில இயலின் தன்மைக்கும், நடுநின்று மலைத் தொடர்கள் பிரித்து நிற்கும் தன்மைக்கும் ஏற்றதாக காலத்துக்குக்காலம் வேறுபட்டு வந்ததைப் பார்க்கலாம். வடநாட்டில் வேதங்களில் விதிக்கப்பட்ட யாகங்கள் சடங்குகள் மக்கள் வாழ்க்கையை மயக்கத்துக்குட்படுத்திய போதுதான் புத்தம் சமணமாகிய சமயங்கள் அங்கு தலையெடுத்து வளர்ந்தன. சந்திர குப்தமௌரியனும், அசோகச்சக்கரவர்த்தியும் தமது கொள்கைகளைப் பரப்ப எண்ணியே குப்த - மௌரிய அசோகசக்கராதிபத்தியங்கள் ஸ்தாபித்தனர். அதைத் தொடர்ந்து சமணம் புத்தம் தென்னுட்டிலும் பரவலாயிற்று. சைவமும் தமிழும் வளர்த்த மூவேந்தர்களும் நிலைகுலைந்தனர் - சிலர் சமணம் புத்தம் வளர்க்கத் தலைப்பட்டனர் என்பதற்குத் தமிழ் இலக்கியப் பரப்பில் பல சான்றுகள் கிடைக்கின்றன. களப்பிரர் ஆட்சியும் தென்

சிவமயம்
திருச்சிற்றம்பலம்



## சுந்தரமூர்த்தி நாயனார்

இருமுதலை யடைந்துநரை முடியசைய
வாவணமொன் றேந்திப் போந்த
வொருமுதலை நவநீத புரியானை
வழக்கேற்றி யுரைத்த கோவை
யருமுதலை குழவிதர மறையொழுகுங்
கனிவாயா லமுதப் பாடற்
றருமுதலை யடிபணிந்து கருமுதலை
வேரினெடுந் தள்ளு வோமே.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



## மாணிக்கவாசக சுவாமிகள்

சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியுஞ் செம்முகிலை
மற்றெப்பி லாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே.

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

ளுட்டில் இருள் சூழச்செய்த தென்பது சரித்திர ஆசிரியர்கள் கண்டறிந்த உண்மையாகும். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று பன் நெடுங்காலமாகத் தமிழகத்தில் நிலை பெற்ற கடவுட்கொள்கை சிதையவும், பல் வேறுசமயக் கொள்கைகள் புகுந்து மக்கள் மனதை மாற்றி நிலைகுலையச் செய்ததால் தெய்வ வழிபாட்டில் சைவத்தமிழ் மக்களுக் கிருந்த உறுதியான நம்பிக்கை சிதைந்தது. மக்கள் உறுதி இழந்தவர்களாய், தம் பெருமைமறந்து, உரனிழந்து, உரிமை மறந்து வாழத்தலைப்பட்டனர். அந்நியமான புதுநாகரீக வசமாகி, அயலில் இருந்து புகுந் தவர்களுக்கு அஞ்சி அடிமைப்பட்டு அவல மெய்தினர். மூவேந்தர்கள் வலியிழந்தவர் களாய், சைவநெறி குன்றியதாய், தமிழ்மொழி தனது உயர் நிலையிலிருந்து இழிந்ததாய், தமிழர் நாகரீகமே அழிந்த நிலைமை ஒன்று உருவாகிப் பல ஆண்டுகள் கழிந்தன. கி. பி. மூன்றும் நூற்றுண்டுவரை உருவான பல்லவப் பேரரசும் புதுச்சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்து வந்தது கண்கூடு.

சைவத்தமிழ் ராச்சியம் உருவாகா விட்டால் சைவமும் தமிழும் அழிந்துவிடும் என்ற உணர்ச்சி பல பெரியோர்களிடம் இக்காலத் தில் உதித்தது போலும். சமணர்கள் புத்தர் கள் அரசியலிற் செல்வாக்குப் பெற்றிருந் தனர். அரசர்கள் மாத்திரமன்றி, மந்திரிகளும் மக்களும் விழித்தெழவேண்டியிருந்தது. தமிழர் களுடைய சமுதாயவாழ்க்கையைத் திருத்த வேண்டும், சமயவாழ்க்கையை உறுதிப்படுத்த வேண்டும், அரசியலிலும் செல்வாக்குப்பெற வேண்டும் என்று இக்காலத்தில் சிந்தித்த பெருமை திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகளுக்குண்டு. இருப தாம் நூற்றுண்டின காலப்போக்குக்கு ஏற்ப மகாத்மாகாந்திஜி மக்களைப் பண்படுத்த எத்தனையோ முறைகளைக் கையாண்டமை நாம் நன்கு அறிவோம். ஆளுடையபிள்ளை யாரும் அப்பர் சுவாமிகளும் அக்காலச் சைவத்தமிழ்ச் சமுதாய வாழ்க்கையை முன் னேற்ற அவ்வளவு வகைகளையும், ஏன் கூடிய முறைகளையும் கையாண்டார்கள் என்று பெருமையுடன் கூறவேண்டியவர் ளாயிருக்கின்றேம். மூன்று வயசுடபால கருக்கு இவ்வித சுதந்திரப் போராட்டத்தை ஆரம்பித்து வைக்கக்கூடிய சக்தியை இறை வனும் இறைவியும் ஞானப்பாலூட்டி வளர்த் தார்கள் என்று நமது சரித்திரங்கூறுவதை அறிந்து பெருமைப்படுகிறேம். சம்பந்த சுவாமி களும் அப்பர்சுவாமிகளும் அத்திவாரமிட்டுக் கட்டமுயன்ற சுதந்திரத்தமிழகத்தை, சைவத் தமிழகத்தைப் பூரணப்படுத்திச் சோழப் பெரு ராச்சியமாக மலரச்செய்தமைக்குச் சுந்தர மூர்த்தி சுவாமிகளுடைய பங்கு மிகவும் இன்றி யமையாததாயிருந்தது. அவர் வாழ்ந்த கால மும், சூழ்நிலைகளும் மிகவும் ஏற்றதாகவுமிருந் தமை,சைவத்தமிழ் மக்களின் தவம் என்றுதான் கூறவேண்டும். தமக்கு முன்தோன்றிய இரு பெருமக்களையும் போற்றிப்பணிந்து வாழ்த்தி வணங்கி அவர்களுடைய அடியொற்றி இலச் சியவாழ்வை உலகுக்கு எடுத்துக்காட்டி, மக் கள் வாழ்வை உயர்த்திவைத்த பெருமை நம்பியாரூரருக்குண்டு. அயல்நாட்டு நாகரீகத் தின் திமிர் அடங்கி, சைவத்தமிழ்மக்களும் அச்சம் நீங்கியவர்களாய் வீறுகொண்டு எழுந்து வாழத் தலைப்பட்ட சமயத்தில், அந்நிய ஆட்சிகளும் அழிந்து தமிழ்நாடெங்கும் பண்டைக்காலத்தைப் போலச் செந்தமிழும் சிவநெறியும தழைத்தோங்கிப் பல்லவ வேந் தர்களே சைவராகவும் தமிழராகவும் மாறி, மூவேந்தர்களும் பழமை போல வாழத்தொடங் கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் காலம் மிகவும் வாய்ப்பாக இருந்தது. அவருடைய இன்னிசைப் பாடல்கள் சைவத்தமிழ்ராச்சிய மாக அடுத்த நூற்றுண்டுகளில் மலரப் போகும் சோழப் பெருஞ்சக்கராதிபத்தியத் தின் திருப்பளளி எழுச்சியாக அமைந்தமை வியத்தற்குரியது.

'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க' வாழ்ந்து இறைவனை நோக்கி யும், திருத்தலங்களின் சிறப்புகளை வியந் தும, இறைவன பெருமைகளை யெல்லாம் மக்கள் உணர்ந்து திருத்தொண்டில் வாழ வேண்டிய திறமைகளையும், விரித்து விரித்து திருஞானசம்பந்தர் தேவாரங்கள் கூறுகின் றன. தாண்டக வேந்தராகிய அப்பர் சுவாமி களும் மக்களுக்கு வீரமூட்டக்கூடிய அறி வுரைகளையும் நன்மக்கள் வாழும் நெறிமுறை களையும், இந்த உலகநிலையாமையையும்,

திருவருளின் மேன்மையையும் பரதகண்டம் முழுவதும் சென்றும், உழவாரத்தொண்டு செய்தும் மக்கள் பின்பற்றக் கூடியனவைகளாக அமைத்துள்ளமை உன்னி யோசிக்கற்பாலது. கஷ்டங்கள் வந்த காலங்களில் இறைவனை நோக்கி மனம் உருகிப் பாடிய பாடல்கள் வாழ்க்கை அனுபவங்களாக மக்களுக்கு வழி காட்டிகளாக அமைந்துள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமக்குமுன் தோன்றிய பெரு மக்களைப் பின்பற்றியதுடன் மக்கள் எங்ஙனம் வாழவேண்டும், என்று நெறிவகுத்துக் கொடுக்கும் முறைமை, சமுதாயத்தை அவர்கள் அமைக்க முயன்ற திறமைக்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டாகும். ஏழாம் திருமுறையில் அமைந்த இந்த 'சுந்தரதத்துவம்' உற்று நோக்கற்பாலது. 'பித்தா' என்று அடியெடுத்த பெருமை பெற்ற சுந்தரர் இறைவனைத் தோழமை கொண்டு வாழ்வை அமைக்கும் முறையை நன்கு உணர்த்துகிறார். சுந்தரர் நல்ல கல்விமான்; பெயருக்கேற்ற ஆணழகன், என்றும் திருமணக் கோலத்தில் காட்சிதருபவராக இருப்பினும், வழுக்கிவீழினும் இறைவன திருவடியல்லால் வேறுகூற அறியாத பெருமையுடையவர். அவருடைய பெருமைகளையும் அவதார தத்துவத்தையும் உணர்ந்து போலும் சேக்கிழார் சுவாமிகள் அவரைப் பெரியபுராணக் கதாநாயகனாக ஆக்கியுள்ளார். பிராமணராகப் பிறந்தும் அரசரால் வளர்க்கப்பட்டவர். இறைவனால் ஒரு திருமணம் தடுக்கப்பட்டாலும் இருவர் பெண்களைக் காதலித்து அவர்கள் தம்மிலும் வேறுபட்ட குலத்தவரென்றுங் கருதாது அன்பையே பெரிதாகக் மதித்து இறைவன் திருவருள் துணைகொண்டு பெருவாழ்வு வாழ்ந்தவர். இறைவன் துணைகொண்டு மக்கள் உலக வாழ்க்கையில் ஈடுபடவேண்டும், அங்ஙனம், ஈடுபட்டு வாழ்வதே சைவத்தமிழ் வாழ்க்கை, மண்ணில் சகல செல்வங்களையும் பெற்று நல்வாழ்க்கை வாழ்வதற்கு இறைவன் திருவருள் துணையாகும் என்பனபோன்ற பெரும் பண்புகளைப் பல இடங்களில் காண்கின்றோம். 'அத்தா உனக்காளாய் இனி அல்லேன் என லாமே.' என்று சுந்தரர் கூறும் பகுதிகள் அவருடைய மன உறுதியைக் காட்டுகின்றது. 'இவரலாது இல்லையோ பிரானார்' என்று கூறுவதும், 'திருவாரூர் வாழ்ந்து போதீரே' என்று செல்லமாகச் சொல்வதும் 'அவை அட்டித்தரப்பணியே' எனக் கட்டளையிடுவதும் 'அருந்தண்வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே' என்று உரிமையோடு கேட்பதும் இறைவனைத் தோழமை பூண்ட அடியார்க்கு யாதும் ஓர் குறைவில்லை என்று சுந்தரர் பறைசாற்றுவது போலக் காட்சி தருகின்றன. 'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்' என்றும், 'வாளோடிய தடங்கண்ணியர் வலையில் அழுந்தாதே' எனவும், உலகநிலையாமையையும் வாழ்வினுள்ள சிக்கல்களையும் இறைவனிடம் கூறி அழவும், பரிந்து போற்றி அவனருள் வேண்டி வாழவும் சுந்தரதத்துவம் துணைசெய்கின்றது'.

தேவாரப் பதிகங்கள் தோறும் இயற்கை வர்ணனைகளையும்; புராண இதிகாசச் செய்திகளையும் மலியப் பெய்திருப்பதைச் சுந்தரர் தேவாரங்களில் காணலாம். திருக்கலய நல்லூர் திருப்பனையூர்; திருவாரூர் போன்ற ஸ்தலங்களில் அவருடைய நாட்டுப்பற்றைப் பரக்கக் காணலாம். 'அரும்பருகே சுரும்பருவ அறுபதும் பண்பாட அணிமயில்கள் நடமாடு மணிபொழில் சூழயலின் கரும்பருகே கருங்குவளை கண்வளருங் களனி கமலங்கள் முகமலரும் கலய நல்லூர் காணே', என்று கூறுவதிலுள்ள கற்பனை நயம், காட்சித் திறமை, நாட்டுப்பற்று உற்றுச் சிந்திக்கப் பாலது. முதல் நாலு வரிகளில் புராணக் கதைகளைக் கூறிக் கடைநாலு வரிகளிலும் தாய் நாட்டு இயற்கை அமைதிகளை ஊர் ஊராக எடுத்துக் கூறும் திறமை வெறும் இலக்கியம் என்று கூற முடியவில்லை. எந்த விதமான சைவத்தமிழ் நாட்டைச் சுந்தரர் கற்பனை செய்தாரென்று நாமும் உணரக்கூடியதா கிறது. இறைவன் பேரிலுள்ள அவருடைய அளவிடற்கரிய காதலை சுந்தரருடைய தேவாரங்களில் நிரம்பக் காணலாம். 'பொன்னார் மேனியனே' என்றும் கண்டார் காதலிக்கும் கணநாதன்' என்றும், 'என்னுள் குடியாக் கோயில் கொண்ட குளிர்வார் சடை எம் குழகா' என்றும் இறைவனுடைய சிறந்த காதலனாகத் திகழ்கின்றார். பலவிதமான உலக வாழ்க்கையிலீடுபட்டுக் கஷ்டப்பட்ட காலங்களிலெல்லாம் இறைவனிடம் பரிந்து வணங்கி முறையிட்டு மன்றாடி மன்னிப்புக் கேட்டு, தன் மனதிற்கு அறிவுரைகளை வழங்கி உலகியல் வாழ்க்கையை விளக்கும் முறைமை மக்கள் நல்வாழ்வு வாழப் பெரிதும் பயன்

கொடுக்கும் நல்லுரைகளாக மிளிர்கின்றன. இறைவனுடைய பெருமைகளைப் பண்டைய புராண இதிகாசங்களில் காட்டிய முறைமைகளை யெல்லாம் வைத்துப் பாமரமக்களும் விளங்கும் வண்ணம் தேவாரப் பதிகங்களை எமக்கு அளித்துள்ளார்கள். மக்கள் எங்ஙனம் வாழவேண்டும் என்ற லச்சியங்கொண்டு போலும் 'பொய்மையாளரைப் பாடாதே யெந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்' என்று அறிவுறுத்துகின்றார். இல்லறத்துறவியாகத் தாம் வாழ்ந்து காட்டி வழிகாட்டிய பெருமை சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குரியது. 'மானுடப் பிறவிவாழ்வு வாழ்வதோர்வாழ்வு வேண்டேன்' என்று வெறும் லௌகீக உலக வாழ்வை உலகாயிதத்தை வெறுத்துச் சைவசித்தாந்தப் பெருங்குடிவாழ்க்கையை வற்புறுத்திச் சைவப் பெருமக்களுக்கு வழிகாட்டினுர் என்றுதான் கூறவேண்டும். சைவத் தமிழ் மக்களுடைய அக்காலச் சரித்திரத்தைப் பாடிய பெருமையும் சிவனையே சாரும். திருத்தொண்டத் தொகையில்லாவிட்டால் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணம் பாடவும் சைவத்தமிழர்களின் சரித்திரம் கூறவும் இடர்ப்பட நேரிட்டிருக்கும் என்பது புனைந்துரையல்ல. தென்னுட்டிலுள்ள ஸ்தலங்களை மாத்திரமல்ல, ஈழநாட்டிலுள்ள ஸ்தலத்தையும் பாடி நமக்கெல்லாம் சைவத் திருநாட்டின் சிறப்புக்களை மிகவும் பற்றுதலுடன் பாடிய பாவலன் சுந்தரமூர்த்தி சுவாமிகளாகும்.

கடைச்சங்கத்தின்பின் நீண்ட இருட்காலம் தமிழ்நாட்டில் நிலவியது. சேர சோழ பாண்டியர் சிறை வைக்கப்பட்டுச் சைவமும் தமிழும் மிகவும் கஷ்டப்பட்ட காலம் மூன்று நூற்றுண்டுகளுக்குமேல் என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். இந்தியாவும் ஒரு புண்ணியநாடு. இருபதாம் நூற்றுண்டில் ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவை விடுதலையாக்க எத்தனை பெருந் தலைவர்களெல்லாம் தோன்றினர் என்பதைச் சமீபகாலச் சரித்திரங் கூறுகின்றது. அதுபோலத் தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சிக் காலத்தில் 63 நாயன்மார்கள், ஆழ்வார்கள், திருமூலர் காரைக்காலமையார், தேவார ஆசிரியர்கள், என ஒரு பெருந் திருக்கூட்டம் தோற்றியது. சைவ சமய குரவர்களாகிய நால்வரும் இதில் மிகவும் முக்கியமானவர்கள். சிலர் சமயச்சார்பில்லாத அரசைப்பற்றிப் பேசுவர். அப்படியான அரசு இந்தியா போன்ற தேசங்களுக்குப் பொருத்தமற்றது என்பது சுவாமி விவேகாநந்தர் போன்ற பெரியார்கள் கூற்று. "Religion and Religion alone is the life of India and when that goes India will die in spite of politics in spite of social reforms, in spite of Kubera's wealth poured upon the head of everyone of her children.' அந்த அடிப்படையில் சுந்தரர் தத்துவமாகிய 7-ம் திருமுறை, 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை'யைப் பின்பற்றி வாழும் நெறி காட்டிய முறைமையைச் சைவத்தமிழ்மக்கள் என்றும் சிந்திக்கவேண்டும். சமண பௌத்தச் செல்வாக்குகளை அழித்துத் தன்னம்பிக்கை கொண்ட சமூகத்தை அமைகக மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகக் கண்டு பாடி, ஆடிக் களித்து, மக்களை வீறுகொண்டெழுந்து நல்ல வாழ்க்கை வாழ வழிவகுத்த பெரியோர்கள் இருவரையும் பின்பற்றி இறைவன் திருவருள் வழி நின்று உலக வாழ்க்கை வாழ்ந்து காட்டிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் சைவத் தமிழ் மக்களுக்கு என்றும் வழிகாட்டியாவார். தமிழ் மொழியின் சிறப்புகள் எல்லாம் அதில் வந்த பக்திப் பாடல்களிலேயே தங்கியுள்ளதைப் பலரும் போற்றுகின்றனர். சைவ நாயன்மார்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் வெள்ளப்பெருக்குப் போலப் பக்திப் பெருக்கைத் தென்னுட்டில் ஓடவிட்டார்கள். மத பக்தியாகத் தொடங்கித் தேசபக்தியாகி மொழிப்பக்தியாகி, இன்னும் பல பக்திகளாக நல்வாழ்வுக்கு வழிகோலிய சைவத் திருமுறைகள் அன்றுபோல என்றும் தமிழ்மக்களுக்கு நல்ல வழிகாட்டக் கூடியன. சுந்தரதத்துவம் மூவருடைய தத்துவங்களையும் அடக்கிச் சைவத் தமிழ்மக்களுக்கு என்றும் வாழ வழி வகுத்த பெருமையுடையது என்பது நோக்கற்பாலது. சம்பந்தர் அப்பர் தேவாரங்களுக்கு உரைபோன்ற 7-ம் திருமுறை மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது.

*திருச்சிற்றம்பலம்*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# எட்டாந் திருமுறை
# மணிவாசகர் மணிவார்த்தை

பண்டிதர், வித்துவான் சி. சரவணமுத்து அவர்கள்
(விரிவுரையாளர், பட்டிருப்பு மகாவித்தியாலயம்)

உலகின்கண்ணுள்ள ஆன்மாக்களை உய்யக்கொள்ளும் நோக்கோடு சிவன் முத்தராகிய மெய்யடியார்களால் அருளிச்செய்யப்பட்டவை பன்னிரு திருமுறைகளாம். அவை உலகியற் புலவராற் செய்யப்பட்ட பாடல்கள் போலாது, இறைவனுண்ணின்றுணர்த்தப் பேய்க்கோட்பட்டார் போலச் சிவமயமாகி – தான்பணி நீத்துநின்ற செம்புலச் செல்வராலருளிச் செய்யப்பட்டமையின் அருளோத்துக்களெனச் சிறந்தெடுத் தோதப்படுவன. இப்பன்னிரு திருமுறைகளும் இறைவனுக்குச் சாத்தப்பட்ட மணியாரமாகும். அம்மணியாரத்துள் நடுநாயகமாய் நாயகமணியாய்த் திகழ்வது 8-ம் திருமுறையாகிய திருவருட் பாடல்களாகும். அவை கற்றோரைக் கசிந்துருகச்செய்யும் பெற்றியவாய், மணிவாசக ரடைந்த இன்பத்தை நாமும் எய்தச்செய்யும் இயல்பினூற் தலையாயின. உருக்குந் தன்மையிற் தலையாய தன்மைகண்டே "திருவாசகம்", "திருக்கோவை" எனத் "திரு" எனுமடை புணர்த்தோதினர் ஆன்றோர்.

இறைவனாலே அருளிச்செய்யப்பட்ட வேதம், ஆகமம் இரண்டுமே சைவசமயப் பிரமாண நூல்களுட் தலைமைப் பாடுடையன. அவை வடமொழியிலுள்ளன. சூத்திரமும் பாடியமும் போல ஒரு கருத்தையே விரிப்பன. அதேபோலத் திருக்கோவையாரும் திருவாசகமுந் தமிழிலே இயன்ற சூத்திரமும் பாடியமுமாகும். மற்றையடியார்கள் போலன்றி அடிகளார் இருவேறு நூல்களைச்செய்து வேதநூலொழுக்கமாய உலகியலும், அறிவனூற் பொருளாகிய ஆகமமுந் தெரியவைத்தனர். எனினும், சித்தாந்த சாஸ்திரங்கள்போல, வெறும் சமய இலக்கண நூல்களாயமையாமல், அவற்றுக்கு இலக்கியமியம்புகின்ற இனிய தோத்திரப் பாடல்களாயமைந்தன. இப்பெற்றியுணராதார் சிலர் திருக்கோவையினை வெறும் இலக்கியநூலென்றும், திருமுறை வரிசையில் எண்ணத்தக்கதோ என்றும் ஐயுறுவர். வாதவூரடிகளார் நூலருந்ததி நியாயம்பற்றி அறிவனூற்பொருளும் உலக நூல்வழக்கும் விரவத் தமிழ்வேதம் அருளிச் செய்தமைக்குக் காரணம், உயிர்களைச் சோபானமுறையாலே வழிப்படுத்தி மெய்ப் பொருளின் மெய்ம்மைதேற்றி வீடுபேறடையச்செய்ய வேண்டுமென்னும் பெருங் கருணையாகும்.

"கள்ளத்தலைவர் துயர்கருதித் தங் கருணைவெள்ளத்" தலைந்த மெய்யடியார் திருக்குறிப்பு இதுவாகும்.

அதிதீவிர சத்திநிபாதம் பெற்ற அடியவர்கள் அருளிச்செய்த அருட்பாடல்கள் அவர்தம் அநுபவ உணர்ச்சிகளைச் சந்தர்ப்பத்துக் கேற்ப வெளிப்படுத்துவனவாயின. இத்திருவாசகமும் அடிகளார் எவ்வெச் சந்தர்ப்பத்தில் எவ்வகைத் திருவருட் குறிப்பா லுந்தப்பட்டாரோ, அருட்கடலுள் மூழ்கித் திளைத்தாரோ அவ்வுணர்ச்சியுள் எம்மையும் அமிழ்த்திப் பேரின்ப அனுபவங்களைத் தரவல்லது. அடிகளார் முதன்முத லருளிச்செய்த பதிகம் சென்னிப்பத்தாகும். குருந்த மரநீழலின்கண் எழுந்தருளிய இறைவனர் "தன்னடிசூட்டி நாமம்சாத்தி யாசாரம் பூட்டிச்சின்மய வஞ்செழுத்தைச் செவிப்புலத்" துபதேசித்த பின்னர் "நம்மைப் பாடவேண்டும்" எனப் பணித்தருளினர். அச்சந்தர்ப்பத்திலே-தம்மை இறைவனர் திருவடித்தீக்கை செய்தருளி யாட்கொண்ட திறத்தினை "தேவதேவன் மெய்ச்சேவகன்" என்றெடுத்து "சேவடிக்கண் நம் சென்னி மன்னித் திகழுமே" என முடிவுபெறும் திவ்விய பாடல்களை எடுத்தோதினர். இக்கருத்தே திருவாசக உண்மையிலும் "தூயவருட்குரு பதத்தைச் சூட்டுதற்குப் பெற்ற வுயிர் சுகத்தை நோக்கிச் சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும் வியந்துரைத்தல் சென்னிப்பத்தே" எனச் சுட்டப்படுகின்றது. அதையடுத்து அச்சோப்பதிக மோதிய பெருமானர் மெய்ம்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் பெருக அடியார் குழாத்துடனே தம்மைக் கூட்டிய இறைவனருட் பெருமையை வியந்து "தன்னடியரிற் கூட்டிய அதிசயங்கண்டாமே" என முடியும் அதிசயப்பத்தைப் பாடியருளினர். இவ்வாறே அடிகளார் உணர்ச்சிவயத்தராய் ஆங்காங்கு உருகும் சந்தர்ப்பங்களிலெல்லாம் வெவ்வேறு பதிகங்களையும் பாடியருளினர். அதனலே பக்திபரவசத்தராய் - அருளை வேண்டி நின்ற சந்தர்ப்பங்களை விடுத்து வேறு கூறுதல் பொருந்தாதாம். மற்றும் சமயாசாரியார்களும் தம்மை அநுக்கிரகித்த இடங்கள்தோறும் அவ்வச் சந்தர்ப்பத்திலேயே பாடியருளியமை காண்க.

இவ்வாறே, "மாணிக்கவாசக—இங்கு நில்லென்று இயம்பி" மறைந்த சந்தர்ப்பத்திலே "மாறிநின்றென்னை" என்னும் கோயிற் திருப்பதிகத்தைப் பாடியருளினர். அதையடுத்துப் புணர்ச்சிப்பத்து, செத்திலாப்பத்து, பிரார்த்தனைப்பத்து, ஆசைப்பத்து, உயிருண்ணிப்பத்து, புலம்பல், வாழாப்பத்து, எண்ணப்பத்து எனும் பதிகங்களையருளிச் செய்தார். பின்னர்த் திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருச்சதகம் எனும்பதிகங்களை யருளிச்செய்தார்.

பின்னர் பாண்டியனது ஓலைகண்டதும், அதிகாலையிற் திருப்பெருந்துறைக்கோயிலுட் புகுந்து "போற்றியென் வாழ்முதலாகிய பொருளே" எனத் துயிலுணர்த்தித் திருப்பள்ளியெழுச்சி பாடியருளினர். குதிரைகள் வருவதன் முன்னர்ச் சிறைவைக்கப் பட்டு வருந்திய பெருமானர், குழைத்த பத்து, அருட்பத்து என்னுமிவற்றை அருளிச்செய்தார். "ஆதியே அடியேனுதரித் தழைத்தால் லதெந்துவே யென்றருளாயே", "முறையோவென்றழைத்தால் அருளா தொழிவதே" என்னும் திருவாசகப் பகுதி

களும் இக்கருத்துக்குச் சான்று பகர் கின்றன. பின்பு சொக்கனார் குதிரை களைச் சாரிவந்து காட்டியபோது மங் கையர் மனனழிந்து வருந்தக்கண்டு, "அன்னேயென்னும்" என மொழிந்த அன்னைப் பத்தினை யருளிச்செய்தார்.

பரிமேலழகியார் தந்த குதிரைக ளெல்லாம் நரியாகிக் கொடுமை யிழைத்தமை கேட்ட அரசன் மீண் டும் வாதவூரரைச் சிறையி விடுவித் தான். அப்பொழுது இறைவனை நினைந்து வருந்தி "இரும்புதரு மனத் தேனை" என்றெடுத்துத் திருவேசறவு அருளினார். இறைவனருள்வாக்கால் மந்திரியார் இயல்பறிந்த மன்னவனார் "நின்னை யடைந்ததுகொண்டிப்பேறு பெற்றேன்" என வாதவூரரை வணங்கி ஏத்தினர். அதுகேட்ட அடி களார் "நமச்சிவாய" என்றெடுத்துச் சிவபுராணம் ஓதியருளினார். ஏனைச் சமயாசாரியார்போல எல்லா அருட் பாடல்களையும் தலந்தோறும் பாடிச் சென்றா ரென்பதற்கு எவ்வாற்றானும் சரியான சான்று கிடைத்திலது. ஆத லாலே அடிகளார் சரிதைகூறும் வேப் பத்தூரர் திருவிளையாடல், பரஞ் சோதியார் திருவிளையாடல், திருவாத வூரர்புராணம் எனும் புறச்சான்றுக ளானும், திருவாசகமுந் திருக்கோ வையாரென்னும் அகச்சான்றுக ளானும் இப்பதிக வரலாறுகள் ஆராய் தற்பாலன. நம்பியார் திருவிளையா டலில் வரும் வரலாறுகள் பெரும் பாலும் பொருத்த முடையனவாய்க் காணப்படுகின்றன.

இத்திருமுறையுட் திருக்கோவை யாருக்கு உரையெழுதிய பேராசிரியர் அந்நூலகத்தமைந்த உலகநூற் பொ ருண்மரபினை இனிது விளக்கிச் செல் கின்றார். அதனறிவ னூற்பொருள் அவனருளே கண்ணாகக்கண் டின்புறற் பாலது. அவரவர் அறிவொளிக் கேற் பப் பொருளுரு மியல்பினை,

"ஆரணங்கா ணென்பரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங்கா ணென்பர் காமுகர் காமநன் னூலி தென்பர்
ஏரணங்கா ணென்பர் எண்ணர் எழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே"

என ஆன்றோர்போற்றுமாற்றா லுணர லாம். இந்நூலின்கண்ணே சுட்டப் படும் தலைவனை முத்தான்மாவாகவும், தலைவியைப் பேரின்பமாகவுங் காண் பார்க்கு இதன் நுண்பொரு ளொரு வாறு தெளிவாகும். பேரின்பத்தைத் தேடியடைபவனும், விழைந்திரந்து பெறுதற்குரியவனும் முத்தான்மாவே யாகலின் நுகர்பவனாகிய அவனைத் தலைவனெனக் கோடல் இழுக்காது. நுகர்வானும் நுகரப்படும் பொருளு மாகக் காணுமவதரத்தே அடிகளார் அந்தணர்முன்னே இதனைப் பாடியரு ளினார் போலும்.

மற்று, திருவாசகமோ "தைவமென் றுந் தைவமே" என்னுநிலையில் ஆண் டானும் அடிமையுமாக நின்ற அவ தரத்து ஆங்காங்கு அருளிச் செய் யப்பட்டதாதலறிக. இந்நூல் சிவ புராணமுதலாக எழுதப்பட்ட வடிவம் வேதிய வடிவங்கொண்ட வித்தக இறைவனார்க்குச் சுவாமிகள் எடுத் தியம்பிய நிரலே யமைந்ததாமெனக் கோடலே பொருத்தமுடைத்து. நூலின் முதனான்கு அகவல்களும்

நூற்குப் பாயிரம்போ லமைந்தன. சிவபுராணத்து முதற் பதினெட்டு அடிகளும் கடவுள் வணக்கமாக அமைகின்றன. "சிந்தை மகிழச் சிவ புராணந்தன்னை-முந்தைவினை முழுதும் ஓய உரைப்பன் யான்" என்பதனுற் செயப்படுபொருளும், அடுத்த சில அடிகளால் அவை யடக்கமுங் கூறி, "புல்லாகிப் பூடாய்" என்பது முத லாக இறைவனிடம் அடைக்கலம் புகு கின்ருர். இறுதிக்கண் அடைக்கலம் புகுந்தோ ரெய்தும்பயன் கூறுகின் ருர். ஆதலா லேரர் தற்சிறப்புப்பாயிர மாயமைந்த தென்பது மறைமலையடி களார் கருத்து. இக்கருத்தேபற்றி நூலுக்கு அடிகளாரிட்ட பெயர் சிவ புராணம் என்பதும், அன்னர் கருத் தாகும். எனினும் "மாசில் மணியின் மணிவார்த்தை பேசிப் பிறப்பறுத் தேன்" பண்டாய நான்மறை) என் றும், "வாக்குன் மணிவார்த்தைக் காக்கி" என்றும் மணிவாசகரே அரு ளிச் செய்கின்றமையால் "மணி வார்த்தை என்றே நூற்பெயரமைய வேண்டுமெனச் சான்ருேர் கொண் டனர் என எண்ணக்கிடக்கின்றது. 'மணிவார்த்தை' எனுந் தொடர்ப் பொருளேபடத் திருவாசக மெனச் சான்ருேர் பேரிட்டழைத்தனர் போ லும். இவ்வாறு கோடல் வழங்கி வரும் பெயர்க்கு இயைபுடைத் தாகின்றது. இச்சிவபுராணத்தின் கண் "சொல்லிய பாட்டின் பொருள்" மெய்ப்பொருளாகிய இறைவனே யாவான். அம்மெய்ப் பொருளாகிய இறைவனை மனத்தகத் துணர்ந்து, "அவனருளாலே அவன்ருள் வணங்கி" இந்நூலை ஓதுவார் சிவனடிக்கீழ்ச் செல்வராய்ச் சிவபுரத்தினுள்ளார்—அஃதாவது பேரின்பத்துள் அமிழ்ந் தின்புறுவர் என்பதே பொருளாம். இவ்வுண்மையினைப் "பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள—மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே, வாசக மதற்கு வாக்கியந்தூசணி மருங்குற் தோகையிடத்தவரே" எனும் ஆன் ருேர் அநுபவமொழியானு முணர்க.

இந்நூலின் உருக்குந் தன்மையினை யுணர்ந்தனுபவித்த சான்ருே ரொரு வர் "திருவாசகமிங்கொருகா லோதிற் கருங்கன் மனமுங் கரைந்துகக் கண் கள்-தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய—மெய்ம்மயிர்பொடிப்பவிதிர் விதிர்ப்பெய்தி அன்பராகுவர்" என்று அருளிச்செய்கின்ருர். இவ்வுருக்குந் தன்மை சிவமயமாகி நின்றனுபவித்த உணர்வுகளை அப்படியே வெளியிடுவ தனுலும், அவ்வுணர்வுக்கேற்ப யாப்ப மைதி வந்தியைந்தமையாலும் அமைந் ததாகும். ஓரொருகால் மணிவாசகர் "இருவருக்கும் காண்பரிய இறை வனுர், தம்மையுமோர் பொருளாக ஆண்டருளிய திருவருட் திறனை வியந்து இறும்பூதெய்துகின்ருர். இதனை "ஏழ்தல முருவ இடந்துபின் எய்த்து வழுத்தியுங் காணு மலரடி யிணைகள்" என்றும்,

"செங்கண் நெடுமாலும் சென்றிடந்துங்
காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு
மாட்கொண்டு"

என்றும்,

"இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு"

என்றும்,

"அரியொடு பிரமற் களவறி யாத வன்—பரிமாவின்மிசை பயின்ற வண்ணமும்" என்றும் ஆங்காங்கெல்லாம் வருமடிகளானறியலாம். தாம் இறைவனோடு ஓரோர்போது சிரிக்கச் சிரிக்கப் பேசுவார் என்பதை "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர்" என்றும்; "போவதோர்வகை யெனக்கருளாய் வந்துநின்னிணை யடிதந்தே என்றும், "இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே னெங்கெழுந்தருளுவதினியே" என்றும் வரும் பகுதிகளாலினிதுணரலாம். அடியார்களை வழிப்படுத்தும் போதெல்லாம் "போவோம் காலம் வந்ததுகாண் பொய்விட்டுடையான் கழல்புகவே" என்றும், "தாமே தமக்குச் சுற்றமுந் தாமே தமக்கு விதிவகையும், யாமார் எமதார் பாசமார் ...தொண்டரொடும் அவன்குறிப்பே குறிக்கொண்டு போமாறமையின்" என்றும் தம்மின் வேறாகாமல் எம்மையுமுடனழைக்கின்றார். இவ்வாறே திருவாசகத்தை எங்கே தொட்டாலும் அங்கே மனமுருகி நிற்கக் காண்போம். சுவாமிகள் தம்மனுபவத்தை அப்படியே உணர்ச்சி வயத்தராய் இறை அனுபவத்துள் அமிழ்ந்தி நின்று கூறுமியல்பாலே அம்மெய்ப்பாட்டையே யாமும் எய்தி இன்புறுகிறோம்; பத்தி பரவசத்தராகின்றோம். இதற்கிணையான பிறவிப்பிணியறுக்கும் மருந்து பிறிதில்லை.

இத்தகைய அருட்பாக்களையே பேசிப் பேசித்தாமின்புற்ற செய்தியினைச் சுவாமிகள்:

"பேசும் பொருளுக் கிலக்கியமாம் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை—பேசிய
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து"

என்றருளிச்செய்கின்றார். இதைவிடச் சான்று வேறு வேண்டியதில்லை. மனனம்பண்ணி அர்ச்சிப்பாரை வீடெய்துவிக்கு மித்திருவாசக மொவ்வொன்றையும் ஒவ்வோர் மந்திரமாக மதித்துச் சைவசமயிகள் யாவரும் விதிப்படி ஓதி மெய்ப்பத மடைவோமாக.

இத்திருமுறைகளின் பெருமை யுணராதார் சிலர் ஏனைப் பாடல்களையும் பெரிதாக மதித்து—அருட்பாடல்களினிடையே ஓதும் வரிசைமாறிச் சேர்த்தோதி யிடர்ப்படுகின்றனர். அன்னார் திருமுறைகளோடு ஏனைய பாடல்களைச் சமமாக மதித்தலும், இடையே பிறபாடல்களைச் சேர்த்துக் கொள்வதும், உண்மை நாயன்மாரை—சிவன் முத்தர்களாகிய ஞானவான்களை ஏனைய நெறிநின்றாரோ டொப்ப மதித்தல் உய்தியில் குற்றமா மென்றுணர்வார்களாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

திருச்சிற்றம்பலம்

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே. என். எம். மீருன் சாஹிப்

"தங்கப்பவுண் நகை மாளிகை"

தொலைபேசி: 585

கன்னாதிட்டி, — யாழ்ப்பாணம்.

*Visit*

# K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

*Dial:* 585

Kannathiddy, JAFFNA.

# CEYLON METAL LINE INDUSTRIES

*Manufacturers of Spares.*

★ Water Pump Gasket.

★ Lock Washers for Vehiclcs.

★ Electrical Materials.

★ "D" Bracket

Shackle Strap Lamp Braker
Thimble Fual Box

Bolt & nut etc.

## CEYLON METAL LINE INDUSTRIES

**Station Road, CHUNNAKAM.**

சினிமா இரசிகர்களின் அமோக ஆதரவையும் நன் மதிப்பையும் பெற்று வரும் **சினிமாஸ் நிறுவனத்தினர்** மக்கள் அபிலாஷைகளுக்கேற்ப 1969 ம் ஆண்டு அளிக்கவிருக்கும் சில வெற்றிச் சித்திரங்கள்.


- ★ நெஞ்சிருக்கும்வரை : சிவாஜி, கே. ஆர். விஜயா
- ★ தில்லானு மோகனும்பாள் : (கலர்) சிவாஜி, பத்மினி
- ★ சந்திரோதயம் : எம். ஜி; ஆர்., ஜெயலலிதா
- ★ திருவருட் செல்வர் : (கலர்) சிவாஜி, பத்மினி
- ★ மூன்றெழுத்து : (கலர்) ரவிசந்திரன்
- ★ ஆலயம் : சுந்தரராஜன், நாகேஸ்
- ★ ஊட்டிவரை உறவு : (கலர்) சிவாஜி, கே. ஆர். விஜயா.

## சினிமாஸ் நிறுவனம்

**117, புதுச் செட்டித்தெரு, : : கொழும்பு 13.**

த. பெ. இல. 932.

---



***CONTACT:***

# RAJAN IRON WORKS

FOR

- ★ Iron Gates, Window Grills
- ★ Compound Gates,
- ★ Collapsible Gates etc.

*Branch*:

**OPPOSITE POLICE STATION,**
**ANAIKODDAI.**

*Office*:

**8 STANLEY ROAD,**
**JAFFNA.**

## கண்ணு இனிப்பு

ரொபி வகைகள்

நவீன இயந்திரங்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

- ★ தரம், குணம் நிறைந்தவை
- ★ சுவை மிக்கவை.
- ★ பாலர் முதல் முதியோர் வரை விரும்புபவை.

### கண்ணு ரொபி

**Ceylon Confectionery Works.**
*Chunnakam,*
*Ceylon.*

*நிதான விலை! உயர்ந்த ரகம்!!*

சகல விதமான
மணிப்புரி
கூறைத் தினுசுகள்
இராமகிருஷ்ண நெசவு நிலையத்தில் தயாரிக்கப்பட்ட

கைத்தறி நெசவுத் துணிகள்
கோவில் பட்டுக்குடைகள்
குத்துவிளக்கு, குடம்

முதலியன யாவும்
மலிவான விலையில் கிடைக்குமிடம்

### செ. காசிப்பிள்ளை அன் கோ.

82, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி: பகவான் போன்: 506

கிளை: 74/8, சி. கே. பி. பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கலா! கலா! கலா!

என்பதே எங்கும் பேச்சு!
உங்களுக்குத் தெரியுமா?
கலாசோப் தாபனத்தாரின் புதிய தயாரிப்பு:

*அதன்*
★ தரத்தில்
★ மணத்தில்
★ குணத்தில்
★ வெண்மையில்

*யாவரும் விரும்புவது.*

## கலா சோப்

### கலா சோப் தொழிற்சாலை

பிரதான வீதி, சங்கானை.

## மைலன்ட்ஸ்

★ உயர்தர சாறிகள்
★ றெடிமேட் உடுப்புகள்
★ சேட்டிங், சூட்டிங்

விற்குமிடம்.

அன்பளிப்புப் பொருள்கள் அழகு சாதனங்கள்
எவர்சில்வர் சாமான்கள்
விற்குமிடம்.

### மைலன்ட்ஸ்

No. 115, 117, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# DYNAMOTOR WORKS

**INSTALLATION, REPAIRING, REWINDING**

*Prop :*

K. KANAPATHYPILLAI & SONS

- ★ *Dynamos,*
- ★ *Motors,*
- ★ *Transformers,*
- ★ *Alternators,*
- ★ *Fans,*
- ★ *E. Water Pumps,*

Batteries Charging & all kinds of Electrical Apparatus.

*13, Vellantheru* *JAFFNA.*

*Regd. No. 4954.*

# MISKIN

***FOR ANYTHING IN TAILORING***

— ALSO —

*DEALERS IN TEXTILES*

## MISKIN

**27, GRAND BAZAAR,**
**JAFFNA.**

★

பலவிதமான தையல்
வேலைகளுக்கும்
உன்னத பிடவைகளுக்கும்

## மிஸ்கின்

**27, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

# கிறவுண் பேக்கரி

# CROWN BAKERY

**Prop : G. H. C. Avis Appu**

High Class Bakers,
Confectioners, Caters &
Biscuits Manufacturers.

**81, KASTURIA ROAD,**
**JAFFNA.**

★ எல்லோரும் விரும்புவது !
★ எங்கும் கிடைப்பது !

## பி. வி. எம்.

# ஒரென்ஜ் பீடிகளே!

அளவு கடந்த காரமோ, அதிக
மென்மையோ இல்லாமல்
புகைத்தும் பூரண திருப்தி
தருவதும் புகைபிடிப்போரில்
பெரும்பாலோர் விரும்பும்
கணக்கான காரம் உடையது.

*தயாரிப்பாளர் :*

## *P. V. M.* ஒரென்ஜ் பீடிக் கம்பெனி

**நவாலி ரோட், :: ஆனைக்கோட்டை.**

*ஏகவிநியோகஸ்தர் :*

**கோடீஸ்வரன் ஸ்ரோர்ஸ்.**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# ஒன்பதாந் திருமுறை

திரு. சி. சிவகுருநாதன் எம். ஏ. அவர்கள்.

தஞ்சாவூரிலேயுள்ள பெரியகோயிலுக்குச் சென்று வீதி வலம்வரும் போது, மேற்குப்பிரகாரத்தில் ஒரு சிறுகோயில் இருப்பதைக் காணலாம். அங்கே சிறிது பொழுது நின்று கவனித்தால் அது கருவூர்ச்சித்தருடைய கோயில் என்பது புலனுகும். அங்கே கருவூராருக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனிச்சிறப்பு, (கருவூரிலுள்ள திருவானிலை என்னும் கோயிலை விட), வேறெங்கும் காண்டற்கரியது. இதற்குக் காரணம் என்ன?

பத்தாம் பதினோராம் நூற்றுண்டுகளில் சோழநாட்டைச் செங்கோல் செலுத்தி ஆட்சிசெய்து வந்த சோழப் பேரரசர்களுள்ளே மிகச் சிறந்தவனுகிய இராசராசன் தன்னுட்சிக் காலத்தின் முற்பகுதியில் ஈட்டிய பெரும் வெற்றியையும் புகழையும் எங்கும், என்றும் நிலவச் செய்யக் கருதி, நாட்டில் உண்டாகிய அமைதியை உபயோகித்து தன் கருத்தைக் கடவுள் திருப்பணியில் செலுத்த எண்ணங் கொண்டான், உயர்வு ஒப்பில்லாத தன் வெற்றித் திருவுக்குப் பொருத்தமாகத் தன் குலதெய்வமான பரமேஸ்வரனுக்கு ஈடும் எடுப்புமில்லாத ஒரு திருககோயிலை எடுக்கவேண்டுமென விரும்பினுன். 96 அடி சதுரமாயமைந்த அடித்தளத்தில் 216 அடி உயரம் தனிக்கற்களால் ஆகி உச்சியில் 80 தொன் நிறையுள்ள ஒரே கல்லாலான பிரமரந்திரத் தளமும் தூபியும் $12\frac{1}{2}$ அடி உயரமுள்ள கலசமுங் கொண்ட கோபுரத்தின் கீழுள்ள கர்ப்பக்கிருகத்தில், தன் வெற்றியின் பெருமைக்கும் கோபுரத்தின் உயரத்துக்கும் ஏற்ப 54 அடிச் சுற்றளவும் 6 அடி உயரமுங்கொண்ட ஆவுடையாரின் கண்ணே 12 அடி உயரமுள்ள தக்ஷிணமேருவிடங்கர் எனவும் இராசராசேச்சரமுடையான் எனவும் பெயர் கொண்டு "ஒரு லிங்கமும் தஞ்சைப் பிர்ஹதீஸ்வர லிங்கத்திற்கு ஒப்பில்லையே" என்று ஒரு பெரியார் பாடும் படி, இறைவனின் அருவுருவத் திருமேனி எழுந்தருளப்பட்டது.

இச் சிவலிங்கப் பிரதிஷ்டையோடு தான் கருவூர்ச்சித்தர் தொடர்புபட்டுப் பிரசித்தியடைந்துள்ளார். தான் விரும்பியபடி அடிமுதல் உச்சிவரை கருங்கல்லால அளவையை மாத்திரமல்ல அழகினையும் சிறப்பியல்பாகக் கொண்டு தனது 24-ம் வயதில் அதாவது 1003-ம் ஆண்டு தொடங்கி, 1009 ஆம் ஆண்டு நிறைவேற்றிய திருக் கோயிலிலே சிவலிங்கப்பெருமானை எழுந்தருளச்செய்து மகிழ விரும்பினுன் சிவபாதசேகரனுகிய இராசராசன். அதற்கென ஆதிசைவரைக் கொண்டு மருந்து சாத்திப் பந்தனம் செய்விக்கும்போது, மருந்து இளகிப் பந்தனமாகாமற் போனது கண்டு காவலன் கவலைக் கடலிலாழ்ந்தான். அவன் நிலைகண்டு இரங்கிய பல்லாயிரக் கணக்கான மக்களும் மனம் கலங்கினர்.

அப்பொழுது ஆகாயத்தில் ஓரசரீரி வாக்குப் பிறந்தது. "கருவூர்த்தேவர் ஈண்டு எழுந்தருளினல் நீ கருதிய கருமம் கைகூடும்". அப்போது அங்கே இருந்த போகநாதர் என்னும் யோகி யரின் கூற்றுப்படி ஒரு காக்கையின் காலில் சீட்டொன்றெழுதியனுப்ப, போகநாதரின் கட்டளைக்கிணங்கிக் கருவூர்த்தேவர் தஞ்சைக்கேகி மன்ன வனின் உள்ளக்கருத்தை நிறைவேற்ற முற்பட்டார். தமது அளவில்லாத தவ வலிமையைக் கொண்டு லிங்கத்தை ஆவுடையாருடன் செவ்வனே நிறுத்தி, மருந்தாகத் தம் வாய்த்தம் பலத்தை உமிழ்ந்துபயோகிக்க, சிவ லிங்கம் தம்பனமாயிற்று. மக்கள் பேரானந்தத்தில் மூழ்கி ஆடிப்பாடி ஞர்கள். பேருவகை யெய்திய மன்ன வன், தேவர்களும் வந்து கண்டு களிக்க ஆதிசைவரைக் கொண்டு கும்பாபிடேகம் செய்வித்தான்.

இங்ஙனம் எழுந்தருளிய தஞ்சைப் பெருவுடையானைக் கருவூர்த்தேவர் தன்னிரு கண்களுங் களிக்கக் கண் டார். பருத்துத் திரண்டுருண்டு மலை போன்று எழுந்து பிரகாசமாய் விளங் கும் இலிங்காகார வடிவும், திருநுதற் பொட்டழகும், வெண்டுகிலின் தூய் மையும், அவரது கண்ணையும் கருத் தையும் ஒருங்கே கவர்ந்தன. எடுத்த எடுப்பிலேயே தன் உணர்வனைத்தை யும் கவிழ்த்துக்கொட்டி விடுகின்றார்.

உலகெலாம் தொழவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
படுவரை ஞாங்கர் வெண்டிங்கள்
இலைகுலாம் பதணத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

என்பது கருவூராரின் திருவிசைப்பா ஒன்பதாந் திருப்பதிகத்தின் முதற் பாடலாகும்.

"உலகத்தவர்கள் வணங்கும்படி யாக வந்து எழுகின்ற கிரணங்களை யுடைய சூரியன் பல ஆயிரகோடி சேர்ந்தாற் போன்றிருக்கும் திருவுரு வம் (அவ்வளவு ஒளியுடையது எம் பெருமான் திருமேனி) எவ்வளவு அழகுள்ளதாயிருக்கின்றது!" இங் ஙனம் தன்னைப் பறிகொடுத்து அழ கினை வியந்ததேவர், மேருவிடங்கர் உறையும் பதியைக் கூறவும் விரும் பினர். "காவல்கள் பல நெருங்கிப் பல விதமான படைகள் அமைக்கப்பட்ட நீண்ட நிலைகளையுடைய பெரிய மலை போலும் உயர்ந்த மாடங்களின் பக் கங்களில் வெள்ளிய சந்திரன் தவழப் பெற்றிருப்பதும், தழைகள் விரவப் பெற்ற மதிலுள் மேடைகளையுடைய மதில் சூழ்ந்த இராசராசேச்சரம்" என்று வாயாரவாழ்த்தி மன்னர் மன்னனின் மாபெரும் திருப்பணியை யும் புகழ்ந்துரைத்தார்.

"நெற்றியிற் கண்என் கண்ணின் நின்றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலைக்கும்
பொற்றிருவடி யென்குடி முழுதாளப்
புகுந்தன போந்தன இல்லை"

என்று இறைவனின் நெற்றிக் கண் ணையும் திருவடிகளையும்,

"பன்னெடுங்காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்"

என்று, அன்பால் நினைவாரது உள் ளக் கமலத்தின்கண்ணே இறைவன் விரைந்து செல்லும் சிறப்பையு எளிமையையும்,

"தனியரெத்தனை யோராயிர வருமாந்
தன்மையரென் வயத்தினராம்
கனியரத் தருதீங்கரும்பர்"

என்று, லிங்கமும் ஆவுடையாரும் தமது தம்பலத்தினல் பொருந்தினதை

மனத்துட்கொண்டு போலும், இறைவன் தம் (கருவூரார்) வயத்தனகிய திருவருட் செயலையும் வியந்து போற்றினர்.

இராசராசனின் செல்வப்புதல்வனகிய இராசேந்திரன் கங்கைகொண்டு மீண்டபின், கங்கை கொண்ட சோழேச்சரம் எழுப்பிய காலையும், கருவூர்த்தேவர் உடனிருந்து ஆங்கெழுந்தருளியிருந்த இறைவன் தன் மனம் புகுந்த எளிமையை,

"அன்னமாய் விசும்பு பறந்த யன்றேட
வங்ஙனே பெரிய நீ சிறிய
என்னையான் விரும்பியென் மனம் புகுந்த
வெளிமையை யென்று நான் மறக்கேன்
முன்னமா லறியா வொருவனு மிருவா
முக்கணு நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே யமுதமே கங்கை
கொண்ட சோழேச் சரத்தானே"

என்று மனமுருகிப் போற்றிப் பரவியுள்ளார்.

கருவூர்த்தேவர் சிதம்பரம் முதலிய பத்துத் தலங்கள்மீது சிறந்த திருவிசைப்பா பாடியுள்ளார். எல்லாம் வல்ல இறைவனின் திருப்புகழை இனிய இசையிலமைத்துப் பாடுவனவாக அமைந்து தெய்வத்தன்மை பொருந்திவிளங்கும் இத்திருவிசைப்பா ஒன்பதாந் திருமுறையின் முற்பகுதியாகும். இவற்றுற் பாடப்பட்ட தலங்கள்: தஞ்சையிராச ராசேச்சரம், கங்கைகொண்டசோழேச்சரம், திருக்களந்தையாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர், மணியம்பலம், திருச்சாட்டியக்குடி, திருப்பூவணம், திருமுகத்தலை, திருவாரூர், திருவாவடுதுறை, திருவிடைக்கழி, திருவிடைமருதூர், திருவீழிமிழலை, திரைலோக்கிய சுந்தரம், தில்லை (சிதம்பரம்) என்பன.

திருமாளிகைத்தேவர் பாடிய,

"ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
யம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே."

என்னும் இசைப்பாடல், இறைவன் அடியார்களுக்கு விளக்காய், ஒப்பற்றவனய், உணர்வாய், மணிக்குன்ருய், தேனய், கனியாய், திருச்சிற்றம்பலத்தை ஆடும் அரங்காகக்கொண்டு தெய்வக்கூத்தாடி மகிழும் செவ்வியைப்போற்றி அருள்வேண்டிநிற்றல், படித்து இன்புறுதற்குரியது. இச்சிறப்பினுற்போலும் இது ஒன்பதாந் திருமுறையின் முதலாம் பாடலாக அமைந்து விளங்குகின்றது.

சேந்தனர் பாடிய,

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனவே,"

என்னும் திருவிசைப்பா, எம் தேவாலயங்களில் அதிகமாகப் பாடப்பட்டு வருகின்றது. இது நிறைந்த கருத்துக்களைக்கொண்டு, திருவீழிமிழலையிலுள்ள விண்ணிழிசெழுங் கோயிலிலே எழுந்தருளிய யோகநாயகனைக் காணத் தம் உள்ளம் குளிரக் கண்களும் குளிர்ந்தன என்று கூறுகின்றது.

சேந்தனர் ஒன்பதாந் திருமுறையின் பிற்பகுதியாகிய திருப்பல்லாண்டையும் பாடியிருக்கின்ருர். நமக்குப் பிறவித்துயரை நீக்கி, இன்னருள் பாலித்து, நம்மை ஆட்கொண்டு பே

ரின்பவாழ்வை நல்கும் இறைவன் பல்லாண்டு வாழ்க என மனமார வாழ்த்தி, நாம் அமைதி பெறுவோமாக, என்று கூறுவது திருப்பல்லாண்டு ஆகும். இதன்கண்; "அடியோமுக்கு அருள்புரிந்து பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே" என்றும், "ஆருயிர்மேற் பந்தம் பிரியப் பரிந்தவனே யென்று பல்லாண்டு கூறுதுமே" என்றும் சேந்தனார் கூறுவன இக்கருத்தைத் தெரிவிக்கின்றன.

எமக்கு இப்போ கிடைப்பது சேந்தனார் தில்லையில் அருளிய திருப்பல்லாண்டு ஒன்றுமாத்திரமே. பட்டினத்தடிகள் தாம் துறவுமேற்கொள்ளும் போது தம்மிடம் கணக்கராயிருந்த சேந்தனாரிடம், தம்முடைய செல்வ மனைத்தையும் ஏழை எளியவர்களுக்கு வழங்குக என்று கட்டளையிட, அவரும் அங்ஙனமே செய்ய, அவ்வூரரசன் அவரைச் சிறையிலிட்டான். பின்பு உண்மையையறிந்து அவருக்கு விடுதலை அளித்தான். பின்பு, சேந்தனார் தில்லையில் இருந்து வந்தார். அக்காலையில் மார்கழித் திருவாதிரை விழாக் காலத்தில் தேர்த்திருநாளன்று தேர் இடம்பெயராதாயிற்று. அப்போ சேந்தனார் இத்திருப்பல்லாண்டைப் பாடித் தேரினை அசைந்து செல்லச் செய்தார் என்ப.

"பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே."

என்ற திருப்பல்லாண்டுப் பாடல் மிகச்சிறந்ததாகக் கருதப்பட்டு, நம் திருக்கோவில்களிலே பெரிதும் பாடப்பட்டு வருகின்றது.

சைவத்திருமுறைகளை ஓதுமிடத்து, முடிவில் இத்திருப்பல்லாண்டை மங்கலக் காப்பாகப் பாடிமுடிக்கும் வழக்கம் பலகாலமாக இருந்துவந்தது. பின்பு, சைவஓதுவார்கள், திருப்பல்லாண்டுக்குப்பின் திருத்தொண்டர் புராணம் ஒதித் திருக்கடைக்காப்புச் செய்வாராயினர். இக்காலத்தில் புராணத்துக்குப் பின் திருப்புகழையும் ஓதித் திருக்கடைக்காப்புச் செய்யும் வழக்கம் பெருகியுள்ளது. ஆயினும். பஞ்சபுராண பாராயணத்தில் திருப்புகழ் இடம்பெறவில்லை.

திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் எம்முடைய சைவத் திருநெறித் தமிழ்ப்பாடல்களுள்ளே மிகச் சிறந்தனவாகும். திருக்கோயில்களிலே ஓதுவார்கள் இசையோடு பத்திததும்பப் பாடுதற்கேற்றநெறியில் அமைந்த பஞ்ச புராணத்திலே, பன்னிரு திருமுறைகளுள் முதலேழுக்கும் ஒரு தேவாரமே யமைய, ஒன்பதாந் திருமுறையோ, திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டு மெனத் தனித்தனியே யமைந்து, இரண்டு பாடல்கள்பெறும் சிறப்பு எய்தி, இனிது விளங்குகின்றது.

திருவிசைப்பா திருப்பல்லாண்டு ஆசிரியர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகட்குக் காலத்தால் பிந்தியவர்களானமையின், அவரது திருத்தொண்டத்தொகையில் பாராட்டப்படும் சிறப்படைந்திலரேனும், அன்னார் பாடிய பாடல்கள் தேவார திருவாசகங்களை அடுத்தும், திருப்புராணத்துக்கு முன்னும், இறைவன் திருச்சந்நிதியில் பாடத்தக்க ஒத்த சிறப்புடையன.

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



## திருமூல நாயனார்

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்
திருமந் திரமே சிவமாம் — அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றுமடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



சேக்கிழார்

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
யொல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பத்தாந் திருமுறை - திருமந்திரம்

அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே.

"ஒன்று தெரிந்தால் ஒன்று தெரியாது"

உலகத்தைக் காண்கின்றபோது உலகைப்படைத்த ஒரு பரம்பொருள் உண்டென மதிப்பதுவே அறிவுடைமை. குடத்தைக் கண்டவுடன் குடத்தை வனைந்தான் ஒருவன் இருக்கவேண்டும் என்று நினைக்கிறோமல்லவா? உலகம் காரியப்பாடுடையது. காரியம் கர்த்தா இன்றி நிகழாது. ஆகவே உலகிற்கு ஒரு கர்த்தன் வேண்டும். அவன் உலகைத் தோற்றுவித்தான் நிலைபெறச் செய்கின்றான், ஒடுக்குகின்றான்.

ஆனால், அக்கடவுள் கண்களுக்குத் தெரியவில்லையே என்று ஐயுறுவார் பலர். கட்புலனுக்குத் தோன்றாமையால் ஒரு பொருள் இல்லையென்று கூறுவது மடமை. மலரில் உள்ள மணம் கட்புலனுக்குத் தோன்றுகின்றதா? நெருப்பில் உள்ள சூடு கட்புலனுக்குத் தோன்றுகின்றதா? கடல் நீரில் உள்ள உப்புக் கட்புலனுக்குத் தோன்றுகின்றதா? சிந்தியுங்கள்.

'உடலுமுடல் உயிருநிலை பெறுதல்
பொருளென உலகம்
ஒருவிவரு மநுபவனல் சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிது பரவசமழிய விழிசெருகி
உணர்வுவிழி கொடுநியதி தமதூடு நாடுவதும்''



என்கின்றார் அருணகிரிநாத சுவாமிகள்.

உணர்வு விழியினால் உணரப்படுகின்ற பொருள் பரம்பொருள் என உணர்க. அந்த உணர்வு உலகநிலையினின்றும் நீங்கி, உலகைமறந்து, உள்ளத்தையும் மறந்து, உணர்வையும் மறந்து, உயிரையும் மறந்தபோது அரும்புகின்ற ஒன்று ஆகும். நூலறிவினால் வாலறிவனைக் காணஇயலாது.

"உருவெனவும் அருவெனவும் உளதெனவும்
இலதெனவும்
உழலுவன பரசமய கலையாரவார மற
உரையவிழ உணர்வவிழ வுளமவிழ உயிரவிழ
உளபடியை உணருமவர் அநுபூதி யானதுவும்"

என்று உணர்த்துகின்றார் அருணகிரிநாதர்.

கடவுள் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளோடு நீக்கமற மறைந்திருக்கின்றார். ஆனால், காண முடியவில்லை. பாலில் நெய் யிருக்கின்றது, தெரியவில்லை. கண்ணுக்குத் தெரியாமையால் பாலில் நெய்யில்லை யென்றால் நம்மை அறிவுள்ள உலகம் பழிக்குமன்றோ?

"... ... ... பாலில்படு நெய்போல்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்"

உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுகவாங்கிக் கடைய அவன் முன்னிற்பன்.

உலகிலேயே இறைவன் எங்கும் நிறைந்திருப்பானுயின் உலக மாயை அவனைப் பற்ருதோ? பற்ருது. எது போல்? கடலிற் பிறந்து கடல்நீரைக் குடித்துக் கடலிலேயே வாழ்கின்ற கடல்மீனில் உப்பு ஏறுவதில்லை. அது போல் உலகமெங்கும் நிறைந்திருக்கும் இறைவனை உலக மாயை பற்றுவதில்லை. பாம்பன்சுவாமிகள் இப்படி விளக்கியருளினுர்.

உலகக்காட்சி தெரிகின்றவரை கடவுட்காட்சி தெரியாது. கடவுட்காட்சி தெரியத்தலைப் பட்டார்க்கு உலகக் காட்சி தெரியாது.

"நாயைக் கண்டால் கல்லைக் காணும்; கல்லைக்கண்டால் நாயைக் காணும்" என்பது நம்நாட்டுப் பழமொழி. நாயை அடிக்கக் கல் தேடுவது என்றபொருளில் இப்பழமொழி எழவில்லை.

ஒரு சிற்பி ஒரு வீட்டின் முகப்பில் கருங்கல்லில் நாய்செய்து வைத்திருந்தான். புதிதாக வந்தஒருவர் தொடக்கத்தில் நாய் என்று கண்டு மயங்கி நின்ருர். அறிவு தெளிந்தபின் நாயன்று; கல் என்று கண்டார். நாய் என்று கண்டபோது கல் தெரியவில்லை. கல்லென்று கண்டபோது நாய் தெரியவில்லை. கல் நாயும் அது தான்; கல்லும் அதுதான். அதுபோல் உலகம் என்று கண்டால் கடவுள் தெரிவதில்லை. கடவுள் என்று கண்டால் உலகம் தெரிவதில்லை.

மரத்திஞல் யானைசெய்து வைத்திருக்கின்றது. கோயிலுக்கு வந்த ஒருவர் அதனைப் பார்க்கின்ருர். யானை என்று பார்க்கின்ருர்; மரம் தோன்றுவதில்லை. மரம் என்று பார்க்கின்ருர்; அப்போது யானை தோன்றுவதில்லை. அதுபோல் மரம் என்று பார்த்தால் பார் தெரிவதில்லை. பார் என்று பார்த்தால் மரம் தெரிவதில்லை.

"மரத்தை மறைத்தது ... ... ...
... ... ... ...பார் முதல் பூதமே ... ... ...
(தொடக்கத்தில் எழுதியுள்ளது)

என்பது திருமந்திரம்.

முன்னுளில் யாழ்ப்பாணத்திற்குக் கப்பலில் போவார்கள். அப்போ இந்தியக்கரை தெரிகின்றவரை யாழ்ப்பாணக்கரை தெரியாது. யாழ்ப்பாணக்கரை தெரிந்த அந்தக் கணத்தில் இந்தியக்கரை தெரியாது. இருகரைகளும் தெரிகின்ற அளவில் ஒரு நடு இடங் கிடையாது. இனி இருகரைகளும் தெரியாத அளவிலும் ஒரு நடு இடங் கிடையாது. ஒரு கரை தெரிந்தால் மறுகரை தெரியாது அதுபோல் பொருட்காட்சி தெரிகின்றவரை அருட்காட்சி தெரியாது. அருட்காட்சி தெரிந்தபோது பொருட்காட்சி தெரியாது.

"சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"

என்ற இந்த அநுபவத்தை அருணகிரிநாதர் பெற்ருர். இந்த அநுபவத்தை எனக்குக் காட்டு என்று வேண்டுகின்ருர் சிதம்பரசுவாமிகள்.

'சும்மா இரு எனநீ சொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த—எம்மான்
அருணகிரி நாதன் அநுபவம் நாயேற்குக்
கருணைமொழி போரூரா காட்டு.''
—திருப்போரூர்ச் சந்நிதி முறை.

என்கிற அநுபூதி அநுபவத் திருவாக்கை உன்னுக.

"... ... எல்லாம் ஒருங்கிய நிர்க்குணம் பூண்டு
என்னை மறந்திருந்தேன் இறந்தேவிட்டது
இவ்வுடம்பே"

என்னும் கந்தரலங்காரக் கனியமுதப் பாடலாலும் அறிக. ஆ! ஆ!! எத்தனைப் பெரிய அநுபவம்.

குறியைக் குறியாது குறித்து அறியும் நெறியில் விளைவது அந்த அநுபவம். அந்த அநுபவம் ஏற்பட்ட போது செறிவற்று; உலகோடு உரை சிந்தையும் அற்று; அறிவு அற்று; அறியாமையும் அற்றுவிடும்.

வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியாக விளங்கும்நிலை அது.

அங்கே காண்பானுமில்லை; காட்சியுமில்லை; காட்சிப் பொருளுமில்லை; ஞாதுரு, ஞான, ஞேயங்களாகிய முப்பாழுங் கடந்த முழுநிலை அது. முப்பாழுங் கடந்து அப்பாலே சென்ற அநுபவஞானிகள் இப்பார்வையின்றி வேறு எப்பார்வையுமின்றி நற்பார்வையாகிய அருட்பார்வையிலேயே நிலைத்து நிற்பர். அவர்கட்குக் காலமில்லை; கர்மமில்லை; பாவமில்லை; புண்ணியமில்லை; சுகமில்லை; துக்கமில்லை. தானில்லை; பிறரில்லை; அங்கே ஒன்றுமேயில்லை. எங்கும் ஒரே அருள். மருள் இல்லை. சுத்தவெளி; நித்த ஒளி. அந்த ஒளி மயமாய் நின்று அறிவுக் குன்றின்மேல் நிற்பர். அங்கே கீழ் மேலில்லை. மலைமீது ஏறிப்பார்ப் பார்க்கு உயர்வு தாழ்வு தெரியாது அல்லவா?

ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்து உச்சியின்மேல் அளியில் விளைந்த தோர் ஆனந்தத் தேனைப் பருகி உருகி இன்பம் பெருகி ஏகாந்தமாக நிற்பர். அங்கே மோகாந்த காரமில்லை. தேகாந்தந் தீர்வர். வாக்கும் மனமும் கடந்தநிலையில் போக்கும் வரவும் புணர்ப்பும் இல்லாத பெருநிலை அந்தநிலை என வுணர்க. அத்திருநிலையில் விளையும் ஆனந்தத்தை ஆராலும் உரைக்க ஒண்ணுது.

''போக்கும் வரவும் இரவும் பகலும்
புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்
இல்லாதொன்று வந்து வந்து
தாக்கும் மனோலயந் தானே தரும்
எனத் தன்வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்லொணுதிந்த
ஆனந்தமே.''

என்ற அற்புதச் செந்தமிழ்த் திருவாக்காலும் உணர்க.

ஆகவே அந்த அருட் காட்சியைக் காணவிழைவார் சிறிது சிறிதாக உலகக் காட்சியை மறப்பதற்கு முயலுதல் வேண்டும். இது மறைந்தபோது அருட்காட்சி நிறையும். அது தியாகுதி முயற்சியினுல் கைகூடும். பாடுபடாத மக்கள் அதனை எங்ஙனம் பெறுவர்? ''நான்படும் பாடு............பஞ்சுதான் படுமோ?''

என்பார் இராமலிங்கர்.

அருளால் கண்டால் அனைத்தும் ஒன்ருகத் தெரியும். அறிவால் கண்டால் காண்கின்ற தன்னையுந் தெரியாது.

''அருளால் எவையும் பார் என்றுன் — அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்ட தல்லால் — கண்ட
என்னையுங் கண்டிலன் என்னேடி தோழி''

என்கின்ருர் தாயுமானவர்.

எனவே உலகையும் தன்னையும் மறந்து உணர்வுநிலை நின்று அவனருளே கண்ணுகக்கொண்டு கண்டு அயரா இன்பநிலையில் அருளாரமுதம் உண்டு ஆன்மாக்கள் பரிபூரணம் பெறுக.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பதினோராந் திருமுறை

பண்டிதர் **மு. கந்தையா பி. ஏ.** அவர்கள்
(விரிவுரையாளர் மானிப்பாய் இந்துக்கல்லூரி)

சிவபரம்பொருள் நிர்க்குணன், நிராலம் பன், நிரதிசயன் என்றெல்லாம் பேசப்படு கின்றார். இந்த நிரதிசயனுகிய சிவபரம் பொருளே அவர் பாகத்தி லொடுங்கும் நிரதிசயையாகிய உமாதேவிப் பிராட்டியுடன் பேரதிசயமுற்ற நிகழ்ச்சியொன்று ஒருநாள் திருக்கைலாசத்திலே இடம்பெறுகின்றது. எள்ளளவுந் தசைப்பற்றில்லாத எலும்புக் கூடான மானிடப் பெண்ணுருவமொன்று மலையின்மேல் தலையாலே நடந்து மேலேறி வருகின்றது. அப்பனும் அம்மையும் மேலி ருந்து அவ்வதிசயத்தைப் பார்த்து ரசிக்கின் றார்கள். சிவபெருமான் அதிசயப்பட்டும் அதிசயப்படாதவர் போல அமர்ந்திருக்கின் றார். அவர் இயல்பே அதுதானே. உமாதேவி யாருக்கோ அதிசயந் தாங்கவில்லை. வாயிற் கைவைத்துக் கொண்டார். அன்பென்னே! என்று அந்த அதிசயப்புதிரை அப்படியே அலர்த்திவிட்டார். அருமையான, ஒரு ஓரங்க நாடகம் இடம் பெறுகின்றது.

உமை: தலையினால் நடந்திங்கேறும், எம் பெருமான், ஓர் என்பின் யாக்கை; அன்பென்னே!"

சிவம்' வருமிவள் நம்மைப் பேணும் அம்மை காண் உமையே, மற்றிப் பெருமை சேர் வடிவும் வேண்டிப் பெற்றனள். [இதற்கிடையில் தலையினால் நடந்த அம்மை அவர்களுடையதாள் நிழலை அணுகிவிட்டார்.]

சிவம்: அம்மையே......!

அம்மை: அப்பா... ... ... [தாளில் வீழ்கின்றார்]

சிவம்: [எதிர்நோக்கி] நம்பால் இங்கு வேண்டுவதென்?

அம்மை: இறவாத இன்ப அன்பு வேண்டும். [பின்னும் வேண்டுகின்றார்] பிற வாமை வேண்டும். மீண்டும் பிறப் புண்டேல் நினை என்றும் மற வாமை வேண்டும் இன்னும் வேண டும். நான் மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க வேணடும்.

சிவம்: நீடுவார் பழனமூதூர் நிலவிய ஆலங் காட்டில் ஆடுமா நடமும் நீகண் டா னந்தஞ் சேர்ந்தெப் போதும். பாடு வாய் நம்மை.

திருக்கைலாச அரங்கிலே அன்று திருவ ருள் திரையிட்ட அன்புச்சுவை நாடகம் இது. சேக்கிழார் என்ற தெய்வச் சிற்பியின் சொல் லோவியமாகிய இந்த அன்புப் புதையல் பெரியபுராணத்தின இருதய குகையிலே பொதிந்து வைககப்பட்டுள்ளது.

குறித்த நாடகத்தின் கருவாயும் உருவா யும்; பண்பாயும் பயனுயும் பரிமளிப்பது ஒன்றே ஒன்றுதான். அந்த 'இறவாத இன்ப அன்பு' என்பதே அது. ஞானசாஸ்திர பரி பாஷையிலே அது **அயரா அன்பு** என்று பெயர் பெறும்.

உபதேசமுறையானே பதிபசுபாச இயல்பு களை ஐயந்திரிபற உணர்ந்து, பிறப்பை நீக் கும் வேட்கைகொண்டு, சிவபுண்ணியங்களை நிரம்பச்செய்து. இருவினையொப்பும் சத்தி நிபாதமும் கைவரப்பெற்றுத் திருவருளாகிய

குருவினுபகாரத்தால் மலநீக்கம் பெற்றுச் சிவோகம்பாவனை செய்து, ஏகனுகி இறைபணி நிற்கும் ஒரு நிலையைத் தன் ஜன்ம பரம் பரையிலே பெற்றுவருகின்ற ஒரு சீவனிடத் திலே வந்து லயிக்கின்ற ஒரு அன்புநிலை இதுவாகும். மேற்போந்த இப்பேறுகளையெல் லாம் வரன்முறையாக உணர்த்திவருஞ் சிவ ஞானபோதத்திலே இந்த அயரா அன்புநிலை பதினெராஞ் சூத்திரத்தில் விளக்கப்படுகின் றது. இந்த அயரா அன்புநிலையைத் தன் உயிர்ப்பொருளாகக் கொண்ட திருமுறை இலக்கியம் எதுவோ அதுவும் பதினொராந் திருமுறை என்றே பெயர்பெற்றுள்ளது. சிவ ஞானபோதமாகிய சாஸ்திர நூலோடு திரு முறைகளாகிய தோத்திரங்கள் உள்ளும் புற மும் ஒத்தியலுகின்ற அருமை பெருமைகளை இதிலே வைத்து உற்றுணர்ந்து நயக்கலாம் நாம்.

இந்த அயரா அன்பினுல் அரன்கழல் செல்லும் திறம் ஆத்மீக வளர்ச்சியின் உயர் பண்பாம். இவ்வுயர்பண்பினைத் தமது உயி ரோட்டமாகக் கொண்டு மிளிரும் நாற்பது பிரபந்தங்கள் இப்பதினோராந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. திருவாலவாயுடையார் பாணபத்திரன் பொருட்டாகச் சேரமான் பெருமாள் நாயனுருக்கு எழுதியனுப்பிய திருமுகப்பாசுரம் இந்நூலுக்கு ஏற்புடைக் காப்புப்போல அமைந்து தெய்வீக சோபை தருகின்றது. ஏனைய பிரபந்தங்கள் முறையே காரைக்காலம்மையார்; ஐயடிகள் காடவர் கோன் நாயனுர், சேரமான் பெருமாள் நாய னுர், நக்கீரதேவ நாயனுர், பட்டணத்துப் பிள்ளையார் முதலிய பக்குவஞானிகள் பதி னொருவரின் பாடல்களாக உள்ளன. சிவபெரு மான், விநாயகர், சிவசுப்பிரமணியர், கண் ணப்பர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், (பொதுமையில்) திருத்தொண்டர் என்போர் இப்பிரபந்தங்களின் நாயகர்களாகக்கொள்ளப் பட்டுள்ளனர். முன்னுள்ள திருமுறைகளனைத் தும் சிவபெருமானெருவரையே தோத்திரப் பொருளாகக் கொண்டிருப்ப இத்திருமுறை விநாயகர், சுப்பிரமணியர், திருத்தொண்டர் கள் என்போரையும் தோத்திரப்பொருளாகக் கொண்டுமிளிர்வது இதன்கண் ஓர் புது அம்சமாகும். முன்னைய திருமுறைகளிற் பதிக அமைப்பே பேணப்பட்டிருக்க இதன்கண் இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான் மணிமாலை, அந்தாதி, ஆற்றுப்படை உலா என்ற பிரபந்த இனங்கள் இடம்பெற்றுள் ளன. தமிழ் யாப்புவகைகளில் அகவற்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை என்பன தாராளமாக இதன்கண் வந்துள்ளன. சங்க இலக்கியங்களிற் காணப்படுவனபோன்ற இயற்கைக் கற்பனைகள் இதன்கண் மிளிரும் தெய்விகப் பேரெழிலுக்கு மெருகூட்டி நிற் கின்றன. சங்கத் தமிழிலக்கியத்துக்கு ஞானச் சுவையூட்டிவைத்ததுபோல் மிளிரும் இந்நூற் பாடல்கள் ஒவ்வொன்றும் படிக்கப் படிக்கச் சுவைப்பன; இன்பம் பயப்பன. தனித்தனி ஒவ்வொருவர் பாடல்களையே கொண்டனவாக மற்றெல்லாத் திருமுறைகளும் விளங்க இது பலவேறு பிரபந்தவடிவிற் பலர் பாடல்களைக் கொண்ட ஒரு தொகைநூலாகித் திகழ்வது இதற்குரிய மற்றோர் தனிச்சிறப்பாகும்.

பொதுவில் இத்திருமுறைப் பிரபந்தங்கள் தெய்விக பரத்துவ உண்மைகள் அனைத்தும் விரவகொண்டிருப்பனவாயினும், சிறப்பாக, மேற்கூறப்பட்ட, அயரா அன்பின் அரன் கழல் செல்லும் பண்பு ஒவ்வோர் பிரபந்தத் திலும் உள்ளோட்டமாக நின்றொளிருஞ் சிறப்பு உற்றுணர்ந்து நயக்கற்பாலது. இன் னும், ஒவ்வோர் பிரபந்தத்தினும் ஆங்காங்கு ஒவ்வோர் பாடலில் அல்லது பாடற்பகுதியில் அப்பண்பு தத்ரூபமாக நின்றொளிர்தல் உணர் வுக்கு இன்பம் பயக்கும்.

காரைக்காலம்மையாரருளிய அற்புதத்திரு வந்தாதியில் ஒருபாடல் வருமாறு:-

> *''இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்*
> *படரும் நெறிபணியா ரேனும் — சுடருருவில்*
> *என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானுர்க்கு*
> *அன்பறா தென்னெஞ் சவர்க்கு''*

எம்மானுர் என்னிடரை நீக்காதிருக்கினும் காரியமில்லை. எனக்காக இரங்காதொழியினுங் காரியமில்லை. எனக்குச் செல்கதி காட்டா

விடினுங் காரியமில்லை. என்னெஞ்சு அவர்க்கு அன்பறுது என்கின்றார் அம்மையார். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்பதில் அப்பர்சுவாமிகளின் உள்ளத்திட்பம் புலனுவதுபோல **'என்கடன் அன்புசெய்திருப்பதே,** என்ற அம்மையாரின் உள்ளத்திட்பம் இதன்கண் புலனுகின்றது. பலன்கண்டு அன்புசெய்தல் சர்வசாதாரணம். அதன்கண் பெருமைப்படுதற் கேதுவில்லை. பலனில்லா விட்டாலும் அன்பு செய்வதன்றே பிரமாதம். அதுவன்றே பெருமைப்படுதற்குரியது. ஒரு வேளை ஏதேனும் ஒரு திருவிளையாடலைக் கருதிச் சிவபெருமான் இவருக்கு அருள்புரியத் தயங்கி யிருந்திருப்பாராயின் எப்படித்தான் வெட்கித் தலைகுனிந்திருப்பாரோ நாமறியோம்; இந்த அன்பின் அழுத்தத்தின்முன்!

இதை அடுத்து நம் கவனத்துக்குரியது நக்கீரதேவநாயனுர் காட்டுகின்ற அயரா அன்பின் அரன்கழல் செல்லும் நிலையாகும். இந்நாயனுருடைய பிரபந்தங்களுள் முதன்மை வாய்ந்தது திருமுருகாற்றுப்படை; 'அரன் கழல் செல்லுதல்' என்ற தொடரமைதிக்கு இயைய ஆற்றுப்படை என்றே தன் பெயர் தோற்றிக்கொண்டு பொருளமைதியிலும் ஒத்தியல்வது; சங்கத்தமிழிலக்கிய உருவமைப்புடனே சமய இலக்கியமுமாகி இந்நூலுக்கு இருதயமாய்ப் பொருந்துவது. இவ்வாசிரியர் தமக்குக் குருவாய் வாய்த்த சிவசுப்பிரமணியப்பெருமானுரின் திருவருள் விலாசங்களை யெல்லாம் ஆற்றுப்படை அமைதியிலே போற்றிக் களிக்கின்றார். ஆற்றுப்படை யென்பது வள்ளலொருவனிடம் பரிசில்பெற்று வந்தானொருவன் மற்றொருவனுக்கு அவன் பெரும் பேரில் புகழை எடுத்துக் கூறி அவனிடஞ் சென்று பரிசில் பெறுமாறு வழிப்படுத்தும் பொருளது. இங்கும் சிவசுப்பிரமணியப்பெருமானின் ஞானப்பெருஞ் செல்வத்தை இனிது பெற்ற. பரிசிலனுகும் இந்த நாயனுர் அது பெறற்பொருட்டு மற்றொருவனை ஆற்றுப்படுத்தும் திறம் இதம் பயப்பதாகும். இதன் பூர்வபாகத்தில், நாயனர், குறித்த பரிசிலனை விளித்துக் கூறும்பகுதி இதன் உயிர்நிலையாய்த் திகழ்கின்றது.

''... ... ... ... ... செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின்........''

என்பது அது. [நலம் - சிவபுண்ணியம். புலம் - மெய்ஞ்ஞானம்] செவ்வேற்சேயெனப் படுஞ் சிவசுப்பிரமணிப்பெருமானது செம்பொருளாகுந் திருவடியைத் தலைக்கூடும் தலைமைமிக்க உள்ளத்துடனே, முன்புசெய்து கொண்ட சிவபுண்ணியங்கள் தம் பலன் தர விருக்குங் கொள்கையினுல் உனக்கு லபிக்கக் கூடியதாகிய மெய்ஞ்ஞானப் பெருவாழ்வை விரும்பி மேற்கொள்ளுதற்கு ஏதுவாகிய செலவினை நீ விரும்பினுயாயின் என்பது இப்பகுதியின் பொருளாகும். இங்குச் செம்மலுள்ளம் என்றது அயரா அன்பின் வசப்பட்ட உள்ளமெனவே கொள்ளுதும். என்னை? சேவடி படர்தற்கு அது எவ்வாற்றானும் இன்றியமையாதாகலின்.

இது இங்ஙனமாகப் பட்டணத்துப் பிள்ளையார் பிரபந்தங்களுள் ஒன்றுகிய கோயில் நான்மணிமாலையில் ஒருபகுதி நம் விசேட கவனத்துக்குரியது. இந்த அயரா அன்புநிலை கைவருதற்கு ஐன்மபரம்பரையால் வந்த பக்குவமுதிர்ச்சி இன்றியமையாத தென்பதற்கு அகச்சான்றுகத் திகழ்வது அது,

''... ... ... ... அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம்; மொழிவதுஉன்
ஐந்தெழுத் தவைபெஞ் சிந்தையிற் கிடத்தி
நனவேபோல நாள்தொறும் பழகிக்
கனவிலும் நவிற்றுங் காதலேம்விளை கெடக்
கேட்பதும் நின்பெருங் கீர்த்தி ... ... ...''

எந்தையே! நீ காலாலிட்டதைத் தலையாலேற்றுச்செய்து பரம்பரை பரம்பரையாக அந்நெறியின் வழுவாது வந்த மரபினன் நான். உன் ஐந்தெழுத்தை மனதிலும் இருத்தி

நாவிலும் உச்சரித்து நனவில் மட்டுமன்றிக் கனவிலும் அப்பியசித்துவரும் காதலுடையேன் நான். நான் கேட்பதெல்லாம் நின் புகழல்லது பிறிதில்லை என்பது இதன் பொருள். இதன்கண், 'வழிவழி வந்த மரபினம்' என்பதில் 'குடிகுடி யீசற் காட்செய்மின்' என்பதிற் றோன்றுங் கெம்பீரந் தொனிக்கின்றமை காண்க.

இங்ஙனந் தமக்குத தகுதிப்பாடுண்மையைத தம்வாக்காற் புலப்படுத்த பின்னரே அடிகள் தாம் அயரா அன்பின் அரன்கழல் செல்லுமாற்றைப் பிறிதோர் வாய்பாட்டாற் புலப்படுத்தருள்கின்றார்.

''அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம்விரித்து: நெரய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்த என்சிந்தைப்
பாழறை யுனக்குப் பள்ளி யறையாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ச் பூந்தவிசு
எந்தைநீ இருக்க விட்டனன்''

என்பது அது.

ஏனையர் பாடியருளியவாக இந்நூலில் வரும் ஏனைய பிரபந்தங்களும் இவைபோல்வனவே என்பதனை ஆய்ந்து படித்தறிந் தின்புறுதல் நம்கடனாகும்.

*திருச்சிற்றம்பலம்*

★ இன்பமெல்லாம் இனிது பொங்க
★ இல்லம் சிறக்க இத் தைப்பூச நாளில்
★ அன்பை யெல்லாம் வாழ்த்தாக்கி
★ எல்லோருக்கும் நல்லாசி இயம்புகின்றோம்

**N. K. MYLVAGANAM & Co.,**

**68, Fourth Cross Street,**

**COLOMBO-11.**

*Phone No.* **22250**

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரு திருமுறை பாடியவர் திருநாமம்

அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள்

இராகம்: மோகனம். தாளம்; ஆதி.

பல்லவி

தேவாதி தேவனுக்குப் பாவாரம் சூடினவர்
திருநாமம் சொல்லித் துதிப்போம் — அன்பொடு. (தே)

அநுபல்லவி

நாவாரப் போற்றி நலம்பெறும் ஞானப்
பூவாரம் தேடிடும் பொன்னடி யார்படிக்க. (தே)

## சரணங்கள்

[1]ஞானசம் பந்தர்[2]திரு நாவர சர் [3]சுந்தரர்
தேன்[4]மணி வாசகர் [5]திருமாளி கைத் தேவர்
கானமிகு சேந்தனுர் கருவூர்த் தேவர் உயர்
வானுறை பூந்துருத்தி நம்பிகண் டராதித்தர். (தே) 1.

அருளும்வே ணுட்டடிகள் திருவாலி யமுதனுர்
புருடோத் தமநம்பி சேதி ராயர் [6]மூலர்
[7]திருவால வாயுடையார் ஸ்ரீகாரைக் காலம்மை
கருணைஐ யடிகள் காடவர் கோனென. (தே) 2.

சேர மான்பெருமாள் நாயனுர் நக்கீரர்
செல்வக்கல் லாடர்கபிலர் பரணரி ளம்பெருமான்
சீரதி ராவடிகள் திருப்பட்டி னத்தடிகள்
திகழ்நம்பி யாண்டார்நம்பி [8]சேக்கிழார் சுவாமிஎன. (தே) 3.

1. 1-ம், 2-ம், 3-ம் திருமுறை பாடியவர்
2. 4-ம், 5-ம், 6-ம் ,, ,,
3. 7-ம் திருமுறை ,,
4. 8-ம் ,, ,,
5. 9-ம் திருமுறைபாடிய ஒன்பதின்மர்.
6. 10-ம் திருமுறைபாடிய திருமூலர்.
7. 11-ம் ,, பன்னிருவர்.
8. 12-ம் ,, சேக்கிழார்.

திருச்சிற்றம்பலம்

பாலக்காடு

# ஆர். வி. ஜி.

பீடிகளை உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்கள்:

**வ. வ. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ்**

47, பீச் ரோட்,

யாழ்ப்பாணம்.

போன்: 230

தந்தி: ஆர்விஜி.

*With best Compliments from*

**Quality Beedi Manufacturers**

# SEYADU BEEDI

## SEYADU BEEDI DEPOT,

**192, Old Moor Street,**

**COLOMBO - 12.**

*Tel:* **32301.**

---

*With the best Compliments of*

# S. Sinnathurai & Bro.,

39, K .K. S. ROAD,

*JAFFNA.*

*Tele. Phone:* 284.

*Distributors:* **B. C. C. PRODUCTS & KALKI BEEDI,**

Phone: 7204

# A. S. ARASARATNAM & Co.

Govt. Electrical Contractors.

*11, Stanley Road,* **JAFFNA.**

Electrical Accessories & Appliances.

Motors & Pumps-all Types-all Sizes-for all Duties.

***DAGENITE BATTERIES***

## ஏ. எஸ். அரசரட்ணம் அன் கம்பனி

*மின்சார ஒப்பந்தக்காரர்*

11, ஸ்ரான்லி வீதி, **யாழ்ப்பாணம்.**

---

# நவீன விவசாயம்

iii, iv, v, vi-ம் வகுப்புகளுக்கு உத்தியோகப் பற்றை நீக்கி, விவசாயத்தில் ஈடுபட்டு உணவுற்பத்தியைப் பெருக்கி நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற காரணத்தால், கல்வித்திணைக்களம் சகல பாடசாலைகளிலும் விவசாயம் போதிக்கப்படவேண்டுமென்று பணித்துள்ளது. இளஞ் சிறார்களுக்குச் சிறுவயதிலிருந்து விவசாயப் பயிற்சி அளிப்பதற்காக 'நவீன விவசாயம்' என்ற பெயரில் இந்நூல் வரிசையை வெளியிட்டுள்ளோம், மாணவர் உலகம் இந்நூலைப் படித்துப் பயன் பெறுமாறு வேண்டுகிறோம்.

✶

## கலைவாணி புத்தக நிலையம்

**யாழ்ப்பாணம்.** **கண்டி.**

*தொலைபேசி:* **221** *தொலைபேசி:* **7196**

உங்களுடைய எல்லாத் தேவைகளுக்கும்

★ கட்டிட தளவாடங்கள்
★ எஸ்டேட்டுகளுக்குத் தேவையான
★ செனட்டரி வெயர்கள்
★ பெயின்டுகள், டூல்ஸ் அமைப்புகள்
★ பி. வி. சி. பைப்புகள்
★ 'சய்' போல்ட்ஸ்கள் நட்டுகள்
★ 'அன்டன்' ஸ்லோட்டட் அங்கல்ஸ்
★ 'ஹன்சய' ஜி. ஐ. வாளிகள்
★ 'குருண்டிக்' ரேடியோக்கள்
★ 'மினர்வா' தையல் மெஷின்கள்

விஜயம் செய்யுங்கள்

**சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்**

**கொழும்பு - 10**

---

உரையுடன் வெளிவருகின்றன:

★ 1. சிவராத்திரி புராணம்
திரு. ம. குமாரசூரியப்பிள்ளை அவர்கள்
இயற்றிய உரையுடன்

★ 2. கந்தபுராணம் - உற்பத்திகாண்டம்

★ 3. கந்தபுராணம் - அசுரகாண்டம்

★ 4. கந்தபுராணம் - மகேந்திரகாண்டம்
சிவஸ்ரீ. ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்கள்
இயற்றிய உரையுடன்,

விற்பனையாளர்:

**ஸ்ரீ காந்தா அச்சகம் புத்தகசாலை**

213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# பன்னிரண்டாந் திருமுறை
# பெரியபுராணம்

வித்துவான். பொன். கந்தசாமி அவர்கள்

பெரியபுராண மென்பது தொண்டரின் பெருமையை அறிவுறுத்துவது. சிவமணமும் தமிழ்மணமும் கமழப் பெற்ற செந்தமிழ்க்காப்பியங்களுட் தலைசிறந்தது. பக்திச் சுவை நிரம்பியது.

### தோற்றமும் வளர்ச்சியும் :

அநபாய சோழனுக்கு அமைச்சராகச் சேக்கிழார் விளங்கினர். தமிழுக்குத் தொண்டு செய்த சமணர் சிவநெறியையும் திருத்தொண்டர்களையும் இகழ்ந்து புதுக் கொள்கைகளைப் புகுத்த நினைந்து காப்பியங்களை இயற்றி மக்களை மகிழச்செய்தனர், அவற்றுட் சிறந்தது சீவக சிந்தாமணியாகும். இந்நூலை அநபாயன் பாராட்டிக் கேட்டுவந்தான், மன்னனைத் திருத்த எண்ணிய சேக்கிழார் இம்மைக்கும் மறுமைக்கும் உதவாத சீவகன் கதையிலும் சிவகதையே உறுதியானது என்றார். மன்னன் அதைப்பற்றி வினவ, திருத்தொண்டர் தொகையையும் திருத்தொண்டர் திருவந்தாதியையும் நாயன்மார் வரலாற்றையும் விளக்கிக் கூறினர். மன்னன் வியப்படைந்து பாராட்டிக் காப்பியமாகப் பாடியருள வேண்டினர். உடனே சேக்கிழார் தில்லை சென்று இறைவனிடம் தம் கருத்தை விண்ணப்பித்தார். தில்லைப்பெருமான் ''உலகெலாம்'' என்று அடியெடுத்துக் கொடுக்க அதனையே முதலாகக் கொண்டு திருத்தொண்டர் புராணத்தைப்பாடினர். இதன் சிறப்பையறிந்த சபையோரும் மன்னனும் பாராட்டிப் பன்னிரண்டாம் திருமுறையாகக் கொண்டனர்.

### பெரியபுராணம் ஒருபெருங் காப்பியம் :

பெருங் காப்பிய இலக்கணம் முழுவதும் இதன் கண் உண்டு, 63 தனியடியாரதும் 9 தொகை யடியாரதும் வரலாறு கூறப்படுவதால் தன்னிகரில்லாத் தலைவன்ஒருவனையே உடைத்தாதல் எங்ஙனமெனில், ஏனைய நாயன்மார் வரலாறு இடையிடையே கூறப்படினும் நுணுகி ஆராய்ந்தால் சுந்தரர் வரலாறே மணிமாலையுட் பொற்கயிறு போற் புகுந்து நிற்றல் புலனாகும்.

திருமலைச் சருக்கத்தில் உபமன்னியு முனிவர் கூற்றினல் சுந்தரர் வரலாறுகூறத் தொடங்குகின்றது. பரவை சங்கிலியிடம் காதல் இன்பம் கலந்தணைவாய் என்று இறைவன் கட்டளையிட்டதும், ''மையல்மானுடமாய் மயங்கும் வழித் தடுத்தாட் கொள்வேசம்'' என்றதும், சுந்தரர் அரனை வேண்டி வரம் பெற்றதும், பின் நூலின் இடையிடையே கலிக்காமநாயனர் கழிறிற் றறிவார் புராணங்களில் ஆரூரர் வரலாறு கூறப்பட்டு இறுதி வெள்ளானைச் சருக்கத்

தில் கயிலையடைந்தமையும் கூறப்பட்டுள்ளது. எனவே காப்பியத் தலைவர் சுந்தரரேயாகும். ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரரைப் பாடிச் செல்வதால் இது தொடர் நிலைச் செய்யுள் என்பதாம். நாற்பொருட் பயன் நிறைந்துள்ளது. இன்னும் அகம் புறமென்றும் 14 திணை வழக்கும், வருண ஆச்சிரம ஒழுக்கமும், சரியை, கிரியை, யோக ஞான வழக்கும், குருலிங்க சங்கம வழிபாட்டு முறையும், உடைமையால் அருள்மொழி நிரம்பிய இக்காப்பியத்தை இயற்றிய சேக்கிழாருக்கு அருண்மொழித் தேவரென்று பெயரிட்டனர். இதன் இருகாண்டமும் 13 சருக்கங்களாகவும் 4253 திருவிருத்தங்களாகவும் பொலிகின்றன.

நாயன்மார் மரபுகள் :-

மாமறையோர் மரபில் வந்துதித்தோர் பன்னிருவர், சிவமறையோர் மரபில் வந்துதித்தோர் இருவர், வேதியர் மரபில் வந்துதித்தோர் ஒருவர்; மன்னர் மரபில் வந்துதித்தோர் அறுவர். குறுநில மன்னர் மரபில் வந்துதித்தோர் ஐவர், வணிகர் மரபில் வந்துதித்தோர் ஐவர், வேளாண் மரபில் வந்துதித்தோர் மூவர், இடையர் மரபில் வந்துதித்தோர் இருவர், சாலியர், குயவர், பரதவர் முதலிய மரபில் வந்தவர் ஒவ்வொருவர். மரபு குறித்துணரமுடியாதவர் பதின்மூவர், இன்னும் பேர் ஊர் தெரியாத நாயன்மார்களும் உண்டு. இவை புராண வரலாற்றுள் வெளிப்படையாக மிளிர்கின்றன. அமைதியாகப் பற்றற்ற நிலையின் பல்வேறு மனநிலையுடையவர்களும் அடியார்களாக விளங்கினுர்கள். இவர்களில் கோயிற் ரெண்டு செய்தாரும் தலயாத்திரை செய்தாரும் மனதில் கோயில் கட்டினவரும் செயற்கரிய செய்தவரும் சோதனைக்காளானவரும் ஆகப்பலவழிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றனர்.

அடியார்கள் (சிவனருட்செல்வர்) அடியார் என்பது ஒன்றுக்கு அடிமைப்பட்டவர் என்பது. நான், எனது என்ற அகங்கார மமகார மற்றவர்களே அடியார்கள். ஐந்தன்புலத்தை அட்டவர்களே அடியார்கள். சுருங்கக் கூறின் மன அடக்க முடையவர்கள் என்பதாம்.

> ''கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
> ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
> கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
> வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்''

என்று கூறுகின்றார் சேக்கிழார் பெருமான். இவர்கள் ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாகக் கருதுவார்கள். இறைவனை வணங்குவதன்றி மோட்சத்தையும் விரும்பாதவர்கள் என்பதாம். இவர்கள் பத்திவழியைக் கடைப்பிடித்து ஒழுகினர்.

பல்கலைப் புலமை:

ஏனைய புராணங்களுக்கில்லாத பல்கலைப்புலமை பெரிதும் புலப்படுகின்றது. தேவாரத்துக்கு உரைகாணுதற்குச் சிறந்த துணையாகவுள்ளது. சைவ சித்தாந்தக் கருத்துக்களையும், இசைக் கலையையும், நடனக்கலையையும் வான நூற்கலையையும் மருத்துவக்கலையையும் புராணம் முழுதும் பரந்துபடக் காணலாம்.

செய்யுட் சிறப்பு :

எளிமையும் இனிமையும் உடையன:-
''எம்பிரான் யான் செயும் பணி''

> ''யான் வைத்த மண்ணோடன்றிப் பொன்னினுல்
> அமைத்துத்தந்தாய் ஆயினும் கொள்ளேன்''

(திருநீலகண்டநாயனுர் புரா.)

சொல்லும் பொருளும் நனிசிறத்தல்

சையமால்வரை பயில் தலைமை சான்றது
செய்ய பூமகட்கு நற்செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்தது நாடொறும்
உய்யவே சுரந்தளித்தூட்டு நீரது.

இச்செய்யுளில் காவிரியைப் பெண்ணுகச்சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

**பக்தியுடன் கலந்த கற்பனைத்திறன்**

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும்
தாழ்வடமும் நாயகன்சேவடி தைவருஞ் சிந்தையும்
நைந்துருகிப் பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்
பதிகச்செஞ்சொல் மேயசெவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

இதில் திருநாவுக்கரசர் நடந்து வரும் காட்சியை வர்ணிக்கின்ருர். அவர் நேரடியாகக் காணவில்லை. ஆனல் தம்பாடல் மூலம் இன்றுவாழ்கின்ற நாம்கூட அவரைக் காணுமாறு செய்து விடுகின்ருர். சேக்கிழார் பெருமான் கவிதை வன்மை பெருங்காப்பிய ஆசிரியர் எவர்க்கும் இளைக்காதவை. ஏனைய ஆசிரியர் செய்த செயலைக்காட்டிலும் அரிய செயல் ஒன்றை அவர் செய்தார். அதுதான் பக்திச் சுவைப்பிழம்பாக நிற்கும் காப்பியத்தை பாடியதாகும். இன்னும் ஒன்பான் சுவையும் மிளிர்கின்றது. கம்பன் மேற்கொண்ட கதை அவன் விரும்பிய பல்சுவைகளுக்கும் இடம் தந்து நிற்பது போல திருத்தொண்டர்கள் வரலாறுகள் பக்தியாகிய சுவைசிறக்க வசதி அளிக்கின்றன.

காப்பியத்தலைவராகிய சுந்தரமூர்த்திகள் "அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்" என்று கூறுவதில் சிறப்புண்டு. உலகின் பல்வேறு பாகங்களிலும் எல்லாக்காலத்திலும் பெரியோர்கள் அடியார்கள் வாழ்ந்தார்கள். வாழுவார்கள் என்பதை அவர் அறிந்தே கூறியுள்ளார்.

ஈசன் பணியையே மேற்கொண்ட சிவனருட் செல்வர்களாகிய திருத்தொண்டர் புராணத்தைப் பக்தியோடு பாராயாணம் செய்பவர்களுக்கு திருவடிப்பேறு கிடைத்தல் ஒருதலையாம். சைவஉலக மக்களின் உள்ளத்தில் குடிகொண்ட இறைவன் எந்நாட்டில் உள்ளவர்க்கும் இறைவனுக விளங்கப் பெரிய புராணத்தை வருங் காலச் சைவ உலகம் போற்ற வேண்டும்.

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்

திருச்சிற்றம்பலம்

"ஆண்டவன் இருக்கும்போது நமக்கென்ன குறை
அவனில்லாமல் போனாலல்லவா கவலை
அவன் சந்தோஷமாக இருக்கும்போது
நம்மிடம் பேரன்பு வைத்திருக்கும்போது
நமக்கென்ன குறை"?

— விபுலானந்தர்

# லோட்டஸ் ஸ்ரோர்ஸ்

157, 2-ம் குறுக்குத்தெரு,

கொழும்பு - 11

## நல்வாழ்த்து

★ அன்பும் அருளும் பெற வேண்டும்
★ அறமும் அமைதியும் பெற வேண்டும்
★ அகமும் சுகமும் பெற வேண்டும்
★ தீங்கும் தீமையும் அற வேண்டும்
★ துன்பமும் தொல்லேயும் அற வேண்டும்
★ துயரமும் கொடுமையும் அற வேண்டும்
★ உலகம் உய்தி பெற வேண்டும்,

# V. MANICKAM & BRO.

No. 34, 4th Cross Street,
COLOMBO — 11.

Tel : 23408

*Grams:* **THAVAYOGA**

★ இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே !
★ இயந்திரங்கள் வகுத்திடு வீரே !
★ கரும்பைச் சாறு பிழிந்திடு வீரே !
★ கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே !
★ அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
★ ஆயிரந் தொழில் செய்திடு வீரே !
★ பெரும்புகழ் நுமக் கேயிசைக் கின்றேன்
★ பிரமதேவன் கலேயிங்கு நீரே !

— பாரதியார்

# ASOKAN MILLS,

*RICE MILLERS,*

**VAVUNIYA.**

பீடி புகைப்போருக்கு ஒரு அரிய வாய்ப்பு!

# யானை பீடி ஸ்பெஷல்

★

குணம் மணம் நிறைந்தது

**ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே**

*இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும்*
*தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக்கொண்டதும்*

**ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே**

எல்லோரும் விரும்பிப் புகைப்பதும்
எங்கும் சுலபமாகக் கிடைக்கக்கூடியதும்

**ஸ்பெஷல் யானை பீடி ஒன்றே**

உள்நாட்டுக் கைத்தொழிலுக்கு
ஊக்கமும் ஆக்கமும் அளியுங்கள்!

*தயாரிப்பாளரும் விநியோகஸ்தர்களும்.*

# யானை பீடி கம்பெனி,

130, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13

தொலைபேசி:- **31651**

உங்கள் அன்றாட உணவுக்கேற்ற

**அரிசியை வாங்கிவிட்டீர்களா?**

வாங்குங்கள்!

'கற்கள் இல்லாத அரிசியைப் பார்த்து''

★ கற்கள் இல்லாதவை!

★ நல்ல மணமுள்ளவை!

★ நல்ல சுவையுள்ளவை!

★ நல்ல பதமுள்ளவை!

★ தின்னத் தின்னத் தெவிட்டாதவை!

★ அறுசுவைக்கேற்ற அற்புதமான அரிசி

## யாழ் அரிசியே!

நவநாகரீகத்துக்கேற்ற முறையில், நம் நாட்டில், விளைவிக்கப்படும், நல்ல ரக நெல்லைக் கொண்டு; பலவருட அனுபவமுள்ள தொழிலாளர்களால், திறம்பட

**யாழ் அரிசி ஆலையில் தயாரிக்கப்பட்ட**

# யாழ் அரிசியை

ஒருமுறை வாங்கி உண்டுபாருங்கள்.

*வாங்குங்கள் யாழ் அரிசியை!*

*சாப்பிடுங்கள் யாழ் அரிசியை!!*

**என்றும் மறவாதீர்கள், யாழ் அரிசியை.**

எம்மிடம், கல் இல்லாத யாழ் பச்சை அரிசியும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

# யாழ் அரிசி ஆலை

இணுவில் ரோட், மானிப்பாய்.

தொலைபேசி 553

விநியோகஸ்தர்கள்

## வே. க. இ. துரைரத்தினம் அன் பிறதர்ஸ்

91/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 7142

## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| 1. திருக்குறட் கலன்டர் No. I ஸ்பெஷல் | 2-75 |
| 2. திருக்குறட் கலன்டர் No. I *(சிவப்பு)* | 2-40 |
| 3. சித்திரகலா பஞ்சாங்க சித்திரக் கலன்டர் | 2-25 |
| 4. குருபரன் பஞ்சாங்க சித்திரக் கலன்டர் | 1-65 |
| 5. ஆபிஸ் கலன்டர் *(தேதி பிளக் 5" × 7¼" அளவுள்ளது)* | 5-95 |
| 6. நன்மொழிக் கலன்டர் No. 2 | 1-60 |
| 7. மாதக் கலன்டர் *(பஞ்சாங்கக் கலன்டர்)* | -95 |
| 8. சிங்கள கலன்டர் *(No. I கலன்டர் அளவுள்ளது)* | 2-25 |
| 9. ரேபின் கலன்டர் *(பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்)* | 6-25 |
| 10. தகரப் படம் *(அழகிய பல மாதிரிகள்)* | 2-75 |
| 11. No. I பிளாஸ்ரிக் தமிழ் டயறி *(பிளாஸ்ரிக் கவருடன்)* | 3-15 |
| 12. No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி " | 2-40 |
| 13. No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி " | 4-25 |
| 14. No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 2-40 |
| 15. No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-95 |
| 16. No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' *(பக்கம் 1 நாள்)* | 4-05 |
| 17. No. 7 " " " 'B' *(பக்கம் 2 நாள்)* | 3-50 |
| 18. No. 8 அலுவலக (Official) டயறி *(பிளாஸ்ரிக் கவர்)* | 3-75 |
| 19. ஜெம் பிளாஸ்ரிக் டயறி | 2-00 |
| 20. No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி *(பேர்ஸ் சகிதம்-With Purse)* | 4-60 |
| 21. No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் 'B' டயறி *(பக்கம் 2 நாள்)* | 4-50 |
| 22. ஜெம் பேர்ஸ் டயறி | 3-00 |
| 23. வலற் டயறி *(Wallet Diary-மிகச் சிறந்தது)* | 6-95 |
| 24. பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 6-50 |
| 25. பிளாஸ்ரிக் சிங்கள பாக்கெட் டயறி | 2-40 |
| 26. சிங்கள பஞ்சாங்க 'A' டயறி (Plastic) | 4-05 |
| 27. " " 'B' டயறி " | 3-50 |
| 28. Executive Plastic Diary 7¼" × 9¾" | 7-25 |
| 29. Executive Table Pad | 7-50 |
| 30. Telephone Index | 3-50 |

இன்னும் பல உண்டு. மற்றும் விபரங்களுக்கு

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை லிமிட்டெட்**

*161, செட்டியார்தெரு, கொழும்பு-11.*

போன்: 29345



**Printed at Sri Lanka Printing Works 234, K. K. S. Road, Jaffna. 1969**
**Cover Printed at Meihandan Press Colombo.**